# ளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு

**2024**

**முன்னேற்ற அறிக்கை**

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு | 5-14 |
| 02. | விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் | 15-24 |
| 03. | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 25-34 |
| 04. | தேசிய இளைஞர் படையணி | 35-54 |
| 05. | தலைமைத்துவ மேம்பாட்டுக்கான தேசிய நிலையம் | 55-63 |
| 06. | தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகம் | 65-71 |
| 07. | இலங்கை ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவகம் | 73-80 |
| 08. | சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபை | 81-88 |
| 09. | விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகம் | 89-98 |
| 10. | சிறிய தொழில் முயற்சிகள் மேம்பாட்டுப் பிரிவு | 99-108 |

# இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு

## 01. அறிமுகம்

அபிமானம்மிக்க சமநிலையான ஆளுமையுடனான பலம் பொருந்திய துடிப்பான இளைஞர் சமூகம் மற்றும் பலம் பொருந்திய ஆரோக்கியமான மற்றும் ஒழுக்கமான சமுதாயத்தை உருவாக்குவதற்காக செயற்பாடுமிக்க தலைமுறையொன்றை உருவாக்குவதற்கு அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்திற்கமைய மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கு அமைய இளைஞர் சமூகம் மற்றும் விளையாட்டை மையமாகக்கொண்டு இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு என நிலவிய அமைச்சின் பெயரானது இலக்கம்: 2412/08-2024 மற்றும் 2024 நவம்பர் மாதம் 25 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் அமைச்சு என திருத்தியமைக்கப்பட்டது.

## 02. தூர நோக்கு

'பலம் பொருந்திய இளைஞர் சமூகத்தினூடாக நிலைபேறான அபிவிருத்தியடைந்த தேசம்'

## 03. செயற்பணி

தேசிய பொருளாதாரத்திற்கு முனைப்புடனான பங்களிப்பை வழங்குகின்ற இளைஞர் சமூகத்தை உருவாக்குதல் மற்றும் ஒழுக்கம்மிக்க மற்றும் விளையாட்டுக்களில் ஈடுபடுகின்ற சமூகமொன்றை உருவாக்குவதன் மூலம் ஒரு ஒன்றிணைந்த மற்றும் வளமான தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பு செய்தல்.

## 04. பிரதான அலுவல்கள்

01. அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய கொள்கைகளின் அடிப்படையில் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை தொடர்பான விடயங்கள் மற்றும் திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடன் தொடர்புடைய கொள்கைகள், மூலோபாயங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருதிட்டங்களை உருவாக்குதல், செயற்படுத்துதல், பின்னூட்டல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
02. அமைச்சின் விடயப் பரப்புக்குட்பட்ட பொதுச் சேவைகளை வினைத்திறன் மற்றும் பொதுமக்கள் நேய விதத்தில் வழங்குதல்
03. வீண்விரயம் மற்றும் ஊழலைத் தவிர்த்து அமைச்சின் பணியை நிறைவேற்றுவதை உறுதிசெய்வதற்கு உதவும் வகையில் நவீன முகாமைத்துவ முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் நடைமுறைகளையும் மறுசீரமைத்தல்.
04. வேலைவாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்காக ஒரு தரவுத் தளத்தை அமைத்தல், அவர்களுக்கு வேலை வாய்ப்பு வங்கியொன்றை அமைத்தல் மற்றும் வேலைவாய்ப்பின்மையை முறையாகக் குறைப்பதற்கு இணையவழித் தளமொன்றினூடாக தொடர்புடைய செயல்முறையை நிர்வகித்தல்.
05. இளைஞர் சமூகத்தின் அபிலாஷைகளை நிறைவேற்றுகின்ற தேசிய வேலைத்திட்டத்தை இலக்காகக் கொண்ட மனப்பாங்கு விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்கல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
06. வேலையற்ற இளைஞர்களை மையமாகக் கொண்ட திறன் மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
07. பல்வேறு இனங்கள் மற்றும் மதங்களுக்கிடையில் புரிந்துணர்வை விருத்தி செய்வதற்காக இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல்
08. இளைஞர் அமைப்புக்கள் தொடர்பான ஒழுங்குபடுத்தல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள}

09. இளைஞர்களின் திறன்கள், திறமைகள் மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றை சமூக அங்கீகாரம் கிடைக்கின்ற மற்றும் அவர்களுக்கு தமது இலக்குகளை

வளர்த்துக்கொள்வதற்கு முடியுமான வகையில் இளைஞர் சமூகத்தை இலக்காகக் கொண்ட சிறப்புத் திட்டங்களை உருவாக்குதல்.

10. இளம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவர்களுக்கு தேவையான ஊக்குவிப்பு மற்றும் புதிய வாய்ப்புகளை வழங்குவதற்கான வழிமுறைகளை அறிமுகப்படுத்தி செயற்படுத்துதல்.
11. உயர்தரத்தில் சித்தியடைந்துள்ள ஆனாலும் அரசாங்கப் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற முடியாத இளைஞர் சமூகத்தை இலக்காகக்கொண்டு தொழில்சார் திறன்களுடன் கூடிய தொழில்நுட்பக் கல்வியை வழங்குதல்.
12. ஏற்கனவே இணையவழி ஊடாக அந்நியச் செலாவணியை ஈட்டுகின்ற சுயாதீன தொழில் புரியும் (குசநநடயஉெந) இளைஞர் யுவதிகளுக்கு அதற்கான தடைகளை நீக்குதல்.
13. இலங்கையில் விளையாட்டு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
14. விளையாட்டுத் துறையில் எதிர்பார்க்கின்ற இலக்குகளை அடைந்துகொள்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் ஊக்குவிப்புகளை வழங்குதல்.
15. விளையாட்டுக் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்துதல்
16. சர்வதேச ரீதியில் இலங்கையின் பிம்பத்தைக் கட்டியெழுப்புவதற்காக விளையாட்டைப் பயன்படுத்தக் கூடிய வகையில் புதிய உத்திகளை வகுத்தல் மற்றும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
17. விளையாட்டு வீர வீராங்கனைகள் சர்வதேச போட்டிகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்
18. பொது மக்களின் உடல் ஆரோக்கியத்திற்குத் தேவையான வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல்
19. விளையாட்டு மருத்துவ வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் விளையாட்டுகளில் ஊக்கமருந்து பயன்பாட்டை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
20. விளையாட்டுத் தொகுதிகள் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம்
21. விளையாட்டு சங்க அமைப்புகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவித்தல்
22. சிறப்புத் திறன்களைக் கொண்ட விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து கொள்வதற்கு மற்றும் அவர்களின் பொருளாதார நிலை, ஊட்டச்சத்து மற்றும் பயிற்சி தொடர்பான உபகரணங்களை வழங்குவதற்கு பாடசாலை மற்றும் மாவட்ட மட்டத்தில் சிறப்பு நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தல்.
23. தேசிய விளையாட்டுப் பயிற்சிப் பாடசாலையை மையமாகக் கொண்டு ஒன்பது மாகாணங்களுக்கும் நவீன விளையாட்டுப் பாடசாலைகள் வலையமைப்பை நிறுவுதல்
24. அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஏனைய அனைத்து விடயங்களுடன் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் அனைத்து நிறுவனங்களின் மேற்பார்வை.

## 05. தொடர்புடைய நிறுவனம்சார் மற்றும் சட்ட ரீதியான கட்டமைப்பு

அமைச்சின் கீழ் நிலவுகின்ற திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள்

01. விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம்
02. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
03. தேசிய இளைஞர் படையணி
04. தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையம்
05. சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபை
06. தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகம்
07. விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகம்
08. இலங்கை ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவகம்
09. சிறிய தொழில் முயற்சிகள் மேம்பாட்டுப் பிரிவு (இந்தப் பிரிவு 2024.11.25 முதல் 2412.∵08-2024 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் மேம்பாட்டு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.)

## 06. நடைமுறைப்படுத்த வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்

- 2019 இன் 24 ஆம் இலக்க விளையாட்டுடன் தொடர்புடைய குற்றங்கள் தடுப்புச் சட்டம்
- 1973 இன் 25 ஆம் இலக்க தேசிய அரச பேரவையின் விளையாட்டுக்கள் சட்டம்
- 1999 இன் 17 ஆம் இலக்க சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபை சட்டம்
- 2013 இன் 33 ஆம் இலக்க விளையாட்டுக்களின்போது ஊக்கப் பதார்த்தங்கள் பாவனைக்கு எதிரான சமவாயச் சட்டம்
- 1979 இன் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் மன்றச் சட்டம்
- 2002 இன் 21 ஆம் இலக்க தேசிய இளைஞர் படையணிச் சட்டம்
- 1939 இன் 48 ஆம் இலக்க சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் பற்றிய கட்டளைச் சட்டம்

## 07. மனித வளங்கள் பற்றிய விபரம்

**2024.12.31 ஆம் திகதியன்று அமைச்சின் ஆளணி**

| | **அங்கீகரிக்கப்பட்ட ஆளணி** | **தற்போதுள்ள ஆளணி** | **வெற்றிடம் / (மேலதிகம்)** |
|---|---|---|---|
| சிரேட்ட | 44 | 33 | 10 |
| மூன்றாம் நிலை | 05 | 03 | 02 |
| இரண்டாம் நிலை | 228 | 193 | 36 |
| ஆரம்ப நிலை | 55 | 54 | 01 |
| **மொத்தம்** | 332 | 283 | 49 |

## 08. தேசிய விளையாட்டுத்துறை நிதியம்

இலங்கையின் விளையாட்டு வீர வீராங்கனைகளை ஊக்குவித்தல், விளையாட்டை முன்னேற்றல், அபிவிருத்தி செய்தல் மற்றும் ஆதரவளிக்கும் நோக்கத்துடன் 1973 ஆம் ஆண்டின் 250 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, தேசிய விளையாட்டு நிதியத்தினால் ஊட்டச்சத்து கொடுப்பனவுகளை மேற்கொள்ளல், சர்வதேச சாதனைகளுக்கான அன்பளிப்புக்களை வழங்கல், விளையாட்டு சங்கங்களுக்கு உதவு தொகைகளை வழங்கல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தேசிய விளையாட்டுக்களுக்கான நிதி மூலமானது திறைசேரியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் நிதி ஏற்பாடுகள் மற்றும் தேசிய லொத்தர் சபையிடமிருந்து பெறப்பட்ட வருடாந்த நிதி ஒதுக்கீடுகள் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. விளையாட்டு நிதியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு.

i. தேசிய விளையாட்டு நிதியத்தின் மூலம் கருத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான கொள்கைகள் மற்றும் பின்தொடர் நடவடிக்கை முறைகளை தயாரித்தல்.

ii. விளையாட்டின் முன்னேற்றத்திற்காக விளையாட்டு வீர வீராங்கனைகளுக்காக விளையாட்டு நிதியத்தின் நிதியை உடனடியாக வழங்குதல்.

iii. விளையாட்டு நிதியத்திற்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அனுசரணையைப் பெற்றுக்கொள்வதனூடாக விளையாட்டு நிதியத்தை பலப்படுத்துதல் மற்றும் அதிக எண்ணிக்கையான வீர வீராங்கனைகளுக்காக நிதியத்தின் கீழ் நிதியை வழங்குதல்.

iv. பதக்கம் வென்றவர்களை பாராட்டி சிறப்பு பரிசுகள் வழங்கி விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்துதல்.

## 09. 2024.12.31 ஆம் திகதியன்று அடைந்துகொள்ளப்பட்ட இலக்குகள்

I. வத்தளை புனித அந்தோனியார் கல்லூரியின் நீச்சல் தடாகத் தொகுதியை நிர்மாணித்தல் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

II. ஊசு ரூ குஊ விளையாட்டு மைதானத்தின் ஒளியூட்டல் அமைப்பை அபிவிருத்தி செய்தல் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

III. விளையாட்டு மேம்பாட்டிற்கான சர்வதேச ஒத்துழைப்பைப் பெறுவதற்காக சீனா, ரஷ்யா, ஹங்கேரியா, இந்தோனேசியா, மாலைத்தீவு, தென்னாபிரிக்கா மற்றும் கசகஸ்தான் ஆகிய நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதற்கான வரைவு ஒப்பந்தங்களுக்கான அவதானிப்புக்களை சமர்ப்பித்தல் மற்றும் தொடர்புடைய ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

IV. 2019, 2021, 2022, 2023 ஆம் ஆண்டுகளுக்கான ஜனாதிபதி விருது விளையாட்டுகளை நடாத்தலுடன் தொடர்புடைய ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் விருதுக்குரியவர்களை தெரிவு செய்யும் பணியை நிறைவு செய்தல்

V. விளையாட்டு ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தேசிய விளையாட்டு சம்மேளனங்களுடன் தொடர்பாக 2024.01.01 முதல் இதுவரை 20 தேசிய தேர்வுக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

VI. 2024.09.30 ஆம் திகதியன்று கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் தேசிய விளையாட்டு சங்கங்களால் 403 விளையாட்டு வீரர்கள் மற்றும் 401 உத்தியோகத்தர்கள் சர்வதேச போட்டிகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிகளுக்காக பங்குபற்றியுள்ளனர்.

VII. சுற்றுலாத்துறை சார்ந்த விளையாட்டுக்களை (ளுிழசவ வுழரசளைஅ) மேம்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளாக இலங்கையில் கால்பந்து, ரக்பி, செஸ் மற்றும் டேபிள் டென்னிஸ் சர்வதேச போட்டிகளை நடாத்த தேவையான அனுசரணைகளை வழங்குதல்.

VIII. விளையாட்டுத்துறை திருத்தச் சட்டம், விளையாட்டுத்துறை அதிகார சபை சட்டம் மற்றும் விளையாட்டுத்துறை பல்கலைக்கழகச் சட்டம் வரைவுகள் இறுதிக் கட்டத்தில் நிலவுகின்றது.

IX. விளையாட்டுத்துறையின் முன்னேற்றத்திற்காக அவுஸ்திரேலியா மற்றும் இலங்கைக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கைகளை எதிர்வரும் 03 வருடங்களுக்கு மீண்டும் கைச்சாத்திடல்.

## இளைஞர் அலுவல்கள்

### 2024 ஆம் ஆண்டில் அடைந்துகொள்ளப்பட்ட இலக்குகள் மற்றும் விசேட வெற்றிகள்

### 01. பிரயோக தகவல் தொழில்நுட்ப பட்டப் பாடநெறிகள்

இனங்கண்டுகொள்ளப்பட்ட சில நிலையங்களில் தற்போது முதலாவது மற்றும் இரண்டாவது குழுக்களுக்கான பயிற்சி நடாத்தப்படுகின்றது. விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலாம் குழு மாணவர்கள் = 502

முதலாம் ஆண்டின் தவணைப் பரீட்சைகள் இரண்டு மற்றும் இரண்டாம் ஆண்டின் முதலாவது தவணைப் பரீட்சை தற்போது நடாத்தப்பட்டுள்ளது.

இரண்டாம் குழு மாணவர்கள் = 920

முதலாம் ஆண்டின் முதலாவது தவணைப் பரீட்சை நிறைவு செய்யப்பட்டுள்ளது.

மூன்றாம் குழு ஆட்சேர்த்துக்கொள்ளப்படவுள்ளது.





**02. தேசிய இளைஞர் கொள்கை**

தேசிய இளைஞர் கொள்கையை தயாரிப்பதற்குத் தேவையான தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் மாவட்டத்திற்கு 02 என்ற ரீதியில் குறித்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கான 50 குழுக் கலந்துரையாடல்கள் (குபுனு) நடாத்தப்பட்டுள்ளதுடன், புலனுணர்வு கணக்கெடுப்பொன்றின் (ீநசஉநிவழைெ ளுரசஎநல) ஊடாகவும் தகவல்கள் சேகரித்துக்கொள்ளப்படவுள்ளது. அதற்கான எண்ணக்கருத்தியல் பத்திரத்தை (ஊழுஉநிவ ழேவந) இரண்டு ஆலோசகர்கள் தயாரித்து நிறைவு செய்துள்ளனர்.

தேசிய இளைஞர் கொள்கையை தயாரிக்கும்போது எதிர்கால நடவடிக்கைகளுக்கான நிதிசார் ஒத்துழைப்பை வழங்குவதற்கு ருநேீ்ேயு நிறுவனத்தின் நிதிசார் பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கிணங்க தற்போது தயாரிக்கப்பட்டுள்ள எண்ணக்கருத்தியல் பத்திரத்தை ஆய்வு செய்து அடுத்த கட்ட நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கு அந்த நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

**10. மனித வளங்கள் அபிவிருத்தி - 2024.12.31**

| தொடரிலக்கம் | திகதி | பயிற்சிப் பாடநெறி | பங்கேற்ற அலுவலர் | பாடநெறியை நடாத்திய நிறுவனம் |
|---|---|---|---|---|
| 01 | 2024.01.22 முதல் 2024.01.23 | ீரடிடைஉ ீசழஉரசநஅநவெ ீசழஉநனரசநள | (01)திரு. பீ.ஜே.சமன் பீரிஸ் - முகா.சேவை அலுவலர் (02) செல்வி இரேஷா உமயங்கனீ - அபிவிருத்தி அலுவலர் | திறன் அபிவிருத்தி நிதியம் |
| 02 | 2024.05.09 முதல் 2024.05.10 | ஊயியஉவைல டீரடைனைபெ வுசயைபெைப | (01) திரு. எச்.எம்.ஏ.குமாரசிங்க, உதவிச் செயலாளர் (பெறுகைகள்) (02) திரு. ஐ.யூ.விக்ரமசூரிய, உதவிச் செயலாளர் (நிருவாகம்) | ளுடுஐனுயு |
| 03 | 2024.06.10- 2024.06.14 | புநநெசயட ஊழனெரஉவ யனெ னுளைஉipடiநெ ீசழஉநனரசந ைை | திருமதி அருணி அபயகுணவர்தன | ளுடுஐனுயு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ீரடிடஉைஉ ளுநசஎஉைந | | |
| 04 | 2024.06.20 | கணக்குகள் முறைமை | தரம் ஐஐஐ அபிவிருத்தி அலுவலர்கள் 17 பேருக்கு (வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்காக) | இந்த அமைச்சில் |
| 05 | 2024.06.22 | அலுவலக முறைமைகள் | தரம் ஐஐஐ அபிவிருத்தி அலுவலர்கள் 24 பேருக்கு (வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்காக) | ரூ.10,000. 00 |
| 06 | 2024.06.24 | கணக்குகள் முறைமை | தரம் ஐஐஐ அபிவிருத்தி அலுவலர்கள் 16 பேருக்கு (வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்காக) | -இலவசம்- |
| 07 | 2024.06.25 | தகவல் தொழில்நுட்பம் (ஐவு) | தரம் ஐஐஐ அபிவிருத்தி அலுவலர்கள் 17 பேருக்கு (வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்காக) | -இலவசம்- |
| 08 | 2024.06.26 | தகவல் தொழில்நுட்பம் (ஐவு) | தரம் ஐஐஐ அபிவிருத்தி அலுவலர்கள் 14 பேருக்கு (வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்காக) | -இலவசம்- |
| 08 | 2024.07.10 | பெறுகை மற்றும் கணக்காய்வு பற்றிய பயிற்சிப் பட்டறை | (01) திருமதி எஸ்.ஏ.டீ.பீ. மனோரிக்கா,த.மு.சே.அ.<br>02. திரு.பீ.ஜே.சமன் பீரிஸ், மு.சே.அ.<br>03. திருமதி பீ.ஏ.எஸ்.எச்.ஜயசேக்கர<br>04. திருமதி டீ.என்.எச்.விஜேசூரிய<br>05. திருமதி ஐ.யூ.பலசிங்க<br>06. திருமதி டீ.எஸ்.ஈ.சமரசேக்கர<br>07. திருமதி எல்.பீ.கே.பெரேரா<br>08. திருமதி எஸ்.எம்.சீ.சீ.பெரேரா<br>09. திருமதி யூ.பீ.எஸ்.தில்ஹானி<br>11. திருமதி எம்.என்.மதுமாலி<br>11. திருமதி பீ.ஆர்.என்.ஹர்ஷனீ<br>12. செல்வி எஸ்.எம்.ஏ.ஜே.நதீஷானி | -இலவசம்- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 13. திரு. கே.டப்ளியு.எம்.சீ.ரத்னாயக்க | |
| 09 | 2024.08.08 மற்றும் 2024.08.09 | அலுவலக ஊழியர் சேவைப் பணிகள் பற்றிய பயிற்சி | 01. திரு. ஆர்.ஏ.ஜே.சந்திரசிரி<br>02. திருமதி கே.ஜே.நிரோஷனி | ரூ.20,000.00 |
| 10 | 2024.08.12 | புதிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் கணக்காய்வு தொடர்பான சிக்கல்களைத் தீர்த்தல் | 01. செல்வி எஸ்.எம்.ஏ.ஜே.நதீஷானி<br>02. திருமதி பீ.ஆர்.என்.ஹர்ஷனீ | ரூ.14,000.00 |
| 11 | 2024.08.22 மற்றும் 2024.08.23 | ஓய்வூதியம் | 01.திருமதி டப்ளியு.பீ.டீ.பிரியதர்ஷனீ | ரூ.13,000.00 |
| 12 | 2024.09.27 மற்றும் 2024.09.28 | றுழசம ளாழி மூ யனஎயஉந நுஒஉநட | 01.திருமதி எஸ்.ஈ.சமரசேக்கர<br>02. திருமதி எம்.என்.மதுமாலி | ரூ.33,000.00 |
| 13 | 2024.10.30 | 2024இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களை எதிர்த்தல் தொடர்பாக அமைச்சின் அலுவலர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டம் - 2024 | 150 அலுவலர்கள் | -இலவசம்- |

**11. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் - 2024.12.31 ஆத் திகதியன்று**

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி (மி.ரூ.) | 2024.12.31 ஆம் திகதியன்று நிதிசார் முன்னேற்றம் (மி.ரூ.) | திரட்டிய பௌதிக முன்னேற்றம் % |
|---|---|---|---|
| பாடசாலை கிரிக்கட் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 1500 | 507 | 65 |

**12. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்திக்கொள்ளல் தொடர்பான செயலாற்றுகை (2024.12.31 திகதியன்று)**

| விபரம் | நிதி ஒதுக்கீடு (ரூ.) | 2024.12.31 திகதியன்று திரட்டிய நிதிசார் முன்னேற்றம் (மில்.ரூபா) | |
|---|---|---|---|
| | | நிதிசார் முன்னேற்றம் | % |
| மீண்டெழும் செலவினம் | 686.3 | 489.5 | 71.32 |
| மூலதனச் செலவினம் | 1534.2 | 531.07 | 34.61 |
| மொத்தம் | **2220.5** | **1020.57** | **45.97** |

## 2024 ஆம் ஆண்டில் அடைந்துகொள்ளப்பட்ட வெற்றிகள்

- 2024 பிரான்சின் பாரிஸில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் போட்டியில் கு 44 ஈட்டி எறிதல் போட்டியில் சமித்த துலான் வெள்ளிப் பதக்கம் வென்றார்.
- ஜப்பானின் கோபேயில் நடைபெற்ற 2024 பாரா ஒலிம்பிக் போட்டியில் தடகள உலகக் கிண்ணப் போட்டியில் கு 44 ஈட்டி எறிதல் போட்டியில் உலக சாதனையுடன் சமித்த துலான் தங்கப் பதக்கம் வென்றார்.
- ஜப்பானின் கோபேயில் நடைபெற்ற 2024 பாரா ஒலிம்பிக் போட்டியில் தடகள உலகக் கிண்ணப் போட்டியில் எம்.ஜீ. நுவன் இந்திக்க 100 மீட்டர் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றார்.
- ஜப்பானின் கோபேயில் நடைபெற்ற 2024 பாரா ஒலிம்பிக் போட்டியில் குண்டெறிதல் போட்டியில் பாலித்த பண்டார வெண்கலப் பதக்கம் வென்றார்.
- ஜோர்தானில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் டேபிள் டென்னிஸ் போட்டியில் பீ.டீ.எஸ். தினேஷ் பிரியந்த தங்கப் பதக்கம் வென்றார்.
- மொரோக்கோவில் நடைபெற்ற 2024 கிராண்ட் ∴பிக்ஸ் உலக பாரா தடகளப் போட்டியில் 02 தங்கப் பதக்கங்களையும் 05 வெள்ளிப் பதக்கங்களையும் வெற்றி கொண்டமை.
- துபாயில் நடைபெற்ற கிராண்ட் பாரா ஒலிம்பிக் தடகளப் போட்டியில் 02 தங்கப் பதக்கங்களையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் வெற்றி கொண்டமை.
- 21வது ஆசிய கனிஷ்ட தடகள விளையாட்டுப் போட்டியில் 02 வெள்ளிப் பதக்கங்களையும் 02 வெண்கலப் பதக்கங்களையும் வென்றமை.
- ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற கனிஷ்ட கிராண்ட் ∴பிக்ஸ் தடகளப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் மற்றும் வெண்கலப் பதக்கம் வென்றமை.
- 2024 ஆம் ஆண்டு ஜப்பானின் ஒசாகாவில் நடைபெற்ற தடகளப் போட்டியில் எச்.கே.காலிங்க குமாரகே தங்கப் பதக்கத்தையும், ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்ற தடகள விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றமை.
- முதலாவது ஆசிய அஞ்சலோட்டப் போட்டியில் ஆண்கள் அணி தங்கப் பதக்கமும், பெண்கள் அணி வெள்ளிப் பதக்கமும் வென்றமை.
- தாய்வானில் நடைபெற்ற திறந்த தடகள விளையாட்டுப் போட்டியில் 400 மீட்டர் ஓட்டப் போட்டியில் எஸ்.அருண தர்ஷன தங்கப் பதக்கத்தையும், தருஷி கருணாரத்ன 400 மீட்டர் ஓட்டத்தில் மற்றும் 800 மீட்டர் ஓட்டத்தில் 2 தங்கப் பதக்கங்களையும் வென்றனர்.
- சீன தடகள விளையாட்டுப் போட்டியில் 400 மீட்டர் ஓட்டப் போட்டியில் எஸ்.அருணா தர்ஷன தங்கப் பதக்கம் வென்றார்.
- 19 ஆவது ஸ்பானிய சர்வதேச தடகள விளையாட்டுப் போட்டியில் 400 மீட்டர் ஓட்டத்தில் எஸ்.அருண தர்ஷன தங்கப் பதக்கத்தையும், காலிங்க குமாரகே வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர்.

- கொரியாவில் நடைபெற்ற 2 ஆவது ஆசிய ஈட்டி எறிதல் போட்டியில் தங்கப் பதக்கம் மற்றும் 02 வெண்கலப் பதக்கங்களை வென்றமை.
- பஹாமாஸில் நடைபெற்ற தடகள விளையாட்டுப் போட்டியில் 400 மீட்டர் ஓட்டத்தில் எஸ்.அருணா தர்ஷன தங்கப் பதக்கம் வென்றார்.
- மாலைதீவில் நடைபெற்ற 6 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் பெண்கள் அணி 02 வெள்ளிப் பதக்கங்களையும் 02 வெண்கலப் பதக்கங்களையும் வென்றமை.
- ஈரானில் நடைபெற்ற 32 ஆவது ∴பாஜ் சர்வதேச போட்டியில் பூப்பந்து வீராங்கனை ஹசித அனுருத்த மற்றும் வீரேன் நெத்தசிங்க ஆகியோர் 02 வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.
- ஐகுடீட ஆசிய உடற்கட்டமைப்பு போட்டியில் 03 வெள்ளிப் பதக்கங்களையும் ஒரு வெண்கலப் பதக்கத்தையும் வென்றமை.
- 2024 ஆசிய கிண்ணத்தை இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி வெற்றி பெற்றமை.
- நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இலங்கை ஆண்கள் கிரிக்கெட் அணி கிண்ணத்தை வெற்றி பெற்றமை.
- தாய்லாந்தில் நடைபெற்ற ரு 15 ரூ ரு 20 மல்யுத்தப் போட்டியில் நெத்மி அஹிம்சா வெண்கலப் பதக்கம் வென்றார்.
- 20 வயதுக்குட்பட்ட பெண்கள் வொலிபால் அணி இரண்டாம் இடத்தை வெற்றி பெற்றமை.
- தாய்லாந்தில் நடைபெற்ற சர்வதேச ஜூடோ போட்டியில் சாமர நுவன் தர்மவர்தன தங்கப் பதக்கத்தை வெற்றி பெற்றமை.
- தாய்லாந்தில் நடைபெற்ற சர்வதேச ஜூடோ போட்டியில் இலங்கை அணி 04 வெள்ளிப் பதக்கங்களையும் 04 வெண்கலப் பதக்கங்களையும் வென்றமை.
- பீஜீயில் நடைபெற்ற 2024 பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் (கனிஷ்ட, சிரேஷ்ட, இளைஞர்) கே.ஏ. அஷேன் சசிந்த வெண்கலப் பதக்கத்தை வெற்றி பெற்றமை.
- உலக கெரம் போட்டியில் பங்குபற்றிய அணி பெண் மற்றும் ஆண் ஒற்றையர் ஆட்டத்தில் 02 வெள்ளிப் பதக்கங்களையும், பெண் மற்றும் ஆண் இரட்டையர் ஆட்டத்தில் 02 வெண்கலப் பதக்கங்களையும் பெற்றமை.
- ஆசிய வலைப்பந்து போட்டியில் இலங்கை அணி இரண்டாம் இடத்தை வெற்றி பெற்றது.
- தாய்லாந்து யுளுடீஊ குத்துச்சண்டை ஆசிய எலைட் ஆண்களுக்கான கிண்ணப் போட்டியில் பசிந்து உமயங்க மிஹிராஜ் வெண்கலப் பதக்கம் வென்றார்.
- போட்ஸ்வானாவில் நடைபெற்ற சர்வதேச பூப்பந்து (பேட்மிண்டன்) போட்டித் தொடரில் வெற்றி பெற்றமை.

- பங்களாதேஷில் நடைபெற்ற லுழநெஒ ளூரசெளைந ஐவெநசயெவழையெட ஊாயடடநபெநள 2024 இல் பேட்மிண்டன் வீரர் விரேன் வெத்தசிங்க தங்கப் பதக்கத்தையும், பூப்பந்து வீராங்கனைகளான இசுரி அத்தநாயக்க மற்றும் சித்துமி சில்வா வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

## 14. எதிர்பார்க்கின்ற பிரதான இலக்குகள் 2023 - 2028

- ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலம் இளைஞர்களின் வேலையின்மையைக் குறைத்தல்
- மொத்த தேசிய உற்பத்தியில் விளையாட்டுத்துறை பொருளாதாரத்தின் பங்களிப்பை அதிகரித்தல்
- சர்வதேச தர வெற்றிகளைப் பெற்றுக்கொள்ள முடியுமான விளையாட்டுப் போட்டிகளுக்கான பங்கேற்பை 25மூ இனால் மற்றும் ஒலிம்பிக் மற்றும் பொதுநலவாய பதக்கங்களின் எண்ணிக்கையை 20 வரை அதிகரித்தல்.
- ஆரோக்கியமான சமுதாயத்திற்காக ஒவ்வொரு பிரஜையையும் உடல் சார்ந்த செயற்பாடு அல்லது விளையாட்டுகளில் ஈடுபடுத்தல்.
- இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் வெளிநாடுகளுடன் விளையாட்டு மற்றும் இளைஞர் மேம்பாட்டு திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

DSD

Department of Sports Development

# விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

## 2024

### முன்னேற்ற அறிக்கை

# விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம்

**01. அறிமுகம்:**

1960 களில் சிறிய பிரிவொன்றாக ஆரம்பிக்கப்பட்ட விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம், 1970 இல் ஆரம்பிக்கப்பட்ட பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டு, 1996 இல் அது 'ஏ' தர திணைக்களமொன்றாக தரமுயர்த்தப்பட்டது.

தற்போது விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் கீழ் இலங்கையின் விளையாட்டுத்துறைக்காக சிறப்பான அலுவலை நிறைவேற்றியவாறு தொடர்ச்சியான செயற்பணியில் ஈடுபடுகின்ற விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம், கடந்த பல தசாப்தங்களாக தனது வரலாற்றில் விளையாட்டுடன் இணைந்துள்ள பல அமைச்சுக்களின் கீழ் செயற்பட்டுள்ளது.

**02.தூரநோக்கு**

"விளையாட்டுத்துறையின் அபிவிருத்தி ஊடாக ஆசியாவின் அபிமானம்மிக்க தேசமாக பரிணமித்தல்"

**03.செயற்பணி**

விளையாட்டுத்துறையின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித வளங்கள் அபிவிருத்தியுடன் தொடர்புடைய மூலோபாய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதனூடாக விளையாட்டுத்துறை கலாசாரமொன்றை உருவாக்குவதும், ஆரோக்கியமான, ஒழுக்கம்மிக்க விளையாட்டு வீரர்களை உருவாக்குவதும் அதனூடாக நாட்டின் அபிவிருத்தியை அடைந்து இலங்கையை ஆசியாவின் அபிமானம்மிக்க தேசமாக பரிணமிக்கச்செய்தல்.

**04. நோக்கங்கள்**

01. சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் விளையாட்டில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் உடல் ஆரோக்கியம், உற்பத்தித்திறன் மற்றும் உளத் திருப்தி ஆகியவற்றை மேம்படுத்துதல்.
02. விளையாட்டுத் துறையினூடாக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் வெற்றிகளைப் பெற்றுக்கொள்ளல்.
03. விளையாட்டு வீர வீராங்கனைகளை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்லக்கூடிய சர்வதேச மட்டத்திலான அறிவைக்கொண்ட உள்ளூர் பயிற்சியாளர்களை உருவாக்குதல்.
04. விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு சர்வதேச தரத்திலான விளையாட்டு வசதிகளை வழங்குதல்.
05. விளையாட்டு சங்கங்களை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான கொள்கைகள் மற்றும் தரநிலைகளை நிறுவுதல்.

## 05. பிரதான அலுவல்கள்

### 01. மனித வளங்கள் அபிவிருத்தி

- விளையாட்டு வீரர்களுக்கு முறையான பயிற்சியளித்தல்.
- விளையாட்டு வீர வீராங்கனைகளை உள்ளூர் மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுத்துவதற்கு தேவையான பின்னணியை தயார் செய்தல்.
- விளையாட்டுப் பயிற்சியாளர்கள் மற்றும் விளையாட்டு அதிகாரிகளுக்கு வெளிநாட்டுப் பயிற்சிகளை வழங்குதல்.
- வெளிநாட்டுப் பயிற்சியாளர்கள் மூலம் இலங்கை பயிற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்குதல்.
- விளையாட்டு அதிகாரிகளுக்கு புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கான பட்டறைகளை ஏற்பாடு செய்தல்.
- உள்ளூர் மற்றும் வெளிநாட்டு விளையாட்டு நிபுணர்களூடாக விளையாட்டு அதிகாரிகள் மற்றும் பயிற்சியாளர்களுக்கான விளையாட்டுக் கருத்தரங்குகளை நடத்துதல்.

### 02. உட்டகட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி

- சர்வதேச தரத்திலான விளையாட்டுத் தொகுதிகளை நிர்மாணித்தல் மற்றும் திணைக்களத்திற்கு சொந்தமான விளையாட்டுத் தொகுதிகளை பராமரித்தல்.
- இலங்கையின் ஒவ்வொரு மாகாணத்திலும் தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் விளையாட்டு மைதானங்களின் அபிவிருத்தி மற்றும் நவீனமயமாக்கல்.
- கிராமீய மற்றும் பாடசாலை விளையாட்டு மைதானங்களின் அபிவிருத்தி.

## 06.மனித வளங்கள் பற்றிய விபரம்

| | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ள ஆளணி | வெற்றிடம் | மேலதிகம் |
|---|---|---|---|---|
| சிரேட்ட | 17 | 09 | 08 | - |
| மூன்றாம் நிலை | 23 | 07 | 16 | - |
| இரண்டாம் நிலை | 254 | 176 | 78 | - |
| ஆரம்ப நிலை | 101 | 79 | 22 | - |
| **மொத்தம்** | **395** | **271** | **124** | - |

07.அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்

| தொடரிலக்கம் | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி (மி.ரூ.) | திருத்தப்பட்ட வரவு செலவு மதிப்பீடு (மி.ரூ.) | 2024.12.31 ஆம் திகதியன்று நிதிசார் முன்னேற்றம் (மி.ரூ.) | நிதிசார் முன்னேற்றம் % | பௌதிக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|---|
| 1 | 219-02-02-17-2001<br><br>மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் விளையாட்டுத் தொகுதிகளை நிர்மாணித்தல் | 777.00 | 777.00 | 340.00 | 42.6 | 94.3% |
| 2 | 219-2-2-2104-31<br><br>தியகம மகிந்த ராஜபக்ஷ தேசிய விளையாட்டு அகாடமி | 100.00 | 100.00 | 0.00 | - | 0.3% |
| 3 | 219-02-02-17-2104-66<br><br>புனித ஜோசப் வாஸ் கல்லூரியின் விளையாட்டுத் தொகுதி | 100.00 | 100.00 | 0.00 | - | 15% |
| 4 | 219-02-02-17-2104-46<br><br>பர்னாட் அளுவிஹாரே விளையாட்டுத் தொகுதி | 60.00 | 60.00 | 0.13 | 0.21 | 75% |
| 5 | 219-02-2-32-2104<br><br>டொரின்டன் ஹொக்கி மைதானம் | 57.70 | 57.70 | 57.70 | 100 | 100% |
| 6 | 219-02-02-(2001, 2002, 2003, 2102, 2103)<br><br>மூலதனச் சொத்துக்கள் அபிவிருத்தி மற்றும் மேம்பாடும் புனரமைப்பும் / மூலதனச் சொத்துக்கள் | 42.00 | 42.00 | 32.43 | 77.21 | 50% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | கையகப்படுத்தல் | | | | | |
| 7 | 219- 02-2401<br>இயலளவு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் | 1.00 | 1.00 | 0.18 | 18 | 25% |
| 8 | 219-01-01<br>ஏனையவை | 20.00 | 20.00 | 3.20 | 16 | 25% |
| 6 | **219 – 2 – 2 – 1409 - திறன் விருத்தித் திட்டங்கள்** | | | | | |
| I | 219- 02- 02 – 1508 – 24 வீரர்களுக்கு சர்வதேச விளையாட்டுப் போட்டிகளுக்கான வசதிகளை ஏற்படுத்தல் | 100.00 | 100.00 | 94.215 | 94.02 | 100% |
| II | 219- 02- 02 – 1508 – 25 இரண்டாம் மட்ட வீரர்கள் குழாம் - விளையாட்டு சக்தி | 100.00 | 100.00 | 68.797 | 68.79 | 90% |
| III | 219- 02- 02 – 1508 – 26 சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் | 345.00 | 365.00 | 346.95 | 95.12 | 100% |
| IV | 219- 02- 02 – 1508 – 27 தேசிய விளையாட்டுப் போட்டிகள் | 195.00 | 222.00 | 195.304 | 87.97 | 100% |
| V | 219- 02- 02 – 1508 – 28 உயர் திறமைகளைக் கொண்ட வீரர்கள் குழாமுக்கான வசதிகளை ஏற்படுத்தல் | 100.00 | 52.30 | 51.452 | 98.37 | 90% |
| VI | 219- 02- 02 –1203 – 27<br>தேசிய குழாம்களை போஷித்தல் | 217.00 | 202.00 | 181.97 | 90% | % |

**08. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்திக்கொள்ளல் தொடர்பான செயலாற்றுகை (2024.12.31 திகதியன்று)**

| விபரம் | நிதி ஒதுக்கீடு (ரூ.) | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2024.12.31 திகதியன்று நிதிசார் முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | | | (மில்.ரூ.) | % |
| மீண்டெழும் செலவினம் | 1இ624.541 | 1,534.544 | 1486.045 | 79% |
| மூலதனச் செலவினம் | 1இ157.696 | 1,157.696 | 946.766 | 95% |
| **மொத்தம்** | **2,782.237** | **2,692.240** | **2,432.811** | **92%** |

**09..2024 ஆம் ஆண்டில் அடைந்துகொள்ளப்பட்ட வெற்றிகள்**

- 2024 பிரான்சின் பாரிஸில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் போட்டியில் கு 44 ஈட்டி எறிதல் போட்டியில் சமித்த துலான் வெள்ளிப் பதக்கம் வென்றார்.
- ஜப்பானின் கோபேயில் நடைபெற்ற 2024 பாரா ஒலிம்பிக் போட்டியில் தடகள உலகக் கிண்ணப் போட்டியில் கு 44 ஈட்டி எறிதல் போட்டியில் **உலக சாதனையுடன் சமித்த துலான் தங்கப் பதக்கம் வென்றார்.**
- ஜப்பானின் கோபேயில் நடைபெற்ற 2024 பாரா ஒலிம்பிக் போட்டியில் தடகள உலகக் கிண்ணப் போட்டியில் எம்.ஜீ. நுவன் இந்திக்க 100 மீட்டர் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றார்.
- ஜப்பானின் கோபேயில் நடைபெற்ற 2024 பாரா ஒலிம்பிக் போட்டியில் குண்டெறிதல் போட்டியில் பாலித்த பண்டார வெண்கலப் பதக்கம் வென்றார்.
- ஜோர்தானில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் டேபிள் டென்னிஸ் போட்டியில் பீ.டீ.எஸ். தினேஷ் பிரியந்த தங்கப் பதக்கம் வென்றார்.
- மொரோக்கோவில் நடைபெற்ற 2024 கிராண்ட் ∴பிக்ஸ் உலக பாரா தடகளப் போட்டியில் 02 தங்கப் பதக்கங்களையும் 05 வெள்ளிப் பதக்கங்களையும் வெற்றி கொண்டமை.
- துபாயில் நடைபெற்ற கிராண்ட் பாரா ஒலிம்பிக் தடகளப் போட்டியில் 02 தங்கப் பதக்கங்களையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் வெற்றி கொண்டமை.
- 21வது ஆசிய கனிஷ்ட தடகள விளையாட்டுப் போட்டியில் 02 வெள்ளிப் பதக்கங்களையும் 02 வெண்கலப் பதக்கங்களையும் வென்றமை.
- ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற கனிஷ்ட கிராண்ட் ∴பிக்ஸ் தடகளப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் மற்றும் வெண்கலப் பதக்கம் வென்றமை.
- 2024 ஆம் ஆண்டு ஜப்பானின் ஒசாகாவில் நடைபெற்ற தடகளப் போட்டியில் எச்.கே.காலிங்க குமாரகே தங்கப் பதக்கத்தையும், ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்ற தடகள விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றமை.

- முதலாவது ஆசிய அஞ்சலோட்டப் போட்டியில் ஆண்கள் அணி தங்கப் பதக்கமும், பெண்கள் அணி வெள்ளிப் பதக்கமும் வென்றமை.
- தாய்வானில் நடைபெற்ற திறந்த தடகள விளையாட்டுப் போட்டியில் 400 மீட்டர் ஓட்டப் போட்டியில் எஸ்.அருண தர்ஷன தங்கப் பதக்கத்தையும், தருஷி கருணாரத்ன 400 மீட்டர் ஓட்டத்தில் மற்றும் 800 மீட்டர் ஓட்டத்தில் 2 தங்கப் பதக்கங்களையும் வென்றனர்.
- சீன தடகள விளையாட்டுப் போட்டியில் 400 மீட்டர் ஓட்டப் போட்டியில் எஸ்.அருணா தர்ஷன தங்கப் பதக்கம் வென்றார்.
- 19 ஆவது ஸ்பானிய சர்வதேச தடகள விளையாட்டுப் போட்டியில் 400 மீட்டர் ஓட்டத்தில் எஸ்.அருண தர்ஷன தங்கப் பதக்கத்தையும், காலிங்க குமாரகே வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர்.
- கொரியாவில் நடைபெற்ற 2 ஆவது ஆசிய ஈட்டி எறிதல் போட்டியில் தங்கப் பதக்கம் மற்றும் 02 வெண்கலப் பதக்கங்களை வென்றமை.
- பஹாமாஸில் நடைபெற்ற தடகள விளையாட்டுப் போட்டியில் 400 மீட்டர் ஓட்டத்தில் எஸ்.அருணா தர்ஷன தங்கப் பதக்கம் வென்றார்.
- மாலைதீவில் நடைபெற்ற 6 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் பெண்கள் அணி 02 வெள்ளிப் பதக்கங்களையும் 02 வெண்கலப் பதக்கங்களையும் வென்றமை.
- ஈரானில் நடைபெற்ற 32 ஆவது ∴பாஜ் சர்வதேச போட்டியில் பூப்பந்து வீராங்கனை ஹசித அனுருத்த மற்றும் வீரேன் நெத்தசிங்க ஆகியோர் 02 வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.
- ஐகுடீட ஆசிய உடற்கட்டமைப்பு போட்டியில் 03 வெள்ளிப் பதக்கங்களையும் ஒரு வெண்கலப் பதக்கத்தையும் வென்றமை.
- 2024 ஆசிய கிண்ணத்தை இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி வெற்றி பெற்றமை.
- நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இலங்கை ஆண்கள் கிரிக்கெட் அணி கிண்ணத்தை வெற்றி பெற்றமை.
- தாய்லாந்தில் நடைபெற்ற ரு 15 ரூ ரு 20 மல்யுத்தப் போட்டியில் நெத்மி அஹிம்சா வெண்கலப் பதக்கம் வென்றார்.
- 20 வயதுக்குட்பட்ட பெண்கள் வொலிபால் அணி இரண்டாம் இடத்தை வெற்றி பெற்றமை.
- தாய்லாந்தில் நடைபெற்ற சர்வதேச ஜூடோ போட்டியில் சாமர நுவன் தர்மவர்தன தங்கப் பதக்கத்தை வெற்றி பெற்றமை.
- தாய்லாந்தில் நடைபெற்ற சர்வதேச ஜூடோ போட்டியில் இலங்கை அணி 04 வெள்ளிப் பதக்கங்களையும் 04 வெண்கலப் பதக்கங்களையும் வென்றமை.

- பீஜீயில் நடைபெற்ற 2024 பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் (கனிஷ்ட, சிரேஷ்ட, இளைஞர்) கே.ஏ. அஷேன் சசிந்த வெண்கலப் பதக்கத்தை வெற்றி பெற்றமை.
- உலக கெரம் போட்டியில் பங்குபற்றிய அணி பெண் மற்றும் ஆண் ஒற்றையர் ஆட்டத்தில் 02 வெள்ளிப் பதக்கங்களையும், பெண் மற்றும் ஆண் இரட்டையர் ஆட்டத்தில் 02 வெண்கலப் பதக்கங்களையும் பெற்றமை.
- ஆசிய வலைப்பந்து போட்டியில் இலங்கை அணி இரண்டாம் இடத்தை வெற்றி பெற்றது.
- தாய்லாந்து யுளுடீஊ குத்துச்சண்டை ஆசிய எலைட் ஆண்களுக்கான கிண்ணப் போட்டியில் பசிந்து உமயங்க மிஹிராஜ் வெண்கலப் பதக்கம் வென்றார்.
- போட்ஸ்வானாவில் நடைபெற்ற சர்வதேச பூப்பந்து (பேட்மிண்டன்) போட்டித் தொடரில் வெற்றி பெற்றமை.
- பங்களாதேஷில் நடைபெற்ற லுழநெஒ ளுரசெளைந ஐவெநசயெவழையெட ஊாயடடநபெநள 2024 இல் பேட்மிண்டன் வீரர் விரேன் வெத்தசிங்க தங்கப் பதக்கத்தையும், பூப்பந்து வீராங்கனைகளான இசுரி அத்தநாயக்க மற்றும் சித்துமி சில்வா வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.




**2024 இலங்கை பாரா ஒலிம்பிக் அணி**




**2024 இலங்கை ஒலிம்பிக் அணி**



**நுவன் இந்திக்க**




**தருசி கருணாரத்ன**




அருண தர்ஷன




சாமர நுவன் தர்மவர்தன




இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி



எச்.ஜீ.பாலித்த பண்டார



நெத்மி அஹிம்சா




ஆண் அஞ்சலோட்ட அணி




இலங்கை கிரிக்கட் அணியின் நியூசிலாந்து வெற்றி



சமித்த துலான்

**10. 2024.12.31 ஆம் திகதியன்று அடைந்துகொள்ளப்பட்ட இலக்குகள்**

- தாய்லாந்தில் நடைபெற்ற ரு 19 மற்றும் ரு 20 மல்யுத்தப் போட்டியில் பங்குபற்றிய நெத்மி அஹிம்சா வெண்கலப் பதக்கம் வென்றதுடன், அது மல்யுத்த விளையாட்டில் வெற்றிகொள்ளப்பட்ட முதலாவது ஆசிய மட்டத்திலான பதக்கமாகும்.
- சர்வதேச தரத்தில் மாத்தளை மற்றும் டொரின்டன் ஹொக்கி விளையாட்டு மைதானங்களின் பணிகளை நிறைவு செய்தல்.
- 2024 ஆம் ஆண்டிற்காக எதிர்பார்த்த சர்வதேச பதக்கங்களின் எண்ணிக்கையைத் தாண்டி தற்போது விளையாட்டு வீர வீராங்கனைகள் 15 தங்கம் 26 வெள்ளி 19 வெண்கலப் பதக்கங்களை வெற்றி பெற்றமை.

**11. எதிர்கால இலக்குகள் 2025 - 2028**

- 2027 ஆம் ஆண்டில் இலங்கையில் தகைமைகளைக் கொண்ட விளையாட்டு வீரர்களின் பங்கேற்புடன் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை இலங்கையில் நடாத்துவதற்குத் திட்டமிடல்.
- தேசிய கூட்டமைப்புகள் மற்றும் சங்கங்களின் ஒத்துழைப்புடன் 2025 ஆம் ஆண்டில் சுமார் 10 சர்வதேச போட்டிகளை இலங்கையில் நடாத்துதல்.
- இலங்கையில் இயங்கும் உடற்கட்டுமான நிலையங்களை தரப்படுத்துவதற்காக விளையாட்டு அமைச்சின் கீழ் பதிவு செய்யும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்தல்.

# தேசிய இளைஞர் சேவை மன்றம்

## 2024

**முன்னேற்ற அறிக்கை**

## தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

### 01. அறிமுகம்

1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நிறுவப்பட்டது. இலங்கையில் இளைஞர் சமூகத்தின் அபிவிருத்திக்காக அர்ப்பணிக்கப்பட்ட பிரதான அரச நிறுவனம் தேசிய இளைஞர் சேவை மன்றம் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும். அதன் ஆரம்பம் முதல் இன்று வரை இந்த நிறுவனம் இலங்கையில் இளைஞர் மேம்பாட்டு இலக்கை அடைவதில் மிகவும் முனைப்புடன் பங்களிப்பை வழங்கி வருகிறது. இதன் தலைமையகம் மஹரகமையில் அமையப் பெற்றுள்ளதுடன், இளைஞர் யுவதிகளுக்கு நெருங்கிய வகையிலான சேவைகளை வழங்குவதற்காக மாகாண மட்டத்தில் 09 அலுவலகங்கள், 26 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் 59 பண்ணை மையங்களும் நாடு முழுவதும் நிறுவப்பட்டுள்ளன.

குறிப்பாக, காலத்திற்கேற்ப நிகழ்கின்ற சமூக, பொருளாதார, அரசியல், கலாசார (கலை), விளையாட்டு மற்றும் தொழில்நுட்ப துறைகளின் புதிய போக்குகளை கவனத்திற்கொண்டு இளைஞர் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. அதன்போது புத்தாயிரம் (மிலேனிய) அபிவிருத்தி இலக்குகள் மற்றும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (ளுனுபு புழயடள) அடைந்துகொள்ளுகின்ற வகையிலான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் ''வளமான நாடு - அழகான வாழ்க்கை'' எனும் கருப்பொருளைக் கொண்ட அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தின் இலக்குகளை அடைந்துகொள்ளல் மற்றும் அதற்காக ''திருப்தியான இளமை - சுதந்திரமான சிந்தனையை'' இலங்கை இளைஞர்களுக்கு ஏற்படுத்திக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதற்காக இளைஞர் மேம்பாட்டுத் திட்டங்கள் ∴ திட்டங்கள், சேவைகள், நிறுவன வளவைப் போன்றே சேவை வழங்குநர்களின் (அதிகாரிகளின்) அறிவு, மனப்பாங்குகள் மற்றும் திறன்கள் ஆகியவையும் புதுப்பிக்கப்படுகின்றன.

இப்பணிகளை யதார்த்தமாக்கும் வகையில், இளைஞர்களை நவீன விவசாயக் கைத்தொழிலில் ஈடுபடுத்தல், புதிய சந்தைகளை ஈர்க்கும் தொழில் முயற்சியாளராக்குவதற்கான பயிற்சிப் பாடநெறிகள் ∴ பயிலரங்குகளை நடாத்துதல், இளைஞர்களின் திறன்களை வெளிப்படுத்தி அவர்களின் திறமைகளை மேம்படுத்துவதற்காக விளையாட்டு மற்றும் அழகியல் சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தையை இலக்காகக் கொண்டு புதிய தொழில்நுட்ப அறிவுடனான தொழிற் பயிற்சிகளை வழங்குதல், இளைஞர் யுவதிகளின் மற்றும் அதிகாரிகளின் திறன்களை மேம்படுத்துவதற்கான பயிற்சித் திட்டங்களைத் தொடங்குதல், இந்த நாட்டு இளைஞர்களுக்கு சர்வதேச அனுபவங்களை பகிர்ந்துகொள்வதற்காக சர்வதேச நிகழ்ச்சித் திட்டங்கள், பட்டறைகளில் இளைஞர்களுக்குப் போன்றே சர்வதேச ரீதியிலான அனுபவங்களை பரிமாறிக்கொள்வதற்கு அதிகாரிகளுக்கு வாய்ப்புகளை வழங்குதல், இளைஞர்களின் அரசியல் புரிதலை விரிவுபடுத்துவதற்கான திட்டங்களை செயற்படுத்துதல், இளைஞர்களிடையேயான

உறவுகளை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்குதல். அந்த நோக்கத்திற்காக நாடு முழுவதிலுமுள்ள இளைஞர் கழகங்களை வலையமைப்புக்குட்படுத்தல், தன்னார்வ சமூக செயற்பாடுகளை ஊக்குவித்தல், தனிநபர் மற்றும் நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை கட்டியெழுப்புதல், தொழில் ஆர்வத்தின் அடிப்படையில் பயிற்சிப் பாடநெறிகள் மற்றும் வேலைவாய்ப்புக்களைத் தெரிவு செய்துகொள்வதற்குத் தேவையான தொழில் வழிகாட்டல்களை வழங்குதல், இளைஞர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு மன மற்றும் சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல் ஆகிய விடயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கிணங்க, இளைஞர்களை பொருளாதார, சமூக, கலாச்சார, உடல் மற்றும் உள ரீதியாக வலுவூட்டுவதற்கான பல நிகழ்ச்சித் திட்டங்களை 2024 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அதன்படி, 2024 ஜனவரி 01 முதல் நவம்பர் 30 வரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் சுருக்கம் இந்த அறிக்கை ஊடாக முன்வைக்கப்படுகின்றது.

**02. தூர நோக்கு:-**

பலம்மிக்க இலங்கை இளைஞன்

**03. செயற்பணி:-**

உள்ளூர் மற்றும் சர்வதேச வாய்ப்புகளைப் பயன்படுத்தி வாழ்க்கைச் சவால்களை எதிர்கொள்வதற்காக இலங்கை இளைஞனை வலுவூட்டுவதற்கான வசதிகளை வழங்குதல்.

**04. நோக்கங்கள்:-**

1. இளைஞர்களிடையே தேசிய உணர்வு, ஒழுக்க உணர்வு, சமூக மற்றும் பொருளாதார பிரச்சனைகள் பற்றிய புரிதல் மற்றும் உழைப்பின் பெருமை பற்றிய உணர்வை வளர்த்தல்.
2. தேசிய அபிவிருத்தி திட்டங்களில் இளைஞர்களின் பங்களிப்பை ஊக்குவித்தல்.
3. இலங்கை மற்றும் ஏனைய நாடுகளின் இளைஞர்களிடையே நல்லிணக்கம் மற்றும் பரஸ்பர புரிந்துணர்வை மேம்படுத்துதல்.
4. இளைஞர்களிடையே போட்டித்தன்மை மற்றும் சாதனை உணர்வை ஊக்குவித்தல்.
5. இளைஞர்களின் அறிவை விரிவுபடுத்துதல் மற்றும் வளர்ச்சி தொடர்பான துறைகளில் பயிற்சி வழங்குதல்.
6. இளைஞர்களிடையே கலாசார, இலக்கிய மற்றும் கலை நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.
7. இளைஞர்களிடையே உடல் தகுதி மற்றும் விளையாட்டு அபிவிருத்தியை ஊக்குவித்தல்.
8. இளைஞர்களுக்கான பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்கு வழங்கல்கள் பற்றிய வசதிகளை ஏற்படுத்தல்.
9. பின்தங்கிய இளைஞர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கல்.
10. அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன், நீண்டகால கொள்கை அடிப்படையில் நிதியை திறம்பட முதலீடு செய்வதன் மூலம் இளைஞர்களுக்கு முறையான வேலை வாய்ப்புகளை வழங்குதல்.

11. கொள்கை உருவாக்கம் மற்றும் அமுலாக்கத்தில் இளைஞர்களின் பங்கேற்புக்கான வாய்ப்புகளை வழங்குதல்.

12. இளைஞர் அமைப்பை அமைத்தல் மற்றும் இளைஞர் நலனுக்காக ஏற்கனவே நிறுவப்பட்ட அமைப்புகளுக்கு உதவி செய்தல்.

13. இளைஞர் சேவை விரிவாக்கத்தை திட்டமிடல், ஒருங்கிணைத்தல், ஊக்குவித்தல் மற்றும் வழிநடாத்தல்.

14. ஒவ்வொரு இளைஞரின் தனிப்பட்ட குணப் பண்புகளை விருத்தி செய்தல்.

## 05. பிரதான அலுவல்கள் :-

### 5.1 இளைஞர் அபிவிருத்தி:

**ய. 1. இளைஞர்களை வலையமைப்புக்குட்படுத்தல் மற்றும் எதிர்காலத்திற்குப் பொருத்தமான இளைஞர் சந்ததியை மற்றும் தலைமைத்துவத்தை விருத்தி செய்தல்**

- இளைஞர் யுவதிகளை ஒழுங்கமைத்தல் மற்றும் அவர்களின் தலைமைத்துவ திறன்களை மேம்படுத்துதல்.
- இளைஞர் யுவதிகளின் விளையாட்டு, கலாச்சார, ஊடகம், சினிமா மற்றும் பொருளாதாரம் சார்ந்த திறன்களை மேம்படுத்துதல்
- இலங்கை இளைஞர் யுவதிகளுக்கு சர்வதேச அங்கீகாரத்தை உருவாக்குதல்.
- இளைஞர் மேம்பாட்டை இலக்காகக் கொண்ட தேசிய கொள்கைகளை செயல்படுத்துதல்.
- உள்ளூர் மற்றும் வெளிநாட்டு இளைஞர் பரிமாற்றத் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் சர்வதேச அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
- விசேட தேவைகளைக் கொண்டவர்களின் திறன்களை இனங்காணல் மற்றும் மேம்படுத்தல் ஊடாக அவர்களுக்கு சமூகமயமாக்குவதற்கான வாய்ப்புகளை வழங்குதல்
- சமூக மேம்பாடு பற்றிய கோட்பாட்டு அறிவு, மனப்பாங்குகள் மற்றும் திறன்களை வளர்ப்பதற்கான நடைமுறைச் சாத்தியமான வாய்ப்புகளை வழங்குதல்.
- இளைஞர்களின் உளவியல் சமூக அபிவிருத்தி.
- பல்வேறு சமூகப் பணிகளின் மூலம் உண்மையான செயற்பாட்டாளராகவும், தன்னார்வத் தலைவராகவும் உருவாகுவதற்குத் தேவையான பின்னணியை உருவாக்குதல்.

### 5. 2 இளைஞர்களிடத்தில் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு திறன்களை மேம்படுத்துதல்

- உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வேலைகளை இலக்காகக் கொண்ட பாடநெறிகளை செயற்படுத்துதல்.
- இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் இளைஞர்களின் உள வளர்ச்சிக்கான ஆலோசனை சேவைகளை செயற்படுத்தல்.

- அரச மற்றும் தனியார் துறை மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் பாடநெறிகளை அபிவிருத்தி செய்தல்.
- பாடநெறியின் முடிவில் பரீட்சைகள் மற்றும் மதிப்பீடுகளை நடாத்தி சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் வேலை வாய்ப்புக்களுக்கு வாய்ப்பளித்தல்.

### 5. 3 இளைஞர் வர்த்தக மேம்பாடு

- நவீன தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்தல், உற்பத்தி மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றை
- இலங்கை இளைஞர் பண்ணை அபிவிருத்தி
- காளான் மற்றும் விலங்கு உற்பத்தித் திட்டம்
- சுற்றுலாத்துறை சார்ந்த விவசாயத்தை ஊக்குவித்தல்
- விவசாய மேம்பாட்டுப் பாடநெறிகளை செயற்படுத்துதல்

### 5.4 உலகளாவிய சூழலில் இலங்கை இளைஞர்களுக்கு வலுவூட்டல்

- சர்வதேச இளைஞர் கருத்தரங்குகள், மாநாடுகள், கலாசார நிகழ்ச்சிகள் மற்றும் பட்டறைகளுக்கு இலங்கை இளைஞர்களின் செயலூக்கத்துடனான பங்கேற்பை வழங்கல்.
- உலகளாவிய இளைஞர் தலைவர்களுக்கு பயிற்சி அளித்தல்
- உலகளாவிய ரீதியில் இளைஞர்களிடையே அனுபவங்களையும் அறிவையும் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்புகளை வழங்குதல்
- இளைஞர்களின் திறன்கள், அறிவு மற்றும் மனப்பாங்கு என்பவற்றை சர்வதேச அளவில் எடுத்துச் செல்வதற்கான வாய்ப்பை வழங்குதல்

## 5.5 நிறுவனம்சார் அபிவிருத்தி

### 5.5.1 உள்ளக இயலளவு மேம்பாடு

- ஆளணி திறன் மேம்பாட்டுக்கான பயிற்சி வாய்ப்புகளை வழங்குதல்.
- அதிகாரிகளின் அறிவைப் புதுப்பிக்கும் திட்டங்களை ஆரம்பித்தல்.
- இளைஞர்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற உதவும் ஆராய்ச்சி கலாச்சாரமொன்றை உருவாக்குதல்.
- நிறுவனத்தின் தூரநோக்கிற்கமைய மூலோபாயங்களை திட்டமிடல்.

### 5.5.2 தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் மேம்பாடு

- புதிய தொழில்நுட்பம் மற்றும் வலுவூட்டப்பட்ட நிறுவனம் சார்ந்த பின்னணியை உருவாக்குதல்.
- தற்போதுள்ள பௌதீக வளங்களின் பயன்பாட்டை அதிகரித்து வருமானத்தை உழைத்தல்.

### 5.5.3 உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி

### 5.5.4. மூலதன சொத்துக்களின் வழங்கல், நிர்மாணம், புனரமைப்பு மற்றும் மேம்பாடு

- நிறுவன ஊழியர்களின் நலனுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை நவீனமயப்படுத்தல் மற்றும் மேம்படுத்துதல்

## 06. மனித வளங்கள் பற்றிய விபரம் : 2024.12.31 ஆம் திகதியன்று

| | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ள ஆளணி | வெற்றிடம் | மேலதிகம் |
|---|---|---|---|---|
| சிரேட்ட | 74 | 49 | 25 | - |
| மூன்றாம் நிலை | 129 | 63 | 66 | - |
| இரண்டாம் நிலை | 1138 | 903 | 235 | - |
| ஆரம்ப நிலை | 285 | 206 | 79 | - |
| **மொத்தம்** | **1626** | **1221** | **405** | **-** |

**07. அடைந்துகொள்ளப்பட்ட இலக்குகள் - 2024.12.31 ஆம் திகதியன்று**

| இல. | நிகழ்ச்சித் திட்டம் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்கேற்பு |
|---|---|---|---|
| 01. | இளைஞர் அழகியற்கலை திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் | 13 | 6,707 |
| 02. | விளையாட்டுத்துறை திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்<br>• ஹெய்யன்துடுவ (வொலிபோல் மற்றும் கபடி குழாம்)<br>• சைக்கிளோட்டப் போட்டி<br>விளையாட்டு உபகரணங்கள் பொதிகள் ( 212) | 05 | 35<br>23<br>1300 |
| 03. | இளைஞர் அமைப்புக்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள்<br>• இளைஞர் கழகங்களை அமைத்தல் (கிராமீய, பிரதேச, மாவட்ட) | 11,732 | 281,687 |
| 04. | பரீட்சைகள் மதிப்பீடு<br>• சான்றிதழ்கள் வழங்கல் - 11,561<br>• திறன் அடிப்படையிலான மதிப்பீடு - 380 (பயிலுனர்கள் - 8,813) | 02 | 11,561 |
| 05. | தொழில் வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள்<br>• தொழில் வழிகாட்டல்கள் நிகழ்ச்சித் திட்டங்கள் - 486<br>• ஆலோசனை சேவைகள் நிகழ்ச்சித் திட்டங்கள் - 116<br>• பாடல் நிகழ்ச்சிகள் - 05 | 607 | 45,679 |
| 06. | இளைஞர் பண்ணைகள் அபிவிருத்தி<br>• பண்ணை நிலையங்கள் விவசாயத்துறை உதவிப் பாடநெறிகள்<br>நாற்றுமேடை மேம்பாடு உதவி<br>நேர்த்தியான விவசாயக் கைத்தொழில் பாடநெறி | 03 | 222 |

| | | | |
|---|---|---|---|
| 07. | திட்டமிடல் மற்றும் முன்னேற்ற மீளாய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் | 03 | - |
| 08. | மனித வளங்கள் இயலளவு விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | 11 | 946 |
| 09. | தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டங்கள் (தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நிறுவனத்தின் இயலளவை மேம்படுத்தல்) | 03 | - |
| 10. | சமூக சந்தைப்படுத்தல் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் (பல்வேறு ஊடகங்களின் கீழான இளைஞர் மேம்பாட்டுத் திட்டங்கள் விருத்தி)<br>• ஊடக பிரச்சார நிகழ்ச்சித் திட்டங்கள் - 305<br>• விளம்பரங்கள் - 220<br>• கருப்பொருள் கீதம் - 01 | 526 | - |
| 11. | சர்வதேச இளைஞர் உறவுகள் நிகழ்ச்சித் திட்டங்கள் | 24 | 3,657 |
| 12. | சர்வதேச பரிசளிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் | 33 | 1,403 |
| 13. | இளைஞர் பாராளுமன்றத்துடன் இணையான நிகழ்ச்சித் திட்டங்கள்<br>• அமர்வுகள் - 01<br>• பாட விதானங்களை தயாரித்தல் - 01 | 02 | 190 |
| 14. | தொழில்வாய்ப்பு பயிற்சிப் பாடநெறிகள் | 61 | 19,864 |

**08 . அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்**

| இல. | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி (மி.ரூ.) | 2024.12.31 ஆம் திகதியன்று நிதிசார் முன்னேற்றம் (மி.ரூ.) | நிதிசார் முன்னேற்றம் | திரட்டிய பௌதிக முன்னேற்றம்% |
|---|---|---|---|---|---|
| 01 | இளைஞர் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் 194-02-07-02-2201 | | | | |
| | ை. திறைசேரி நிதி ஏற்பாடு | 1,450.00 | 426.089 | 34.52% | 65% |
| | ைை. ஜனாதிபதி செயலக நிதி ஏற்பாடு | 739.87 | 278.82 | 37.68% | 68% |
| **மொத்தம்** | | **2,189.87** | **704.909** | **32.18** | |

**09. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்திக்கொள்ளல் தொடர்பான செயலாற்றுகை (2024.12.31 திகதியன்று)**

| விபரம் | நிதி ஒதுக்கீடு (ரூ.) | 2024.12.31 திகதியன்று திரட்டிய நிதிசார் முன்னேற்றம் (மில்.ரூபா) | |
|---|---|---|---|
| | | (மில்.ரூபா) | % |
| மீண்டெழும் செலவினம் | 1565 | 1333 | 85.28% |
| மூலதனச் செலவினம் | (திறைசேரி) 1450.00 | 715 | 49.30% |
| | 739.87 (ஜனாதிபதி செயலக நிதி ஏற்பாடு) | 278.82 | 37.68% |

**10. எதிர்கால இலக்குகள் 2024 - 2027**

**"வளமான நாடு - அழகான வாழ்க்கை" எனும் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை அடைந்துகொள்வதற்காக "மனநிறைவான இளைஞர் - சுதந்திர சிந்தனை" உருவாக்கத்திற்காக,**

இந்த நாட்டு இளைஞர் சமூகத்தை பொருளாதாரச் செயல்பாட்டில் செயலூக்கத்துடன் பங்கேற்கச் செய்தல், அழுத்தம், சுரண்டல் மற்றும் பாகுபாடு காண்பித்தல் என்பவற்றிலிருந்து இளைஞர் சமூகத்தைப் பாதுகாத்தல், இளைஞர்களின் சமூக முன்னேற்றத்திற்கு பங்களித்தல், இளைஞர்களை விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறைகளின் பங்காளர்களாக்குதல், சமூக சவால்களை முறியடிப்பதற்காக தனியாள் ஆளுமையை மேம்படுத்தல், அரசியல் - சமூக - பொருளாதார செயல்முறைக்கு - தலைமைத்துவத்தை கட்டியெழுப்புவதற்குத் தேவையான வசதிகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல், கலாசார வாழ்க்கை மற்றும் சுதந்திர சிந்தனைக்கு இடமளித்தல், தேசிய மற்றும் சர்வதேசத்திற்கு தலைமைத்துவத்தை வழங்குவதற்கு முடியுமான வகையில் நேர்த்தியான திறன்களை மேம்படுத்தல், சமூக அநீதியை எதிர்க்கின்ற சமூகமொன்றை உருவாக்குவதற்கான இளைஞர் ஆளுமையை கட்டியெழுப்புதல் ஆகிய பிரதான கோட்பாடுகளை அடிப்படையாகக்கொண்ட அரசாங்கத்தின் இளைஞர் கொள்கையை நனவாக்கும் வகையில் இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் புதுமைப்படுத்தப்பட்டு வருகின்றன.

- இளைஞர் அமைப்புகளை நிறுவுதல் மற்றும் தன்னார்வ சேவையை ஊக்குவித்தல்
- இளைஞர்களின் உடல் மற்றும் மன நலனை மேம்படுத்தல்
- நச்சு போதைப் பொருட்கள் மற்றும் மதுபானப் பயன்பாட்டிலிருந்து இளைஞர்களைப் பாதுகாத்தல்,
- இளைஞர்களுக்கு பாலியல் கல்வியை வழங்குதல்,
- இணையம், தகவல் தொழில்நுட்பம், தலைமைத்துவ திறன்கள்,
- சுற்றுச்சூழல் உணர்திறன், பாலின சமூக நிலை,
- கல்வி மற்றும் தொழில்நுட்பம், புத்தாக்கம், கலை - கலாசார மகிழ்ச்சி மற்றும் பொழுதுபோக்கு, தொழில்முறை திறனை உருவாக்குதல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு தேவையான பிரகாரம் பாடநெறிகளை மாற்றியமைத்தல்.
- பயிற்சிப் பாடநெறிகளின் தரத்தை மேம்படுத்துதல்.

- வெளிநாட்டு வேலை வாய்ப்புகளின் அடிப்படையில் சர்வதேச மொழிப் பாடநெறிகளை அதிகரித்தல்.
- அறிவு மற்றும் வசதிகளை வழங்குவதன் மூலம் இளம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல்.
- விவசாயப் பொருளாதாரம் மற்றும் விவசாயத் தொழில் முயற்சி ஆகியவற்றுக்கு இளைஞர்களை ஈடுபடுத்தல்.
- உள்ளூர் மற்றும் வெளிநாட்டு இளைஞர் அமைப்புகளுடன் ஒத்துழைத்து நடவடிக்கை மேற்கொள்ளல்.
- முடிவெடுக்கும் செயற்பாட்டிற்கு இளைஞர்கள் பங்கேற்புக்கான வாய்ப்புகளை வழங்குதல்
- நிறுவனத்தில் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

# தேசிய இளைஞர் படையணி

## 2024
## முன்னேற்ற அறிக்கை

## தேசிய இளைஞர் படையணி

### 01. அறிமுகம்

எதிர்காலத் தொழிலாளி ஒழுக்கம், தலைமைத்துவம் மற்றும் ஆளுமை மேம்பாடு ஆகிய அடிப்படை அமைப்புகளின் அடிப்படையில் இளைஞர் மேம்பாடு, தொழில் பயிற்சி மற்றும் தொழிற்கல்வி மூலம் வலுவூட்டி நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பதற்கான தெளிவான மற்றும் முறையான திட்டத்தை இளைஞர் படை செயற்படுத்துகிறது. அதற்காக, வாழ்க்கைத் திறன்கள் மேம்பாட்டை அடிப்படை மூலோபாயமாகக் கொண்ட ஒழுங்கமைக்கப்பட்ட பல பயிற்சிப் பாடநெறிகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

2002 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட இளைஞர் படையணி தற்போது நாடு முழுவதும் பரந்து விரிந்த 58 பயிற்சி நிலையங்களைக் கொண்ட வலையமைப்பைக் கொண்டுள்ளது.

வாழ்க்கைத் திறன்கள் பாடநெறியானது அதன் தனித்துவமான பாடத்திட்டம் மற்றும் ஏனைய பல நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பாடத் திட்டங்களைக் கொண்டுள்ளது. இலங்கை இளைஞர்களின் வாழ்க்கைத் திறன்களை வளர்ப்பதற்கான விசேட பயிற்சித் திட்டமொன்றுக்கான தேவைப்பாடு தற்போது மிகவும் தீவிரமாகக் காணப்படும் பின்னணியில் வாழ்க்கைத் திறன்களை வளர்க்கும் முன்னணி மற்றும் ஒரே நிறுவனமான இளைஞர் படையணி, வாழ்க்கைத் திறன்கள் மேம்பாட்டிற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

அத்தோடு தம்புள்ளை இனாமலுவ பிரதேசத்தில் தாபிக்கப்பட்டுள்ள ஹோட்டல் பயிற்சிப் பாடசாலை ஊடாக வருடாந்தம் பல இளைஞர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியுமான சான்றிதழுடன் தேசிய தொழில் தகைமையுடன் (ஏஜெ) சுற்றுலாத்துறை ஹோட்டல் துறையில் இந்த நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றது. மற்றுமொரு சிறப்புப் பயிற்சி நிலையமாகக் கருதப்படும் நாஉல இல் அமைந்துள்ள பயிற்சி நிலையமானது தனி நபர் தலைமைத்துவம், ஆளுமை விருத்தி மற்றும் தயக்கமின்றி சவால்களுக்கு முகங்கொடுக்கின்ற நடைமுறைப் பயிற்சிகளை வழங்குவதுடன், இந்த இரண்டு விசேட பயிற்சி நிலையங்களையும் இளைஞர் படையணியின் வருமான ஈட்டல் வேலைத்திட்டத்திற்கான திருப்புமுனையாகக் கருத முடியும். அத்துடன், மேம்படுத்தப்பட்டு வரும் கதிர்காமத்தில் உள்ள உத்தேச ஹோட்டல் பயிற்சிப் பாடசாலையை, தென்னிலங்கையின் இளம் சமூகத்தினருக்கு எதிர்கால ஹோட்டல் துறைக்கு வழி வகுக்கும் நிலையமாக அறிமுகப்படுத்த முடியும்.

மேலும், திவுலபிட்டிய இளைஞர் படையணி பயிற்சி நிலையம் விசேட விளையாட்டுப் பயிற்சி நிலையமாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. யக்கல, இளைஞர் படையணி பயிற்சி நிலையத்தில் ஏற்கனவே அழகியற்கலை பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டு கலைத்துறையில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு பாட்டு, மேளம், நடனம் போன்ற பாடநெறிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இந்த அனைத்துப் பாடநெறிகளும் தேசிய தொழில் தகைமை (ஏஜெ) பாடநெறிகளாக காணப்படுதல் விசேடமாகும்.

இளைஞர் படையணியினால் நடாத்தப்படும் பாடநெறிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை பின்வருமாறு அடையாளம் கண்டுகொள்ள முடியும்.

| இல. | பயிற்சித் திட்டங்கள் | ஏனையவை |
|---|---|---|
| அ. | வாழ்க்கைத்திறன்கள் பயிற்சிப் பாடநெறி | இந்தப் பாடநெறியை சிறப்பாக நிறைவு செய்கின்ற இளைஞர் படை வீர / வீராங்கனைகளுக்கு இளைஞர் படையணி வாழ்க்கைத் திறன் சான்றிதழுக்கு மேலதிகமாக, ஊவைல ரூ புரடைனள நிறுவனத்தினால் இளைஞர் படையணி வாழ்க்கைத் திறன்கள் பயிற்சிக்கு வழங்கும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழைப் பெறுவதற்கான வாய்ப்பும் வழங்கப்படுகிறது. |
| ஆ. | ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழில்நுட்பம் பற்றிய உயர் சான்றிதழ் பாடநெறி | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்துடன் இணைந்து இந்தப் பயிற்சித் திட்டம் வழிநடாத்தப்படுகிறது. ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையில் எதிர்கால உயர்கல்வி நடவடிக்கைகளுக்காக இந்தப் பாடநெறி அடிப்படைத் தகைமையாகவும் கருதப்படுகிறது. |
| இ. | தொழில் பயிற்சி | வாழ்க்கைத் திறன் பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்யப்படுகின்ற இளைஞர் படையணி வீரர்களை தொழிற் பயிற்சிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br><br>சிறப்பு மதிப்பீட்டு முறை ஊடாக ஒரு நிலையத்திலிருந்து ஒரு குழுவுக்கு 30 மாணவர் படையணி வீரர்கள் வீதம் நாடு முழுவதையும் உள்ளடக்கிய வகையில் 1680 இளம் படையணி வீரர்களுக்கு தொழில் பயிற்சிப் பாடநெறியை பயில்வதற்காக ரூ. 100,000/- உச்சளவின் கீழ் பூரண புலமைப் பரிசில் வழங்கப்படுகிறது. வருடாந்தம் வழங்கப்படும் புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை 3360 ஆகும். |
| ஈ. | ஹோட்டல் பயிற்சிப் பாடநெறி - தம்புள்ளை | வருடாந்தம் 02 குழுக்கள் பயிற்சிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன், ஹோட்டல் துறையில் பின்வரும் பாடநெறிகள் இதன் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.<br><br>- பேஸ்ட்ரி மற்றும் பேக்கரி - ஏஏஞ டுநஎநட ஐஏ<br>- சர்வதேச சமையல் - ஏஏஞ டுநஎநட ஐஏ<br>- கேட்டரிங் - ஏஏஞ டுநஎநட ஐஏ<br>- வரவேற்புப் பிரிவு - ஏஏஞ டுநஎநட ஐஏ<br>- வீட்டு பராமரிப்பு - ஏஏஞ டுநஎநட ஐஐஐ<br>- உதவி பங்களா பராமரிப்பாளர் - ஏஏஞ |

| | | |
|---|---|---|
| | | ஜஜஜ |
| உ. | ஏனைய தொழிலை நோக்கமாகக்கொண்ட பயிற்சிப் பாடநெறிகள் | உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தொழில் சந்தைக்கான கேள்வியைக் கவனத்திற்கொண்டு பாடநெறிகளை தேர்ந்தெடுத்து ஒழுங்கமைக்கப்படுகின்றது. இந்த ஆண்டில், சினெக் நிறுவனத்துடன் இணைந்து வெல்டிங் (4பு) பாடநெறி செயற்படுத்தப்பட்டது. |
| ஊ. | பிரயோக தகவல் தொழில்நுட்பம் பற்றிய பட்டப் பாடநெறி | இலங்கை தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் (ஞடுவுஊ) இணைந்து நடாத்தப்படுகின்ற 03 வருட பாடநெறியாகும். தற்போது 400 இளைஞர்கள் பாடநெறியைப் பயின்று வருகின்றனர். |
| எ. | வெளிநாட்டு மொழிகள் பயிற்சி | சீன (ர்ளுமு டுநளநட - ஐ) மொழி பற்றிய சான்றிதழ் பாடநெறி<br>ஜப்பான் (துடுீவு டுநளநட - ஏ) மொழி பற்றிய சான்றிதழ் பாடநெறி |
| ஏ. | நடனம் மற்றும் சங்கீதம் பாடநெறி | இசை (பாடல்) - ஏேஞ 4<br>நடனம் மற்றும் மேளம் - ஏேஞ 6<br>இந்தப் பயிற்சிப் பாடநெறிகள் யக்கல பயிற்சி நிலையத்தில் நடாத்தப்படுகின்றன. |
| ஐ. | ஞறுஜஐளுஞ ஹோட்டல் முகமைத்துவப் பாடநெறி | இந்த பாடநெறியை சுவிஸ் அரசாங்கம் மற்றும் டீயரநச நிறுவனம் மற்றும் தேசிய இளைஞர் படையணி இணைந்து நடாத்துகிறது. தற்போது, 10 பயிற்சி மையங்களில் இப்பாடநெறி நடாத்தப்படுவதுடன், இதில் பங்கேற்றுள்ளவர்களின் எண்ணிக்கை 646 ஆகும். பாடநெறியின் காலம் 09 மாதங்களாகுமென்பதோடு அதில் 04 மாதங்கள் தொழில் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. |

**அ. வாழ்க்கைத் திறன் தலைமைத்துவம் மற்றும் ஆளுமை மேம்பாட்டுத் திட்டங்கள் (வெளிவாரி நிறுவனங்கள்)**

- பாடசாலை மாணவர்களுக்காக
- பதின்மூன்றாண்டு தொடர்ச்சியான கல்வித் திட்டத்தில் தொழிற்பயிற்சிக்கு செல்லும் பாடசாலை மாணவர்களுக்கு வாழ்க்கை திறன் பயிற்சி.
- பொது மற்றும் தனியார் துறைகளுக்கான வாழ்க்கை திறன் மற்றும் தலைமைத்துவ பயிற்சி திட்டங்கள்
- வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான பாடநெறியைப் பயில்பவர்களுக்கான வாழ்க்கைத் திறன் மேம்பாட்டுத் திட்டம்
- ஆசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டு திட்டங்கள்

- ஏனைய அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் ஆளணிக்கான திறன் மேம்பாட்டு திட்டங்கள்



**ஆ. சமூக மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்**

பயிற்சியைப் பெற்றுக்கொள்பவர்களின் அனுபவங்களை விரிவுபடுத்தல் மற்றும் மனப்பாங்கு விருத்திக்கான நோக்கத்துடன் இளைஞர் படையணி பின்வரும் திட்டங்களை செயற்படுத்துகிறது.

- லு- புசநநெ விவசாயத் திட்டம் - பயிற்சி நிலையங்கள் மட்டத்தில் மற்றும் பயிற்சியைப் பெற்றுக்கொள்பவர்களின் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையுடன் தொடர்பான நிகழ்ச்சித் திட்டமாகும்.

- “செனெஹே பியச (அன்பு வீடு)’’ வீடமைப்பு அபிவிருத்தித் திட்டம் - பயிற்சியைப் பெற்றுக்கொள்பவர்கள் அனுபவங்களை விரிவுபடுத்தல் மற்றும் மனப்பாங்கு விருத்தி மற்றும் தேசத்திற்கான சேவை பற்றிய உணர்வுகளை தூண்டுவதற்கும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பத்திற்கு ஒரு வீட்டை நிர்மாணிக்கும் வேலைத்திட்டமாகும்.

- “சுசுமட்ட சவியக’’ அனர்த்த மேம்பாட்டுத் திட்டம் - இயற்கை அல்லது ஏனைய அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தன்னார்வ அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்ட ரீதியில் முன்வந்து அனர்த்தத்திற்கு ஆளானோருக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றாகும்.

- “ஜீவித்தயட்ட ஜீவயக் (உயிருக்கு வாழ்வு) “ இரத்த தானத் திட்டம் - மருத்துவமனைத் துறையின் கோரிக்கைக்கு ஏற்ப பிரஜைகள் பங்கேற்புடன் செயற்படுத்தப்படும் திட்டம்.
- “சத்வ மித்ரு’’ ஆதரவற்ற விலங்குகளுக்கு உதவுவதற்கான திட்டம் - தெருக்கள் அல்லது கடைகள் போன்ற பொது இடங்களில் ஆதரவற்ற மற்றும் நோய்வாய்ப்பட்ட விலங்குகளுக்கு உணவளித்து பராமரிக்கும் திட்டமொன்றாகும்.

- ‘‘சிப்சவிய’’ - முதலாம் வகுப்பில் சேரும் ஏழைப் பாடசாலை மாணவர்களுக்குப் பாடசாலைக்குச் செல்வதற்குத் தேவையான அடிப்படைக் கற்றல் மற்றும் அத்தியாவசிய உபகரணங்களை வழங்கும் திட்டம்.





இந்த சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் இளைஞர் படையணி வீரர்களிடத்தில் நல்ல மனப்பான்மையை வளர்த்தல், பணிப் பெருமை உணர்வு விருத்தி, தேசபக்தி உணர்வுகளை விருத்தி செய்தல், அனுபவங்களை விரிவுபடுத்துதல், நல்ல சமூக உறவைக் கட்டியெழுப்புதல், மனித மற்றும் சமூக உணர்வைக் கட்டியெழுப்புதல் போன்ற நோக்கங்களுடன் செயற்படுத்தப்படுகின்றன.

**இ. இளைஞர் மேம்பாட்டு திட்டங்கள்**

வாழ்க்கைத் திறன்கள் பயிற்சி பாடநெறியில் உள்ளடக்கப்பட்டுள்ள இந்தத் நிகழ்ச்சித் திட்டங்கள் பாடநெறியின் பாடத்திட்டத்தின் 09 மொடியூல்களுக்கு மேலதிகமாக, இளம் இளைஞர் படையணி பயிற்சி வீரர்களின் நடைமுறைத் திறன்கள் மற்றும் மனப்பாங்கு விருத்தியுடன் ஒழுக்கம், தலைமைத்துவம் மற்றும் ஆளுமை மேம்பாட்டிற்குத் தேவையான சுய வழிகாட்டலை ஊக்குவிக்கப்படுகிறது.

- **விளையாட்டுப் போட்டிகள்** - இளம் படையணி பயிற்சி வீரர்களின் மறைந்திருக்கும் விளையாட்டுத் திறன்களை மேம்படுத்துவதற்கு மற்றும் விருத்தி செய்துகொள்வதற்கான நிலையங்கள் மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் 03 விளையாட்டுப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றது. இங்கு முக்கியமாக வொலிபோல், வலைப்பந்து, அம்பெறிதல், வாயு ரைபிள் துப்பாக்கி சுடுதல் ஆகிய குழு விளையாட்டுக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.
- **தேசிய நல்லிணக்க இளைஞர் பரிமாற்றத் திட்டம்** - நாடுகளுக்கிடையே நட்புறவு மற்றும் சகோதரத்துவத்தை கட்டியெழுப்புவதற்கான ஒரு கலாச்சார ரீதியிலான பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டமாகும்.
- **வருடாந்த கலாசார மற்றும் மதம் சார்ந்த தின நிகழ்ச்சிகள்** - சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய இனங்களுக்குத் தனித்துவமான கலாசார வைபவங்கள் மற்றும் சமய வைபவங்களுக்குரிய தினங்களில் நிலைய மட்டத்தில் அந்த வைபவங்களை ஏற்பாடுசெய்து இன மற்றும் சமய பன்முகத்தன்மை மற்றும் அவற்றை மதித்தல் பற்றிய புரிதலை வழங்குகின்றன.
- **முன்னிலைப்படுத்தல் திறன்கள் மேம்பாட்டு தினம்** - இளம் படையணி பயிற்சி வீரர்களிடத்தில் முன்னிலைப்படுத்தல் திறன்களை வளர்ப்பதற்கு தேவையான பயிற்சி மற்றும் வழிகாட்டுதல் வழங்கப்படுகிறது.
- **கலை விழா** - இளம் படையணி பயிற்சி வீரர்களின் இசை, பாடல் மற்றும் நடனம் ஆகிய திறமைகளுக்கு வாய்ப்பளித்து திறமைகளை வெளிப்படுத்துவதற்காக கலை விழாவை ஏற்பாடு செய்தல்.
- **போதைப்பொருள் தடுப்புத் திட்டம்** - போதைப்பொருள் பாவனையின் தீங்குகள் மற்றும் நிராகரித்தல் திறன் மற்றும் போதைப்பொருள் எதிர்ப்பு மனப்பான்மையை உருவாக்குதல் இந்த திட்டத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.
- **தொழில் தொடர்பான தேர்வு** - இளம் படையணி பயிற்சி வீரர்களின் கல்வித் தகைமைகள், திறன்கள் மற்றும் ஆர்வங்களுக்கு ஏற்ப தொழில் துறையைத் தேர்ந்தெடுப்பதற்கு வழிகாட்டுகிறது.
- **புத்தாக்கம் ∴ புதிய கண்டுபிடிப்புகள், உள்ளூர் உணவுகள் விழா மற்றும் கண்காட்சி** - இளம் படையணி பயிற்சி வீரர்களிடத்தில் புத்தாக்கம் ∴ புதிய கண்டுபிடிப்புக்களை ஊக்குவிப்பதனையும் உள்ளூர் உணவு முறைகள் மற்றும் அவற்றின் தயாரிப்பு பற்றிய சிறந்த புரிதலை ஏற்படுத்துவனையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- **சர்வதேச இளைஞர் தினத்தை கொண்டாடுதல்** - சர்வதேச இளைஞர் தினம் மற்றும் இளைஞர்களின் கடமைகள் பற்றிய கருப்பொருளுடன் தொடர்பான புரிதலை வழங்குதல்.
- **அனர்த்த முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்கள்** - தேசிய அனர்த்த நிலைமைகளின்போது உதவுவதற்குத் தேவையான திறன்களை வளர்த்துக்கொள்ளல்.

- **விவாதங்கள், கட்டுரைகள் மற்றும் செய்திப் பத்திரிகைகளுடன் தொடர்பான திறன்களை மதிப்பீடு செய்தல்** - இந்தத் திட்டத்தினூடாக தொடர்புடைய துறையில் திறமையான இளம் படையணி பயிற்சி வீரர்களின் திறன்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றது.
- **உளவள ஆலோசனை** - உள மற்றும் உளவியல் சமூக சிக்கல்களைக் கொண்ட இளைஞர்களைக் கண்டறிந்து, பிரச்சனைகளைத் தீர்ப்பதில் அவர்களுக்கு உதவி புரிதல்.
- **தன்னார்வ (தொண்டர்) சேவையின் மதிப்பை ஊக்குவித்தல்** - சமூக மேம்பாடு மற்றும் சமூக சேவை நடவடிக்கைகளுக்கான ஊக்கத்தை ஏற்படுத்தல்.
- **கைத்தொழிற்சாலைகள் கண்காணிப்பு** - இளம் படையணி பயிற்சி வீரர்களிடத்தில் பணி நெறிமுறைகள், தொழில் முயற்சி மனப்பான்மையை வளர்ப்பதற்காக இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- **லு – யுசவ நிகழ்ச்சித் திட்டம்** - இளம் படையணி பயிற்சி வீரர்களுக்கு ஓவியம், சிற்பம், குருத்தோலைக் கலை போன்ற துறைகளில் பயிற்சியளித்து, அவர்களின் மறைந்திருக்கும் திறமைகளை கண்டறிய அவர்களுக்கு வாய்ப்பளித்தல்.





**02. தூர நோக்கு**

“உலகளாவிய சமூகத்திற்குப் பொருத்தமான பெருமைமிக்க, சமநிலையான இலங்கை இளைஞர்”

**03. செயற்பணி**

“ஒரு புதுமையான கலாச்சாரத்திற்கான சமூக வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தவாறு சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட முன்னணி சேவை வழங்கும் நிறுவனமாக வாழ்க்கைத் திறன்களை சிறப்பாகவும் நிலைபேறாகவும் வழங்கியவாறு இலக்காகக்கொள்ளப்பட்ட சமூகத்தை வலுவூட்டி தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்”

**04. நோக்கங்கள்**

- இளைஞர் ∴ யுவதிகளின் வாழ்க்கைத் திறன்கள் மற்றும் ஆளுமை விருத்தி
- தொழில் கல்வி, தொழில் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகளை வழங்குதல்

**05. பிரதான பணிகள்**

**அ. மனித வளங்கள் அபிவிருத்தி**

- இளைஞர் படையணி பாடநெறிக்கு இளம் படையணி பயிற்சி வீரர்கள் ∴ வீராங்கனைகளை ஆட்சேர்ப்பு செய்தலுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் மற்றும் ஆட்சேர்ப்பு செய்தல்.
- பாடநெறியை உரிய முறையில் திட்டமிடல் மற்றும் செயல்படுத்தல்.

- வெளி தரப்பினருக்கு வாழ்க்கை திறன்கள் பயிற்சியை வழங்குதல்.
- இளைஞர் ∴ யுவதிகளின் அழகியல் மற்றும் விளையாட்டுத் திறன்களை மேம்படுத்துவதற்கான பங்களிப்பை வழங்குதல்.
- வாழ்க்கைத் திறன்கள் பாடநெறியை நிறைவு செய்கின்ற இளம் படையணி பயிற்சி வீரர்களுக்கு தொழிற்கல்வி மற்றும் பயிற்சியை வழங்க தொழிற்பயிற்சி நிறுவனங்களை ஒருங்கிணைத்தல்.
- வாழ்க்கைத் திறன்கள் பாடநெறி மற்றும் ஆங்கிலம், கணினி பாடநெறிகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு பொருத்தமான நிறுவனத்துடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளல்.
- இளம் படையணி பயிற்சி வீரர்களுக்கு வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களை இலக்காகக் கொண்ட மொழி ஆற்றலை (சீன, ஜப்பானிய, கொரிய) வழங்குதல். மற்றும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை இலக்காகக் கொண்ட தொழில் பயிற்சிகளை வழங்குதல்.

**உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி**

அ. கட்டிடங்கள் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள்

ஆ. நிலையங்களின் பயிற்சி இயலளவை அதிகரித்தல் மற்றும் பயனுள்ள தொழிற்பயிற்சிக்கு பொருத்தமான பிரகாரம் கட்டிடங்களை மீளமைத்தல்.

**06. மனித வளங்கள் பற்றிய விபரம்:**

| | **அங்கீகரிக் கப்பட்ட ஆளணி** | **தற்போதுள்ள ஆளணி** | **வெற்றிடம்** | **மேலதிகம்** |
|---|---|---|---|---|
| சிரேட்ட | 18 | 14 | 04 | - |
| மூன்றாம் நிலை | 127 | 77 | 50 | - |
| இரண்டாம் நிலை | 716 | 512 | 204 | - |
| ஆரம்ப நிலை | 89 | 72 | 17 | - |
| **மொத்தம்** | **950** | **675** | **275** | - |

**07. 2024.12.31 ஆம் திகதியன்று அடைந்துகொள்ளப்பட்ட இலக்குகள்**

**அ. இளைஞர் பயிற்சித் திட்டங்கள்**

| **நிகழ்ச்சித் திட்டம்** | **2024 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாடு (திருத்தப்பட்ட) (மி.ரூ.)** | **வருடாந்த இலக்கு** | | **அடைந்து கொண்டுள்ள முன்னேற்றம் (பௌதிக) %** | **பௌதிக முன்னேற்றம் பற்றிய விபரம்** |
|---|---|---|---|---|---|
| | | **1 ஆ** | **11 ஆ** | | |
| வாழ்க்கைத் திறன்கள் பயிற்சிப் பாடநெறி | 96.71 | 4850 | 4900 | 100 % | முதலாம் குழுவுக்காக ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட எண்ணிக்கை - 3664<br>இரண்டாம் குழுவுக்காக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட எண்ணிக்கை - 3823<br>மூன்றாம் குழுவுக்காக ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட எண்ணிக்கை - 1363<br>விசேட வாழ்க்கைத்திறன்கள் பாடநெறி (14 நாள்) – 6101<br>மொத்தம் - 14951 |
| தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி - இலங்கை சர்வதேச பௌத்த அகாடமி (ளுஐடீயு) இணைந்தது | 56.00 | 3500 | 3500 | 76 % | குழு ஐ – ஐவு – 3107<br>குழு ஐ – நுபெ – 2998<br>குழு ஐஐ – நுபெ – 2496<br>குழு ஐஐ – ஐவு – 1276<br>**மொத்தம் – 9877** |
| வெளிவாரிப் பயிற்சி | 12.00 | 4850 | 4900 | 66 % | 8653 பேர் பயிற்சியை நிறைவு செய்துள்ளனர். |





➢ **வாழ்க்கைத் திறன்கள் பயிற்சிப் பாடநெறியின் கீழ் நிலவும் நிகழ்ச்சித் திட்டங்கள்**

| நிகழ்ச்சித் திட்டம் | 2024 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாடு (மி.ரூ.) | வருடாந்த இலக்கு | அடைந்து கொண்டுள்ள முன்னேற்றம் (பௌதிக) % | பௌதிக முன்னேற்றம் பற்றிய விபரம் |
|---|---|---|---|---|
| பாலியல் ரீதியாக பரவும் நோய் தடுப்பு திட்டம் | 0.22 | 112 நிகழ்ச்சித் திட்டங்கள் | 95 % | 107 நிகழ்ச்சித் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| தொற்றாத நோய் தடுப்பு திட்டம் | 0.22 | | 95 % | |
| போதைப்பொருள் தடுப்பு திட்டங்கள் | 0.22 | | 90 % | 101 நிகழ்ச்சித் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள் | 0.22 | | 90 % | 101 நிகழ்ச்சித் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| உளவள ஆலோசனை நிகழ்ச்சிகள் | 0.45 | | 73 % | 82 நிகழ்ச்சித் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| புத்தாக்கம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் | 3.80 | | 100 % | 112 நிகழ்ச்சித் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| களப் பயணங்கள் | 3.15 | | 49 % | 55 நிகழ்ச்சித் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |

**ஆ. வெளித் தரப்புக்களுக்கான விசேட பயிற்சித் திட்டங்கள்**

| நிகழ்ச்சித் திட்டம் | 2024 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாடு (மி.ரூ.) | வருடாந்த இலக்கு | அடைந்து கொண்டுள்ள முன்னேற்றம் (பௌதிக) % | பௌதிக முன்னேற்றம் பற்றிய விபரம் |
|---|---|---|---|---|
| வெளித் தரப்புக்களுக்கான இயலளவு விருத்தி மற்றும் தலைமைத்துவப் பயிற்சித் திட்டங்கள் | 0.50 | 50,000 (பயிலுனர்கள்) | 100 % | 51,372 பேருக்கு பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| பாடசாலை மாணவ தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சித் திட்டங்கள் | 1.50 | 50,000 (பயிலுனர்கள்) | 100 % | 72,733 பேருக்கு மாணவ தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. |





**இ. இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்**

| நிகழ்ச்சித் திட்டம் | | 2024 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாடு (திருத்தப்பட்ட) (மி.ரூ.) | வருடாந்த இலக்கு | அடைந்து கொண்டுள்ள முன்னேற்றம் (பௌதிக) % | பௌதிக முன்னேற்றம் பற்றிய விபரம் |
|---|---|---|---|---|---|
| நல்லிணக்க நிகழ்ச்சித் திட்டம் | | 2.13 | 2 (நிகழ்ச்சித் திட்டம்) | 100 % | நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| விளையாட்டு வைபவங்கள் | நிலையங்கள் | 0.70 | 112 (நிகழ்ச்சித் திட்டம்) | 100 % | நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| | மாகாண | 1.39 | 9 (நிகழ்ச்சித் திட்டம்) | 100 % | நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| | தேசிய | 5.00 | 1 (நிகழ்ச்சித் திட்டம்) | 100 % | நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| கலை வைபவங்கள் | நிலையங்கள் | 0.70 | 112 (நிகழ்ச்சித் திட்டம்) | 100 % | நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| | மாகாண | 4.50 | 9 (நிகழ்ச்சித் திட்டம்) | 100 % | நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| ஆளுமை விருத்தி | | 12.70 | 1 | 100 % | நிறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | (நிகழ்ச்சித் திட்டம்) | | செய்யப்பட்டுள்ளது. |
| "லு – யுசவ" கண்காட்சி | 3.55 | 100 (பயிலுனர்கள்) | 100 % | 152 பேர் பங்குபற்றினர் |
| நிறைவு செய்ததன் பின்னர் வெளியாகுவதற்கான அணிவகுப்பு | 10.10 | 112 (நிகழ்ச்சித் திட்டம்) | 100 % | நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| வெசாக் வைபவம் | 0.60 | 56 (நிகழ்ச்சித் திட்டம்) | 100 % | நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| பொசொன் வைபவம் | 0.38 | 56 (நிகழ்ச்சித் திட்டம்) | 100 % | நிறைவு செய்யப்பட்டுள்ளது. |





**ஈ. தொழிற் பயிற்சித் திட்டங்கள்**

| **நிகழ்ச்சித் திட்டம்** | **2024 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாடு (திருத்தப்பட்ட) (மி.ரூ.)** | **வருடாந்த இலக்கு** | **அடைந்து கொண்டுள்ள முன்னேற்றம் (பௌதிக) %** | **பௌதிக முன்னேற்றம் பற்றிய விபரம்** |
|---|---|---|---|---|
| தொழிற் பயிற்சிக்கு அனுப்புதல் | 26.40 | 830 (பயிலுனர்கள்) | 100 % | 1313 பேரை தொழிற் பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| ஹோட்டல் பயிற்சி பாடசாலை - தம்புள்ளை | 50.15 | 500 (பயிலுனர்கள்) | 96 % | வரவேற்புப் பிரிவு - 27<br>கேட்டரிங் - 60<br>தொழில் ரீதியிலான சமையல் கலை - 149<br>பேஸ்ட்ரி மற்றும் பேக்கரி - 74<br>வீட்டுப் பராமரிப்பு - 89<br>உதவி பங்களா பராமரிப்பாளர் - 82<br>**மொத்தம் - 481** |

| | | | | |
|---|---|---|---|---|
| ஏனைய தொழில்களை அடிப்படை யாகக் கொண்ட பயிற்சித் திட்டம் **(ழுவாநச துழடி ழுசநைவெநன வுசயைைெப ிசழபசயஅ)** | 3.00 | 80 (பயிலுனர்கள்) | 56 % | ஆயசனைெ றுநடனைபெ குவைவநச – 39<br><br>றுநடனைபெ வுநஉா 4பு – 06<br><br>**மொத்தம் - 45** |
| மொழி பற்றிய சான்றிதழ் பாடநெறிகள் | 0.70 | 1,000 (பயிலுனர்கள்) | 82 % | இது வரை 818 பேர் மொழிப் பயிற்சிப் பாடநெறிக்காக இணைந்துகொண்டுள்ளனர் |
| மேளம் மற்றும் நடனம், சங்கீதம் பாடநெறிகள் | 22.38 | 100 (பயிலுனர்கள்) | 98 % | மேளம் மற்றும் நடனம - 80<br>சங்கீதம் - 18<br><br>**மொத்தம் - 98** |
| பிரயோக தகவல் தொழில்நுட்பப் பட்டப் பாடநெறி | 0.00 | 200 (பயிலுனர்கள்) | 100 % | 2024 ஆம் ஆண்டிற்காக 214 பேர் தொடர்பு கொண்டுள்ளனர். |
| ஞறுஜஞ ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சிப் பாடநெறி | 0.00 | - | - | இதுவரை 643 பயிலுனர்கள் இணைந்துகொண்டுள்ளனர். |





உ. இயலளவு விருத்தி

| நிகழ்ச்சித் திட்டம் | 2024 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாடு (திருத்தப்பட்ட) (மி.ரூ.) | வருடாந்த இலக்கு | அடைந்து கொண்டுள்ள இலக்கு | அடைந்து கொண்டுள்ள முன்னேற்றம் (பௌதிக) % | பௌதிக முன்னேற்றம் பற்றிய விபரம் |
|---|---|---|---|---|---|
| பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தல் | 6.20 | 12 (நிகழ்ச்சித் திட்டங்கள்) | 08 (நிகழ்ச்சித் திட்டங்கள்) | 58 % | 07 பயிற்சித் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன |
| ஆளணிக்கான பயிற்சி | 3.00 | 10 (நிகழ்ச்சித் திட்டங்கள்) | 06 (நிகழ்ச்சித் திட்டங்கள்) | 60 மூ | 06 நிகழ்ச்சித் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| ஆளணிக்கான புலமைப் பரிசில்கள் | 1.50 | 15 (புலமைப் பரிசில்கள்) | 19 புலமைப் பரிசில்கள் | 100 மூ | 19 புலமைப் பரிசில்கள் ஆளணிக்காக வழங்கப்பட்டுள்ளன |

08.அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம்

| இல. | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி (மி.ரூ.) | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடு (மி.ரூ.) | 2024.12.31 ஆம் திகதியன்று நிதிசார் முன்னேற்றம் (மி.ரூ.) | நிதிசார் முன்னேற்றம் | திரட்டிய பௌதிக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|---|
| 1 | தம்புள்ளை திகம்பத்தனை பயிற்சி நிலையத்தை நிர்மாணித்தல் | 29.80 | 34.60 | 11.56 | 33 மூ | 95 மூ |
| 2 | சிலாபம் மாதம்பை பயிற்சி நிலையத்தை நிர்மாணித்தல் | 65.00 | 85.90 | 41.43 | 48 % | 90 மூ |
| 3 | சூரியவெவ பயிற்சி நிலையத்தை நிர்மாணித்தல் | 30.80 | 42.00 | 36.94 | 88 மூ | 100 மூ |
| 4 | கதிர்காமம் ஹோட்டல் பயிற்சிப் பாடசாலையை நிர்மாணித்தல் | 105.00 | 95.00 | 31.10 | 33 மூ | 95 மூ |
| 5 | நாஉல கட்டம் 02 விடுதி | 40.00 | 84.10 | 56.78 | 67 மூ | 100 மூ |
| 6 | கட்டுநாயக்க மலசலகூடக் கட்டமைப்பு | 7.00 | 7.00 | 5.44 | 78 % | 100 % |

**09. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்திக்கொள்ளல் தொடர்பான செயலாற்றுகை (2024.12.31 திகதியன்று)**

| விபரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி (மி.ரூ.) | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2024.12.31 ஆம் திகதியன்று நிதிசார் முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | | | (மி.ரூ.) | % |
| மீண்டெழும் செலவினம் | 1215.00 | 1274 | 1094 | 85.87 % |
| மூலதனச் செலவினம் | 550.00 | 550.00 | 406 | 73.81% |
| **மொத்தம்** | **1765.00** | **1824** | **1500** | **82.23 %** |

**10. 2024 ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட விசேட வெற்றிகள்**

**அ. தேசிய மட்டத்தில் மாகாணங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியை நடாத்துதல்**

இளைஞர் படையின் மாகாணங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் இறுதியாக கடந்த 2016 ஆம் ஆண்டு நடாத்தப்பட்டதுடன், 08 வருடங்களுக்குப் பின்னர் இம்முறை அந்த விளையாட்டுப் போட்டி தேசிய இளைஞர் படையணியின் பணிப்பாளர் பிரிகேடியர் சுஜீவ ரத்னாயக்க அவர்களின் தலைமையில் திவுலப்பிட்டிய விளையாட்டுப் பயிற்சி நிலையத்தில் விமரிசையாக நடைபெற்றது. இந்த போட்டியில் அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டதுடன், வொலிபோல், வலைப்பந்து, அம்பெறிதல் மற்றும் வாயு துப்பாக்கியால் சுடுதல் போன்றவற்றில் விசேட திறமைகளை கொண்ட விளையாட்டு வீரர்களை அடையாளம் காண முடியுமாகியது.



**ஆ. மாகாண பிரியாவிடை அணிவகுப்பு**

2024 ஆம் ஆண்டுக்கான வாழ்க்கைத் திறன்கள் பாடநெறியின் முதலாவது குழுவுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இளம் படையணி பயிற்சி வீரர்கள் பிரியாவிடை அணிவகுப்பு நாடளாவிய ரீதியில் நிலையங்கள் மட்டத்தில் இடம்பெற்றதுடன், மேல் மாகாணத்தில் உள்ள அனைத்து பயிற்சி நிலையங்களும் பங்குபற்றிய மாகாண பிரியாவிடை அணிவகுப்பு அத்தனகல்லை பயிற்சி நிலையத்தில் 2024 ஆகஸ்ட் மாதம் நடைபெற்றது. இந்த அணிவகுப்புக்கு பிரதம அதிதியாக விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் திரு. கே.மகேசன் அவர்கள் பற்கேற்றார்.



**இ. லு – சூலவாஅ 2024 ரியெலிட்டி நிகழ்ச்சித் திட்டம்**

இளைஞர் படையணியில் பயிற்சி பெறுகின்ற இளம் படையணி பயிற்சி வீரர்களின் பாடக்கூடிய ஆற்றல்களை இனங்கண்டுகொள்ளல் மற்றும் அவர்களுக்கான தளத்தை உருவாக்குதல் "யதார்த்தத்தை வலுவூட்டுகின்ற கனவு **லு – சூலவாஅ 2024**" நிகழ்ச்சித் திட்டத்தின் முதன்மை நோக்கமென்பதோடு, அழகியற்கலை விடுதியில் பயிற்சி பெறும் அழகியற்கலை இளம் படையணி வீரர்களின் மதிப்பீட்டு திட்டமொன்றாக இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் அனைத்து நிலையங்களிலும் பாடக்கூடிய திறமையைக் கொண்ட இளம் படையணி பயிற்சி வீரர்கள் பங்கேற்றதுடன், அதன் பின்னர் மாகாண மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு மாகாணத்திலிருந்து மூன்று பேர் வீதம் 27 இறுதிப் போட்டியாளர்கள் இரண்டாம் கட்டத்தில் பங்கேற்றனர். இந்தப் போட்டியானது 06 கட்டங்களைக் கொண்டிருந்ததுடன் இறுதிப் போட்டி இளைஞர் படையணித் தினம் கொண்டாடப்பட்ட 2024 டிசம்பர் 17 ஆம் திகதி இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் டன்கட்வைட் கேட்போர்கூடத்தில் நடாத்தப்பட்டது.







**ஈ. கூட்டுத் திட்டத்தை வெளியிடல்**

இளைஞர் படையணிக்காக நீண்ட கால கூட்டுத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை என்பதுடன் அது பற்றி இடைக்கிடை கணக்காய்வு வினவல்கள் மூலமும் கேள்வி எழுப்பப்பட்டது. 2024 - 2028 ஐந்தாண்டுகளுக்காக தயாரிக்கப்பட்ட கூட்டுத் திட்டம் தற்போது வெளியிடப்பட்டுள்ளதுடன், இளைஞர் படையின் எதிர்கால திட்டங்கள் அனைத்தும் அதற்கேற்ப செயல்படுத்தப்பட்டு வருகின்றது.



**உ. மகாபொல கண்காட்சியில் பங்கேற்றல்**

பல வருடங்களின் பின்னர் ஆரம்பமான மகாபொல கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சியில் தேசிய இளைஞர் படையணி கலந்து கொண்டதுடன் அங்கு இளைஞர் படையணியின் சேவைகள் மற்றும் செயற்பாடுகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. குறிப்பாக தம்புள்ளை இனாமலுவ ஹோட்டல் பயிற்சி பாடசாலையில் நடத்தப்படும் விருந்தோம்பல் துறை சார்ந்த பாடநெறிகள் மீது

கண்காட்சியை பார்வையிட வந்த இளைஞர்களின் கவனம் ஈர்க்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடியுமாக இருந்தது.

**ஊ. ஞமடைட ரு தொழில் மற்றும் தொழிற் சந்தையில் பங்கேற்றல்**

உலக இளைஞர் திறன் தினத்தைக் கொண்டாடும் வகையில், கல்வி அமைச்சின் தொழிற்கல்விப் பிரிவினால் கட்டுபெத்த ஜெர்மன் தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற ஞமடைட ரு தொழில் மற்றும் தொழில் சந்தையில் இளைஞர் படையணி கண்காட்சிக் கூடமொன்றும் சேர்த்துக்கொள்ளப்பட்டது. அங்கு தொழில் கல்வி மற்றும் தொழில் பயிற்சி தொடர்பான தகவல்களை தேடும் இளைஞர்களுக்கு இளைஞர் படையணியின் வாழ்க்கை திறன் பாடநெறி மற்றும் ஹோட்டல் பாடநெறிகள் பற்றிய புரிதலை பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்தது.

**எ. வாழ்க்கை திறன் பாடத்திட்டத்தை மேம்படுத்தல்**

தொடர்ந்து நீண்டகாலமாக எவ்வித மீளாய்வும் இன்றி நடைமுறைப்படுத்தப்பட்ட வாழ்க்கைத் திறன் பாடத்திட்டத்தை மீளாய்வுக்குட்படுத்தி எதிர்கால உலகிற்கு பொருத்தமான உலகளாவிய பிரஜையை உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் இவ்வாண்டு வாழ்க்கைத் திறன் பாடத்திட்டம் மேம்படுத்தப்பட்டுள்ளது. அதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தித் திட்டத்தினூடாக தேவையான நிபுணத்துவ உதவி வழங்கப்பட்டது. அதற்கிணங்க, இதுவரை முழு பாடப் பிரிவுகளும் 09 தொகுதிகளாக (மொடியூல்களாக) பிரிக்கப்பட்டு மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, வாழ்க்கைத் திறன் பாடத்தில் புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



**ஏ. ளுறுஐளுளு ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சிப் பாடநெறி**

சுவிட்சர்லாந்து குடியரசு, இலங்கை டீயரநச நிறுவனம் மற்றும் இளைஞர் படையணி ஆகியன இணைந்து இந்த ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சிப் பாடநெறி நடாத்தப்படுகின்றது. தற்போது நாடளாவிய ரீதியில் உள்ள 10 பயிற்சி நிலையங்களில் 646 பயிலுனர்கள் இப்பயிற்சியில் பங்குபற்றியுள்ளனர். 09 மாதங்கள் தொடரந்து நடாத்தப்படும் இந்தப் பாடநெறி 04 மாத தொழில் பயிற்சியையும் உள்ளடக்கியுள்ளதுடன் பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்பவர்கள் ஹோட்டல் துறை தொழில்களுக்கு அனுப்பப்படுவார்கள்.

**ஐ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு வாழ்க்கைத் திறன் பயிற்சி**

2024 ஆம் ஆண்டில் கல்விப் பொதுத் தராதர சான்றிதழ் உயர்தர வகுப்புக்கு சித்தியடைந்துள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு 14 நாள் வாழ்க்கைத் திறன் பயிற்சியை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதனூடாக தமது அவர்களின் கல்வி இலக்குகளை அடைவதற்கும் அவர்களின் அபிலாஷைகளை மேம்படுத்துவதற்கும் தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டதுடன் இதுவரை 5635 மாணவர்கள் இந்த திட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

**ஒ. இளம் படையணி வீரர்களுக்கு வெளிப்புறப் பயிற்சி**

வாழ்க்கைத்திறன் பாடநெறியைக் கற்கும் இளம் படையணி வீரர்களுக்கு வெளிப்புறப் பயிற்சிகள் அந்தந்த நிலையங்களை அண்டிய வகையில் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், நாஉல இல் அமைந்துள்ள சாகச பயிற்சி நிலையத்தில் சாகச பயிற்சித் திட்டத்தில் பங்குபற்றுதல் ஒவ்வொரு இளம் படையணி வீரரின் கனவாகும். அது

தொடர்பில் கவனம் செலுத்திய இளைஞர் படையணியின் பணிப்பாளர் ஒவ்வொரு மாகாணத்திலும் 100 பேருக்கு நாஉல பயிற்சி நிலையத்தில் பயிற்சியை மேற்கொள்வதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளார். அதற்கமைய முதலாம் கட்டத்தில் 900 இளம் படையணி வீரர்கள் பயிற்சியை நிறைவு செய்துள்ளதுடன், இரண்டாம் கட்டமாக மேலும் 900 பேருக்கு பயிற்சி அளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**ஓ. ஆளணியின் நலனோம்புகை கருதி இடர் கடன் திட்டத்தை ஆரம்பித்தல்.**

இதுவரை, இளைஞர் படையணி அங்கத்தவர்களுக்கு, இடர் கடன் திட்டத்தில் அனுகூலங்களைப் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கவில்லை. இது தொடர்பில் கவனத்தைச் செலுத்தியஇளைஞர் படையணியின் பணிப்பாளர் பிரிகேடியர் சுஜீவ ரத்நாயக்க அவர்கள் அது தொடர்பாக அரச வரவு செலவுத் திட்டத் திணைக்களத்துடன் கலந்துரையாடி தற்போது இடர் கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளார். அது ஆளணியின் அநேகமானோரின் நலனோம்புகைக்கு உதவியிருக்கிறது என்பதை விண்ணப்பித்துள்ள கடனின் எண்ணிக்கையைப் பொருத்து தீர்மானிக்க முடியும்.

**ஔ. அழகியற்கலை படையணி வீரர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கல்**

யக்கலை அழகியற்கலை விடுதியில் பாடல், நடனம் மற்றும் மேளம் இசைத்தல் பாடநெறியைப் பயிலுகின்ற தேசிய தொழில் தகைமை ஐஏ ஆம் மட்டம் மற்றும் ஏஐ ஆம் மட்ட சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டுள்ள அழகியற்கலை இளம் படையணி வீரர்களுக்கு இலங்கை இராணுவம் மற்றும் இலங்கை விமானப்படையில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு அந்தப் படைகளின் அழகியற் கலைப் பிரிவுப் பணிப்பாளர்கள் தற்போது முன்வந்துள்ளனர். அது தொடர்பான 02 ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் யக்கலை பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டது.

**க. தொழில் பயிற்சி அதிகார சபையுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

இளைஞர் படையணியில் வாழ்க்கைத் திறன் பாடநெறியைப் பயிலுகின்ற உட்பட்ட இளம் படையணி வீரர்களுக்கு தொழில்சார் பயிற்சிகளை வழங்குவதற்கு முன்னணி பங்குதாரராக தொழிற்பயிற்சி அதிகாரசபையை அடையாளம் காணலாம். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஊடாக தற்போது அந்த பணியில் எதிர்கொள்ளும் சிக்கல்களை தீர்த்து, தொழில்முறை பயிற்சி செயல்முறையை சிறப்பாக மேற்கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ங. 100,000 இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சியளித்தல்**

2024 ஆம் ஆண்டின் செப்டம்பர் 30 ஆம் திகதியாகும்போது இளைஞர் படையணியின் ஏதேனும் ஒரு பாடநெறியில் பங்கேற்று வாழ்க்கைத் திறன் பயிற்சியைப் பெற்றுக்கொண்டுள்ள இளைஞர் யுவதிகளின் எண்ணிக்கை 108,123 ஆகும். அந்த நிலைமையானது 2024 ஆம் ஆண்டு இளைஞர் படையணி பெற்றுக் கொண்டு மாபெரும் சாதனை என அறிமுகப்படுத்தலாம்.





## 11. எதிர்கால இலக்குகள் 2024 - 2028

- 2028 ஆம் ஆண்டாகும்போது, தொழில் சந்தையின் போக்குகளுக்கு ஏற்ற திறன்களைக் கொண்ட பயிற்சி பெற்ற 113,580 தொழிலாளர்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணியிலமர்த்தல்.
- 2028 ஆம் ஆண்டாகும்போது, 168,000 இளம் பிரஜைகளை எதிர்கால வேலை உலகிற்கு பொருத்தமான வாழ்க்கைத் திறன்களைக் கொண்டவர்களாக உருவாக்குதல்
- 2028 ஆம் ஆண்டாகும்போது,இலக்காகக் கொள்ளப்பட்ட 3300 பயனாளிகளை தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வுகளின் கீழ் சர்வதேச தொழில் சந்தையின் கேள்விக்கு பொருந்தக்கூடிய தகைமையைப் பெற்றுக்கொண்டவர்களாக உருவாக்குதல்.
- 2028 ஆம் ஆண்டாகும்போது சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் சுற்றுச்சூழல் என்ற ரீதியில் வலுவூட்டப்பட்ட 60 பயிற்சி நிறுவனங்கள் கட்டமைப்பை உருவாக்குதல்
- 2028 ஆம் ஆண்டாகும்போது, கவர்ச்சிகரமான பயிற்சி மைய வலையமைப்பை நிறுவுதல்.
- 2028 இல் 20ூ சுய நிதியீட்டல் நிறுவனமாகுதல்.
- 2027 இல் தொழில் சின்னச் சான்றிதழுடன் கூடிய நிறுவன அமைப்பு.
- 2028 ஆம் ஆண்டாகும்போது, சர்வதேச ரீதியில் உறுதி செய்யப்பட்ட தர முகாமைத்துவ அமைப்புகளைக் கொண்ட நிறுவனம்.
- 2025 ஆம் ஆண்டாகும்போது, முகாமைத்துவ தரவுகள் அமைப்பு (ஆஜளு) மற்றும் கற்றல் முகாமைத்துவ அமைப்பு (டுஆளு) ஆகியவற்றை நிறுவுதல்.

NCLD

# தலைமைத்துவ அபிவிருத்திக்கான தேசிய மையம்

# 2024

# முன்னேற்ற அறிக்கை

## தலைமைத்துவ அபிவிருத்திக்கான தேசிய மையம்

### 01. அறிமுகம்

இரத்தினபுரி மாவட்டத்தின் எம்பிலிப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவுக்குரிய யோதகம கிராம அலுவலர் பிரிவில் அழகான பகுதியொன்றில் தலைமைத்துவ மேம்பாட்டுக்கான தேசிய நிலையம் அமையப் பெற்றுள்ளது. 1985 யூன் 23 ஆம் திகதி நடாத்தப்பட்ட 'கம்உதாவ' கண்காட்சி பூமியில் நாட்டின் சிறப்புக் கட்டிடங்களின் மாதிரிகளுக்கமைய (பாராளுமன்றம், அலரி மாளிகை) நிர்மாணிக்கப்பட்ட நிரந்தரக் கட்டிடங்களைக் கொண்ட நிலப் பகுதி "யோதகம கிராமம்" ஆக கட்டியெழுப்பப்பட்டது. கண்காட்சி நிறைவடைந்ததன் பின்னர் அன்றைய கௌரவ பிரதமர் ஆர். பிரேமதாச அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க அதுவரை உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் நிலவிய இந்த நிலப் பகுதியானது உள்ளூராட்சி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தினால் 1985.09.15 ஆம் திகதி முதல் 35 ஏக்கர் நிலப்பரப்பில் அமையப் பெற்றுள்ள கட்டிடங்கள் மற்றும் காணியினைக் கொண்ட பயிற்சி நிலையமொன்றாக தாபிக்கப்பட்டுள்ளது.

அன்று கிராம மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட கிராமோதய சபைகளின் உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதனை நோக்கமாகக் கொண்டு பயிற்சி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், அதற்குப் பொருத்தமான வகையில் "கிராமீயத் தலைவர்களைப் பயிற்றுவிப்பதற்கான சர்வதேச நிலையம்" என இந்த நிலையத்திற்குப் பெயரிடப்பட்டுள்ளது. பிந்திய காலப் பகுதியில் பல்வேறு அமைச்சுக்களின் கீழ் கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் பல்வேறு பயிற்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

- ஜனசவிய நிகழ்ச்சித் திட்டத்தின் சிறிய குழுக்களைப் பயிற்றுவித்தல்
- கிராமோதய சபை தலைவர்களைப் பயிற்றுவித்தல்
- உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதிநிதிகளைப் பயிற்றுவித்தல்.
- சமூக மூல அமைப்புக்களின் தலைவர்களைப் பயிற்றுவித்தல்.
- சமுர்தி முகாமையாளர்கள், சிறிய குழுக்கள், ஜன புபுது பயனாளிகளுக்கான தொழில் முயற்சிப் பயிற்சிகள்
- சமுர்தி பயனாளிகளுக்கான 'பிளிசரண' பெண்களுக்கான நிகழ்ச்சித் திட்டம்

அதன் பின்னர், 2013 ஆம் ஆண்டில் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இந்த நிறுவனம் காணப்பட்டதுடன்,அந்தக் காலப் பகுதியில் கிராமீய தலைவர்களை பயிற்றுவிப்பதற்கு மேலதிகமாக நிலையத்தின் பணி பல்வேறு தரப்புக்களின் தலைமைத்துவத் திறன்களை மேம்படுத்தல் என மாற்றமடைந்தமையினால் விசேட அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றினூடாக அது வரை நிலவிய "கிராமீயத் தலைவர்களைப் பயிற்றுவிப்பதற்கான சர்வதேச நிலையம்"இ "தலைமைத்துவ மேம்பாட்டுக்கான தேசிய நிலையம்" என பெயரிடப்பட்டதுடன், அதன் விடயப் பரப்பும் மாற்றமடைந்தது. 2020 ஆம் ஆண்டு முதல் இந்தப் பயிற்சி நிலையம் இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டதுடன் தற்போதும் அந்த அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றது. தற்போது இந்த நிலையம் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர், கணக்காளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் போன்ற பதவிநிலை அலுவலர்கள் உள்ளிட்ட 62 ஊழியர்களைக் கொண்ட ஆளணியைக் கொண்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் பிரதான பணி என்னவெனில் பாடசாலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள், அரச மற்றும் தனியார் பிரிவு அலுவலர்கள், கிராமீய தலைவர்கள் ஆகியோருக்கான தலைமைத்துவ மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்களை நடாத்துவதாகும். இது தவிர வெளித் தரப்புக்களால் ஏற்பாடு செய்யப்படுகின்ற பயிற்சித் திட்டங்களுக்கான

தங்குமிட வசதிகள், உணவு, விரிவுரை மண்டபங்கள் என்பவற்றுக்காக வழங்கப்படுகின்றது.

நிறுவனத்திடம் நிலவிய தங்குமிட வசதிகளின் இயலளவு சுமார் 265 ஆக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் மேற்கூறப்பட்ட கட்டிடங்கள் பழுதுபார்ப்பு மூலமாக தங்குமிட வசதிகளின் இயலளவை 400 வரை அதிகரித்துக்கொள்வதற்கு முடியுமாகியது. அத்தோடு கொவிட் சிகிச்சை நிலையமாகப் பயன்படுத்தியமை மற்றும் பொருளாதாரப் பிரச்சினை காரணமாக உரிய நேரத்திற்கு பணி முற்பணம் கிடைக்காமையின் அடிப்படையில் பயிற்சித் திட்டங்களை இலவசமாக நடாத்துவதற்கு சிரமமாக இருந்தது.

இதற்குத் தீர்வாக சுமார் 38 வருட காலம் எந்த விதமான அறவீடுகளும் இன்றி நடாத்தப்பட்ட தலைமைத்துவப் பயிற்சித் திட்டங்கள் 2023 ஆம் ஆண்டின் செப்தெம்பர் மாதம் முதல் அறவிடப்பட்டு மேற்கொள்வதற்கு ஆரம்பிக்கப்பட்டதுடன், பாடசாலை மாணவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மாத்திரம் தங்குமிடங்கள், விரிவுரை மண்டபங்கள் ஆகியவற்றை இலவசமாக வழங்கி உணவு வழங்குவதற்கான செலவுகளை மாத்திரம் அறவிடப்படுகின்றது. அத்தோடு தலைமைத்துவ மேம்பாட்டுப் பயிற்சியை தற்போதைய கேள்விக்கேற்ப வழங்கும் நோக்கில் சாகச செயற்பாடுகளுக்குத் (யுனளநவெரசந டியளநன வசயைைபெ) தேவையான பயிற்சி விடயங்களும் தயார் செய்யப்பட்டுள்ளன.

இதற்குத் தீர்வாக சுமார் 38 வருட காலம் எந்த விதமான அறவீடுகளும் இன்றி நடாத்தப்பட்ட தலைமைத்துவப் பயிற்சித் திட்டங்கள் 2023 ஆம் ஆண்டின் செப்தெம்பர் மாதம் முதல் அறவிடப்பட்டு மேற்கொள்வதற்கு ஆரம்பிக்கப்பட்டதுடன், பாடசாலை மாணவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மாத்திரம் தங்குமிடங்கள், விரிவுரை மண்டபங்கள் ஆகியவற்றை இலவசமாக வழங்கி உணவு வழங்குவதற்கான செலவுகளை மாத்திரம் அறவிடப்படுகின்றது. அத்துடன் 2023 ஆம் ஆண்டில் மேற்கூறப்பட்ட கட்டிடங்கள் பழுதுபார்ப்பு மூலமாக தங்குமிட வசதிகளின் இயலளவை 400 வரை அதிகரித்துக்கொள்வதற்கு முடியுமாகியதுடன், தலைமைத்துவ மேம்பாட்டுப் பயிற்சியை தற்போதைய கேள்விக்கேற்ப வழங்கும் நோக்கில் சாகச செயற்பாடுகளுக்குத் (யுனளநவெரசந டியளநன வசயைைபெ) தேவையான பயிற்சி விடயங்களும் தயார் செய்யப்பட்டுள்ளன.

அதற்கிணங்க, தற்போது இந்த நிலையத்தில் ஒரே நேரத்தில் 400 பயிற்சி பெறுபவர்களுக்கு விடுதி வசதிகளை வழங்குவதற்கு முடியுமான விடுதிகள் (11 குளிரூட்டப்பட்ட அறைகள் உட்பட), ஒரே நேரத்தில் 400 பேர் அமரக்கூடிய குளிரூட்டப்பட்ட மாநாட்டு மண்டபம், மேலும் 04 விரிவுரை மண்டபங்கள் மற்றும் ஒரே தடவையில் 150 பேர் அமரக்கூடிய முழு வசதியுடன் கூடிய சாப்பாட்டு அறை, 16 உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் தலைமை அலுவலகம் உள்ளிட்ட 47 கட்டிடங்கள் மற்றும் அழகான அமைதியான காணிப்பகுதியைக் கொண்டமைந்துள்ளது. அத்தோடு சாகச செயற்பாடுகளுடனான (யுனளநவெரசந டியளநன வசயைைபெ) பயிற்சி மைதானத்தையும் கொண்டுள்ளது.

இந்த அனைத்து நவீனமயப்படுத்தல்களின் பெறுபேறாக பயிற்சித் திட்டங்களுக்கு திருப்திகரமான கேள்வி நிலவுவதுடன் 2024 ஆம் ஆண்டிற்காக 31 மில்லியன் ரூபாவிலும் அதிக வருமானத்தை உழைப்பதற்கு முடியுமாகியது.

## 02. தூர நோக்கு

" தலைமைத்துவ திறன்களைக் கொண்ட இளைஞர் சமூகம் "

## 03.செயற்பணி

பயன்மிக்க பயிற்சிகள் மற்றும் ஆராய்ச்சிகள் ஊடாக இளம் பிரஜைகளின் தலைமைத்துவ திறன்களை மேம்படுத்தல்.

## 04. நோக்கங்கள்

- இளைஞர் சமூகத்தின் தலைமைத்துவம் மற்றும் ஆளுமை மேம்பாட்டின் நிமித்தம் தரமான, காலத்திற்கேற்ற, பயிற்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் செயற்படுத்துதல்.
- தொழில் துறைகளில் வெற்றிபெறுவதற்காக ஆன்மீக மூலதனத்துடனான இளைஞர் சமூகத்தை உருவாக்குதல்.
- நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பதற்காக ஆக்கப்பூர்வமான, பரஸ்பர புரிதலுடனான, கலந்துரையாடலுடனான, பயனுள்ள முடிவெடுக்கும் இளைஞர் சமூகத்தை உருவாக்குதல்.
- இன, மத மற்றும் சாதிகளுக்கு இடையில் நிலவுகின்ற சமூக மற்றும் கலாச்சார விழுமியங்களைப் பாதுகாக்கும் வகையில் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு பங்களிக்கும் இளைஞர் சமூகத்திற்கான பயிற்சி திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- சமூகத் தலைமைக்காக இளைஞர்களுக்கு வழிகாட்டுதல்.
- இளைஞர் சமூகத்தின் தலைமைத்துவ திறன்களை மேம்படுத்துதல் தொடர்பான பயிற்சி மற்றும் ஆராய்ச்சி தகவல்களை வழங்குதல்.
- தேசிய பயிற்சி தேவைகளை பூர்த்தி செய்யும் பயிற்சி நிலையமொன்றாக செயற்படல்.

## 05.பிரதான பணிகள்

நிறுவனத்தின் பிரதான பணி, தலைமைத்துவ மேம்பாட்டுத் திட்டங்களை நடாத்துவதாகும். அதற்கான நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக தாபனம், அபிவிருத்தி, கணக்கு, பயிற்சி மற்றும் பராமரிப்பு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அந்த ஒவ்வொரு பிரிவுகளின் பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

### 01.தாபனப் பிரிவு

- நாளாந்த நிருவாக நடவடிக்கைகள்
- பதவி உயர்வுகள், ஒழுக்காற்று நடவடிக்கைகள், செயலாற்றுகை மற்றும் ஓய்வுறுத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய பணிகள்
- பயிற்றுவிப்பாளர்கள் உள்ளிட்ட அனைத்து ஆளணிக்கும் பயிற்சியளித்தல்.
- நிறுவனத்தின் வாகனங்களை பராமரித்தலுடன் தொடர்புடைய நடவடிக்கைகள்
- ஆவணக் காப்பகப் பராமரிப்பு நடவடிக்கைகள்

### 02.கணக்குப் பிரிவு

- நிதிசார் மதிப்பீடுகளைத் தயாரித்தல், செலவுகளை அறிக்கைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை
- பெறுகை நடவடிக்கைகள்
- சொத்துக்கள் நிருவாகம்
- கணக்காய்வுக்கான தகவல்களை வழங்கல்
- திணைக்கள பெறுகை வரையறைகளை விஞ்சும் சந்தர்ப்பங்களின்போது அதனுடன் தொடர்புடைய பணிகளை மேற்கொள்ளல்

### 03. பயிற்சிப் பிரிவு

- பயிற்சித் திட்டங்களை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல்
- பயிற்சியாளர்களுக்கு பொருத்தமான பிரகாரம் பயிற்சித் தேவைகளை மதிப்பீடு செய்தல்
- பயிற்சி அமர்வுத் திட்டங்களை தயாரித்தல்
- பயிற்சித் திட்டங்களுக்கான வளப் பங்களிப்பை வழங்குதல்.
- பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சித் திட்டங்களின் பின்னைய மதிப்பீட்டு நடவடிக்கைகள்
- பயிற்சித் திட்டங்களின் மதிப்பீடுகள் பொழிப்பு மற்றும் பொருத்தமான பிரகாரம் பயிற்சி நடவடிக்கைகளை பல்வகைப்படுத்தல்
- பயிற்சி உபகரணங்கள் நிர்மாணிப்பு மற்றும் மேம்பாடு

### 04.வழங்கல் பிரிவு

- பயிற்சி நடவடிக்கைகளுக்கான கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- உணவுப் பொருட்களைக் கையேற்றல்
- சமயலறைக்கான விநியோகங்கள்
- சமயலறை மேற்பார்வை நடவடிக்கைகள்

### 05.அபிவிருத்தி மற்றும் பராமரிப்புப் பிரிவு

- கட்டிடங்கள் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு
- 35 ஏக்கர் காணியை அழகாகப் பராமரித்தல்
- உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் பேணிப் பராமரித்தல்

### 06.மனித வளங்கள் பற்றிய விபரம்

| | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ள ஆளணி | வெற்றிடம் | மேலதிகம் |
|---|---|---|---|---|
| சிரேட்ட | 5 | 3 | 2 | - |
| மூன்றாம் நிலை | 1 | 1 | - | - |
| இரண்டாம் நிலை | 37 | 35 | 02 | - |
| ஆரம்ப நிலை | 33 | 27 | 06 | - |
| **மொத்தம்** | **76** | **66** | **10** | - |

### 07.அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்

| இல. | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி (மி.ரூ.) | **2024.12.31** ஆம் திகதியன்று நிதிசார் முன்னேற்றம் (மி.ரூ.) | நிதிசார் முன்னேற்றம் % | **2024.12.31** ஆம் திகதியன்று பௌதிக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| 01 | கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் | 15 | 15 | 100% | 100% |
| 02 | இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனங்கள் பராமரிப்பு | 01 | 01 | 100மூ | 100% |
| 03 | வாகனங்கள் பராமரிப்பு | 1.5 | 1.5 | 100% | 100% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 04 | தளபாடங்கள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகளைக் கொள்வனவு செய்தல் | 02 | 02 | 100% | 100% |
| 05 | இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனங்கள் கொள்வனவு | 01 | 01 | 100% | 100% |
| 06 | ஆளணிக்கான பயிற்சித் திட்டங்கள் | 2.5 | 01 | 40% | 70% |
| 07 | தலைமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திட்டங்கள் | 25 | 20.4 | 81% | 85% |

**2024 ஆம் ஆண்டின் பயிற்சித் திட்டங்களின் முன்னேற்றம்**

| இல. | நிகழ்ச்சித் திட்டத்தின் வகை | நிகழ்ச்சித் திட்டத்தின் எண்ணிக்கை | பயிலுனர்களின் எண்ணிக்கை | வருமானம் (மி.ரூ.) | செலவு (மி.ரூ.) |
|---|---|---|---|---|---|
| 01. | பாடசாலை மாணவர்களுக்கான தலைமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திட்டங்கள் | 30 | 2151 | 4.9 | 4.97 |
| 02. | இளைஞர் சமூகத்திற்கான தலைமைத்துவ அபிவிருத்தி பயிற்சி திட்டங்கள் | 10 | 870 | 2.3 | 1.63 |
| 03. | அரச அதிகாரிகளுக்கு தலைமைத்துவ அபிவிருத்தி பயிற்சி திட்டங்கள் | 19 | 1302 | 5.2 | 3.5 |
| 04. | சமூக மூல அமைப்பு செயற்பாட்டாளர்களுக்கு தலைமைத்துவ அபிவிருத்தி பயிற்சி திட்டங்கள் | 02 | 190 | 0.4 | 0.85 |
| 05. | விடயம் சார்ந்த பயிற்சி திட்டங்கள் | 30 | 3088 | 15.4 | 9.44 |
| 06. | பின்தொடர் திட்டங்கள் | 21 | 1173 | - | 0.05 |
| **மொத்தம்** | | **112** | **8774** | **28.2** | **20.4** |

01.வரவு செலவுத் திட்ட நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் செயற்படுத்தப்படும் பயிற்சித் திட்டங்களின் வருமானம் = ரூ. 28,187,977.00

02.வசதிகள் வழங்கல் ஊடாக உற்பத்தி திட்டங்களின் வருமானம் = ரூ. 4,299,331.00

03.புகைப்பட வருமானம் = ரூ. 104,250.00

**= ரூ. 32,591,558.00**

**08. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்திக்கொள்ளல் தொடர்பான செயலாற்றுகை (2024.12.31 திகதியன்று)**

| விபரம் | நிதி ஒதுக்கீடு (ரூ.) | 2024.12.31 திகதியன்று நிதிசார் முன்னேற்றம் | |
|---|---|---|---|
| | | நிதிசார் முன்னேற்றம் (மி.ரூ.) | பௌதிக முன்னேற்றம் % |
| மீண்டெழும் செலவினம் | 71.28 | 70 | 98% |
| மூலதனச் செலவினம் | 48 | 42 | 87மூ |
| **மொத்தம்** | 119.28 | 111.42 | 94% |

**09. 2024 ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட விசேட வெற்றிகள்**

- யுனளநவெரசந டீயளநன வுசயனைைபை ஆரம்பிப்பதற்கான தளத்தை தயார்செய்தல் மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை ஆரம்பித்தல்




- விடுதிகள் பழுதுபார்ப்பு மற்றும் பயன்படுத்திக்கொள்ளப்படாத உத்தியோகபூர்வ இல்லங்களை விடுதிகளாக மாற்றியமைத்தமை மூலம் நிலையத்தில் காணப்பட்ட சுமார் 250 விடுதிகளை 400 ஆக அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.




10. எதிர்கால இலக்குகள் 2025 - 2028

| இல. | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | இலக்காகக்கொள்ளப்படும் பயனாளிகள் | | 2025 | 2026 | 2027 | 2028 |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | பாடசாலை மாணவர்களுக்கான தலைமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திட்டம் | பாடசாலை மாணவர்கள் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 60 | 65 | 65 | 70 |
| | | | பயனாளிகள் எண்ணிக்கை | 3600 | 3900 | 3900 | 4200 |
| 02. | இளைஞர்களுக்கான தலைமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திட்டம் | இளைஞர்கள் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 20 | 20 | 20 | 20 |
| | | | பயனாளிகள் எண்ணிக்கை | 1200 | 1200 | 1200 | 1200 |
| 03. | அரச உத்தியோகத்தர்களுக்கான தலைமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திட்டம் | அரச உத்தியோகத்தர்கள் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 10 | 10 | 10 | 10 |
| | | | பயனாளிகள் எண்ணிக்கை | 600 | 600 | 600 | 600 |
| 04. | சமூக மூல அமைப்பு செயற்பாட்டாளர்களுக்கான தலைமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திட்டம் | கிராமீய சமூக மூல மற்றும் தன்னார்வ அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 10 | 10 | 10 | 10 |
| | | | பயனாளிகள் எண்ணிக்கை | 600 | 600 | 600 | 600 |
| 05. | விடயம் சார்ந்த பயிற்சி திட்டங்கள் | அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் அலுவலர்கள் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 60 | 60 | 60 | 60 |
| | | | பயனாளிகள் எண்ணிக்கை | 3600 | 3600 | 3600 | 3600 |
| 06. | பின்தொடர் திட்டங்கள் | தலைமைத்துவப் பயிற்சியைப் பெற்றுக்கொண்ட பாடசாலை மாணவர்கள் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 25 | 25 | 25 | 25 |
| | | | பயனாளிகள் எண்ணிக்கை | 1500 | 1500 | 1500 | 1500 |

# தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகம

# 2024

# முன்னேற்ற அறிக்கை

# தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்

## 1. அறிமுகம்

விளையாட்டுப் பாடசாலை எனும் பெயருடன் 1979 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மேற்படி நிறுவனம் 1996 ஆம் ஆண்டில் விசேட பாராளுமன்றச் சட்டம் ஒன்றின் வாயிலாக தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனமாக தாபிக்கப்படலாயிற்று. இலங்கையின் விளையாட்டுக்கல்வித் துறையின் முதன்மை நிறுவனமாகத் திகழ்ந்தவாறு விளையாட்டின் வளர்ச்சி கருதி பாரிய பங்களிப்பினை வழங்கிய வண்ணம் விளையாட்டு அறிவினை சமூகமயப்படுத்தும் பணியானது தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் நிறைவேற்றப்படுகின்றது.

தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு வெற்றிகளை அண்மித்துக் கொள்ளுவதற்கு அறிவு, மனப்பாங்கு, மற்றும் திறன்களை அபிவிருத்தி செய்தல், இற்றைப்படுத்தல் அதனைப்போன்று விளையாட்டுத்துறையின் பல்வேறுபட்ட நிலைகளிலுள்ள மானிட வளங்களினை அபிவிருத்தி செய்து இலங்கையின் சகல பிரசைகளுக்கும் செயற்றிறனுடைய வாழ்க்கை ஒன்றினை சொந்தமாக்கிக் கொடுத்தல் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் குறுங்கால மற்றும் நீண்டகால மூலோபாயங்கள் மற்றும் திட்டங்கள் என்பனவற்றின் வாயிலாக நோக்கங்களாகக் கொள்ளப்படுகின்றது.

## 2. தொலைநோக்கு

''இலங்கையில், விளையாட்டுக் கல்வியின் முதன்மை நிறுவனமாதல்''

## 3. பணிக்கடமை

''விளையாட்டுக் கொள்கை வழங்குகைக்குப் பங்களிப்புச் செய்தல், விளையாட்டுத் துறையில் ஈடுபட்டிருக்கும் நபர்களின் தேர்ச்சி, புலமை, ஆற்றல் மற்றும் அறிவு என்பனவற்றை விருத்தி செய்தல் தொடர்பாக விளையாட்டுக் கல்வியினை வழங்குதல் மற்றும் ஆய்வுகளை நடாத்துவதன் வாயிலாக இலங்கையில் விளையாட்டுக் கல்வியினை முன்னெடுத்தல்''.

## 4. நோக்கங்கள்

1. விளையாட்டுத்துறையின் அவ்வவ் காலங்களுக்கு ஏற்ற தேவைகளை இனங்கண்டு விளையாட்டுக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்தலின் பொருட்டு பாடநெறிகளை நிர்மாணித்தல், திட்டமிடல் மற்றும் செயற்படுத்துதல்.
2. விளையாட்டுக் கல்வியின் அபிவிருத்தியின் தரப்படுத்துதல் தொடர்பாக தேவையான நிபுணத்துவத்தினை காலத்துக்கு ஏற்றபடி முறைமைப்படுத்துவதுடன் நடைமுறைப்படுத்துதல்.
3. புதிய விளையாட்டு அறிவினை கிராமிய மட்டத்தில் வழங்குவதனை நோக்காகக் கொண்டு குறுகியகால பாடநெறிகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக நவீன விளையாட்டு அறிவினை கிராமப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லல்.

## 5. பிரதான பணிகள்

| தொ. இல | பணிகள் | இலக்குக் குழு |
|---|---|---|
| 01 | • 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்பவும் அவ்வாறே தேசிய தொழிற்றகைமை (NVQ IV, NVQ V, NVQ VI) தொடர்பாக ஏற்புடையதாக அமையும் வண்ணம் விளையாட்டுப் பாடநெறிகளை நடாத்துதல்.<br>• உயர் பயிற்றுவிப்பாளர் பாடநெறி (NVQ VI)<br>• விளையாட்டு டிப்ளோமா பாடநெறி (NVQ V)<br>• உடற்றகவுநிலை போதனாசிரியர் பயிற்சிப் பாடநெறி (NVQ IV).<br>• விளையாட்டு முகாமைத்துவம், விளையாட்டு உபாதைகள் முகாமைத்துவம் உள்ளடங்களாக துறைகளைத் தழுவியதாக விளையாட்டு பாடநெறிகள் / விளையாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். | பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள், கல்வியமைச்சின் உடற்கல்வி ஆசிரியர்கள், பாதுகாப்புப் பிரிவுகளின் உடற்பயிற்சிப் போதனாசிரியர்கள், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் போட்டியில் ஈடுபட்ட விளையாட்டு வீரர்கள், விளையாட்டு ஊடகவியலாளர்கள். |
| 02 | விளையாட்டுத் தகவல் மத்திய நிலையமொன்றாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | விளையாட்டுத்துறையுடன் தொடர்புடைய அனைத்துப் பிரிவினர் |
| 03 | விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல். | விளையாட்டுத்துறையுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்கள். |
| 04 | உடல்நல நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல். | உடல்நலம் மற்றும் அது தொடர்பான அறிவினைப் பெற்றுக்கொள்ளுவதற்கு எதிபார்த்துள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் உள்ளடங்களான பொதுமக்கள். |
| 05 | விளையாட்டுச் சேவையின் உத்தியோகத்தர்கள் தொடர்பாக வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளை நடாத்துதல். | விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் மற்றும் மாகாண விளையாட்டு திணைக்களத்தின் பயிற்றுவிப்பாளர்கள், மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர்கள். |
| 06 | விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களது புலமை, உளப்பாங்கு என்பனவற்றை அபிவிருத்தி செய்து அவர்கள் தொடர்பாக பயிற்றுவிப்பாளர் பதிவுச் சான்றிதழ்களை விநியோகித்தல். | சகல தேசிய விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் அவற்றிற்குரிய பயிற்றுவிப்பாளர்கள். |
| 07 | கல்வி அமைச்சின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களின் பொருட்டு வினைத் திறன்காண் தடைதாண்டலாக விளையாட்டு டிப்ளோமா பாடநெறியொன்றினை நடாத்துதல். | கல்வி அமைச்சிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட புதிய விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள். |
| 08 | முப்படைகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோரைப் பயிற்றுவிக்கும் உடற்பயிற்சி போதனாசிரியர்கள் தொடர்பாகப் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதல். | முப்படைகளின் மற்றும் பொலிஸினது உடற்பயிற்சி போதனாசிரியர்கள். |
| 09 | பாடசாலை மாணவர்களின் 13 வருட கல்வியினை உறுதிப்படுத்துதல் தொடர்பாக நடாத்தப்படும் NVQ IV மட்ட விளையாட்டுப் பாடநெறி. | உயர்தரத்தினைக் கற்பதற்காக தகைமையற்ற விளையாட்டு தொடர்பாக திறமைகொண்ட பாடசாலை மாணவர்கள். |

6. மனிதவளம் பற்றிய சுருக்க விபரம் :

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| சிரேட்ட | **07** | 01 | 06 | - |
| மூன்றாம் நிலை | **11** | 03 | 08 | - |
| இரண்டாம் நிலை | **29** | 19 | 10 | - |
| ஆரம்ப நிலை | **07** | 04 | 03 | - |
| **மொத்தம்** | **54** | 27 | 27 | - |

7. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

| தொடர் இலக்கம் | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி (ரூ.மில்.) | 2024.12.31 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்றம் (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் % | பௌதீக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| 1 | விளையாட்டை நவீனமயப்படுத்தும் செயற்றிட்டம் | 19.30 | 17.88 | 93 | 93 |
| 2 | மனிதவள அபிவிருத்தி | 0.80 | 0.43 | 55 | 55 |
| 4 | பொறி, இயந்திரம், உபகரணம் | 3.70 | 2.89 | 78 | 78 |
| 5 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் | 1.20 | 0.93 | 78 | 78 |
| | மூலதனச் சொத்து புனர்நிர்மாணம் மற்றும் மேம்படுத்தல் | | | | |
| 6 | கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 5.00 | 4.83 | 97 | 100 |
| 7 | பொறி, இயந்திரம், உபகரணம் | 1.00 | 0.34 | 34 | 35 |
| 8 | வாகனங்கள் | 0.50 | 0 | 0 | 0 |
| | **மொத்தம்** | **31.50** | **27.30** | **86.67** | **87** |

8. ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதியேற்பாட்டினை பயன்படுத்தும் செயற்சாதனை 2024.12.31 ஆம் திகதிக்கு

| விபரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு (ரூ.மில்.) | 2024.12.31 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்றம் | |
|---|---|---|---|
| | | (ரூ.மில்.) | % |
| **மீண்டுவரும் செலவினம்** | 64.00 | 42.5 | 66.40 |
| **மூலதனச் செலவினம்** | 31.50 | 25.9 | 82.22 |
| **மொத்தம்** | **95.50** | **68.4** | **71.62** |

## 09. 2024 ஆம் வருடத்தினுள் பெற்றுக்கொண்ட விசேட வெற்றிகள்

1. பாடசாலை விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் தொடர்பாக விசேட விளையாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று 2024.05.20 ஆம் திகதியிலிருந்து 22 ஆம் திகதி வரை நடாத்தப்படுவதற்கு இயன்றது.



**பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் விசேட சந்தர்ப்பங்கள்**

2. கடற்கரையினைப் பயன்படுத்தி விளையாட்டிற்கு அவசியமான பலம் மற்றும் தகைமைகளை விருத்திசெய்து கொள்ளுதல் தொடர்பாக பயிற்றுவிப்பாளர்களுக்குச் செயன்முறை அறிவினை பெற்றுக்கொடுப்பதன் பொருட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றினை நடாத்துவதற்கு இயன்றது. இந் நிகழ்ச்சித்திட்டம் மாத்தறை கடற்கரையினைப் பயன்படுத்தி 2024.06.26 ஆம் திகதியிலிருந்து 2024.06.29 ஆம் திகதி வரையில் நடாத்தப்பட்டது.



**பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் விசேட சந்தர்ப்பங்கள்**

3. தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவம் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் அவர்களின் முதன்மையில் 2024.05.07 ஆம் திகதி விளையாட்டு அமைச்சின் டங்கன் வைற் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது.



2024 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட விளையாட்டுக கற்கைநெறிகள் மற்றும் பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை. – 31

வழங்கப்பட்ட கல்வி மற்றும் புலமைகளின் எண்ணிக்கை. - 1531

**10. எதிர்கால இலக்குகள் 2025 - 2028**

1. 2028 ஆம் வருடத்தில் நடாத்தப்படவுள்ள ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் நுழைவு அடைவு மட்டத்தினை அண்மிக்கக் கூடிய விளையாட்டுக்களைப் பயிற்றுவிக்கும் பயிற்றுவிப்பாளர்களுக்கு புதிய தொழில்நுட்ப அறிவினை பெற்றுக்கொடுத்தவாறு ஏற்புடைய இலக்கினை நோக்கி அண்மிப்பதற்கு வெளிநாட்டு வளவாளர்களை ஈடுபடுத்தி குறுகியகால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

2. 2026 ஆம் வருடம் ஆசிய மற்றும் பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான விளையாட்டு விழாக்களில் பதக்கங்களை வெற்றிகொள்ளக் கூடிய விளையாட்டுக்களை இலக்காகக் கொண்டு உயர் பயிற்றுவிப்பாளர் பாடநெறிகளை நடாத்துதல்

3. உடற்பயிற்சி மத்திய நிலையங்களின் பயிற்சிப் போதனாசிரியர்களாக மற்றும் அது தொடர்பாக அக்கறையினைக் கொண்ட பாடசாலையினை விட்டு நீங்கிய இளைஞர் யுவதிகளை இலக்காகக் கொண்டு தேசிய மற்றும் சர்வதேச தொழிற்சந்தையில் பிரவேசிப்பதற்கு இயலுமாகும் வண்ணம் அப்பியாசங்கள் மற்றும் அதன் உபகரணப் பயன்பாடு பற்றிய சரியான அறிவினைப் பெற்றுக்கொடுத்தலின் பொருட்டு பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதல்.

# இலங்கை ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவனம

# 2024
# முன்னேற்ற அறிக்கை

## இலங்கை ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவனம்

## 01. அறிமுகம்

தற்போது தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுத்துறை வேகமாக வணிகமயமாகிவிட்டது. இதன் காரணமாக வெற்றியை மாத்திரமே இலக்காகக் கொண்டு இன்றைய விளையாட்டு வீர வீராங்கணைகள் விளையாட்டில் ஈடுபட முனைகின்றனர். இதன்போது நிலவும் கடுமையான போட்டியின் காரணமாக சட்டவிரோதமான முறைகளை கையாண்டு வெறுமனே வெற்றிகளையே அடைய ஆசைப்படுகின்றனர்.

இதன் காரணமாக விளையாட்டுக்களில் தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தங்கள் களத்திற்கு வந்துள்ளன. தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுகளில் இத்தடைசெய்யப்பட்ட பொருட்களின் பாவனையானது விளையாட்டின் நம்பகத்தன்மையைப் பாதிப்படையச்செய்வதோடு மட்டுமன்றி இறுதியில் நாடென்ற ரீதியில் சர்வதேச சமூகத்தின் மத்தியில் அபகீர்த்தியை ஏற்படுத்துகிறது மேலும்,ஆற்றல்மிக்க நாட்டின் எதிர்கால சந்ததியின் ஆரோக்கியத்தை சீரழிவடையச்செய்கின்றது.

சர்வதேச அளவில் தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தப் பாவனையை தடுக்கும் வகையில் கடந்த 1999ம் ஆண்டு முதல் கனடாவின் மொன்றியல் நகரத்தை கேந்திர நிலையமாகக் செயற்பட்டு வரும் உலக ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையைத் தொடர்ந்து 2013 ஆம் ஆண்டுவரை விளையாட்டுக்களில் ஊக்குப்பதார்த்தப் பாவனையை தடுத்தல் மற்றம் அது சம்பந்தமான பிரதிநிதித்துவமானது விளையாட்டு வைத்திய நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

இவ்விடயத்தைக் கையாள்வதற்காக சுயாதீனமாக இயங்கும் தனியான நிறுவனமொன்றின் தேவைப்படானது ஏற்கனவே இருந்ததன் காரணமாக 2013 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் திகதியன்று “2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச்சட்டம்” நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் தடைசெய்யப்பட்ட பொருட்கள் மற்றும் முறைகளை இலங்கை விளையாட்டிலிருந்து வேரோடு அழித்தல் என்ற வாசகத்தை தலைப்பாகக்கொண்ட இலங்கை ஊக்குப்பதார்த்தப்பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது ஒரு சட்டபூர்வ வாரியமாக உருவாக்கப்பட்டது.

தற்போது இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் சட்டபூர்வ வாரியமாக செயற்பட்டுவருகின்றது.

விளையாட்டு வீர வீராங்கணைகள் விளையாட்டின்போது பயன்படுத்தக்கூடாத தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தங்களை வேரோடு அழித்தல் மற்றும் சிறந்த தூய்மையான விளையாட்டை ஊக்குவித்தல் ஆகியவை இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பிரதான நோக்கங்களாகும்.

## 02. நோக்கு

சரியான மற்றும் நியாயமான வெற்றிக்காக ஊக்குப்பதார்த்தப்பாவனையற்ற இலங்கை விளையாட்டிற்குச் சக்தியூட்டல்.

## 03. பணிக்கூற்று

உலக போதைப்பொருள் தடுப்புச் சட்டம் மற்றும் இதன் ஒழுங்கு விதிகளுக்கமைய **2013** இலக்கம் **33** கொண்ட விளையாட்டுக்களில் ஈடுபடும் போது ஊக்குமருந்து பயன்பாட்டிற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தை அமலபடுத்தல்.

## 04. நோக்கம்

இலங்கையின் தேசிய ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான கொள்கைக்கு இணங்க செயற்படுவதை ஆதரித்தல்.

### துணை நோக்கங்கள்

- தேசிய ஊக்குப்பதார்த்தக் கொள்கை குறித்து அரசாங்கம், விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் தேசிய ஒலிம்பிக் குழுவிற்கு தெரியப்படுத்துதல்.
- 2021 உலக ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சர்வதேச நியமங்களை இலங்கை முழுவதும் நடைமுறைப்படுத்துவதில் முன்னணி வகித்தல்.
- தேசிய ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான கொள்கைக்கு இணங்குவதற்காக அனைத்து விளையாட்டுச் சங்கங்கள்/நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்குதல்.
- வணிகரீதியாக தொடர்புபடக்கூடிய உலக ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பிராந்திய ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நிறுவனங்களோடு புதுப்பிக்கப்பட்ட ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நடைமுறைகள் மற்றும் நிபுணத்துவ அறிவை பகிர்ந்துகொள்ளல்.
- WADA மற்றும் iNADO உட்பட பலம்வாய்ந்த ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நிறுவனங்களோடு ஒத்துழைப்புடன் செயற்படுதல்.
- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த உயர்மட்ட விளையாட்டு நிகழ்வுகளில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நடவடிக்கைகள் குறித்த நிபுணத்துவ ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலை வழங்குதல்.
- அனைத்து முக்கிய போட்டி நிகழ்வுகள் சம்பந்தப்பட்ட பொறுப்புகளை உலகத்தர நியமங்களுக்கமைவாக நிறைவேற்றுதல்.
- தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டை தடுப்பதற்கான அபாய அடிப்படையிலான ஒருங்கிணைந்த திட்டத்தை வழங்குதல்.
- இலங்கையில் விளையாட்டுக்களில் தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தப் பாவனையின் அபாயங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்டு தொடர்ந்து மதிப்பீடு செய்தல்.
- சட்ட அமலாக்கம் உட்பட நடைமுறையிலுள்ள முகாம்கள் மூலம் புலனாய்வுத் தகவல்களை சேகரிப்பதில் திறன்களை மேம்படுத்தல்.
- இலங்கையின் விளையாட்டு மற்றும் கல்வித் தத்துவம் வாயிலாக கல்வித்திட்டங்கள் வாயிலாக தடுப்பு அடிப்படையிலான நன்னெறிகளை வலுவடையச்செய்தல், மிகப் பொருத்தமான நடைமுறைக்கருவிகள் மற்றும் ஆதரவு வழங்கும் சேவைகளை மேம்படுத்துதல் முலமாக ஆதரவு வழங்குதல்.
- உளவுத்துறைசார் விபரங்களுக்கு முன்னுரிமை வழங்கக்கூடிய ஆற்றல்மிக்க மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பரிசோதனைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதி மீறல்களை தீவிர விசாரணைக்குட்படுத்தி வழக்குத்தாக்கல் செய்தல்.
- சர்வதேசக்கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் பயன்படுத்தி விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு ஒரு சமநிலையான விளையாட்டுச்சூழலை மேம்படுத்

## 05. பிரதான செயற்பாடுகள்

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் முக்கிய செயற்பாடுகளாக ,

- ஊக்குமருந்து சோதனைகளை நடாத்துதல்.
  விளையாட்டுகளில் வீரர்களின் சிறுநீர் மற்றும் இரத்த மாதிரிகளைப் பயன்படுத்தி ஊக்கமருந்து சோதனைகள் நடத்தப்படுகின்றன. இது போட்டிகளின்போதும் போட்டிகளுக்கு வெளியே ஆகிய இரு முறைகளிலும் சோதனைகள் நடாத்தப்படுகின்றன. இவ்வாறு பெறப்படும் மாதிரிகள் உலக ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்படும் வெளிநாட்டு ஆய்வுகூடங்களுக்கு அனுப்பப்பட்டு முடிவுகள் பெறப்படுகின்றன. இங்கு தடைசெய்யப்பட்ட ஊக்குமருந்து பாவனை உறுதிசெய்யப்படும் பட்சத்தில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டனை வழங்கப்படும்.

- விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகளை நடாத்துதல்.
  விளையாட்டுகளில் ஊக்குப்பதார்த்த ஒழிப்பு என்பது இலங்கைக்கு இன்னும் புதிய தலைப்பாகும். எனவே விளையாட்டில் ஆர்வமுள்ள அனைத்து தரப்பினராகிய விளையாட்டு வீர வீராங்கணைகள், பயிற்றுவிப்பாளர்கள் , பாடசாலை வீர வீராங்கணைகளின் பெற்றோர் உட்பட விளையாட்டு ஆர்வலர்கள் என அனைத்து தரப்பினருக்கும் விழிப்புணர்வு வழங்கப்படுகிறது.

- ஊக்குப்பதார்த்தம் தொடர்பான பரிசோதனைகளை நடாத்துதல்.
  இலங்கை போன்ற கிழக்காசிய நாடுகளில் இன்றும் தேசிய வைத்திய முறைகள், ஆயுர்வேத மருத்துவம் மற்றும் உள்ளூர் உணவு மற்றும் பான வகைகளை பயன்படுத்துகின்றனர். இங்கு, இந்த மருந்துகள் மற்றும் உணவுகளில் இப் பொருட்கள் உள்ளனவா என்பதைக் கண்டுபிடித்து அவற்றின் உள்ளடக்கத்தை சரிபார்த்து ஆய்வுக்கட்டுரைகளைத் தயாரித்து அந்த அறிவை சர்வதேச சமூகத்துடன் பரிமாற்றிக்கொள்ளப்படும்.

## 06. மனித வள விபரம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மைக்காக 29 பணியாளர்களைக் கொண்ட குழாமுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. பணியாளர் குழாமை பூர்த்தி செய்வதற்கு 11 பேர் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்.

| | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை | தற்போதுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை | தற்காலிக அடிப்படையில் | வேலைவாய்ப்புகள் | மேலதிகமான |
|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட | 10 | 7 | 1 | 2 | 2 |
| மூன்றாம் நிலை | 3 | 1 | | 2 | 2 |
| இரண்டாம் நிலை | 9 | 4 | | 5 | 5 |
| முதன்மை நிலை | 7 | 5 | | 2 | 2 |
| **மொத்தம்** | **29** | **17** | **1** | **11** | **11** |

## 07. அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம்

| எண் | கருத்திட்டத்தின் பெயர் | | ஒதுக்கீட்டுத்தொகை(ரூ.மி) | 2024.12.31 அன்று நிதி முன்னேற்றம் (ரூ.மி) | நிதி முன்னேற்றம் % | பௌதீக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|---|
| 01 | மூலதன சொத்துக்களின் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடு | | 4.5 | 1.47 | 33 | 42 |
| 02 | மூலதன உபகரணங்களை கையகப்படுத்துதல் | கட்டிடங்கள் மற்றும் கட்டுமானம் | 6.00 | 2.7 | | 50 |
| | | பயிற்றுவிப்பு உபகரணங்கள் மற்றும் பிற உபகரணங்களைப் பெறுதல் | 1.20 | 1.2 | 100 | 100 |
| | | ஆய்வுகூட உபகரணங்களை பெற்றுக்கொள்ளல் | 1.55 | 1.55 | 100 | 100 |
| 03 | திறன் மேம்பாடு | | 1.20 | 0.32 | 27 | 86 |
| 04 | ஊக்குமருந்து சோதனைகள் | | 18.00 | 16.41 | 91 | 90 |
| 05 | ஊக்குப்பதார்த்தம் தொடர்பான கல்வி | | 1.05 | 0.87 | 83 | 97 |
| 06 | அமலாக்கம் மற்றும் செயற்படுத்தல் | | 1.50 | 1.44 | 96 | 90 |
| 07 | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | | 14.00 | 9.60 | 69 | 80 |
| 08 | சூரிய கலங்களை நிறுவுதல் | | 15.00 | 0.02 | 0.1 | 45 |
| | **மொத்தம்** | | **64.00** | 35.62 | 56 | |

## 08. 2024.12.31 அன்று ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கிட்டின் பயன்பாட்டின் செயற்திறன்

| விபரம் | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் (ரூ.மி) | 2024.12.31 அன்று நிதி முன்னேற்றம் | |
|---|---|---|---|
| | | (ரூ.மி) | (%) |
| நடைமுறை செலவுகள் | 67.1 | 50.3 | 74 |
| மூலதன செலவுகள் | 64.00 | 36 | 56 |
| **மொத்தம்** | **131.1** | **86.3** | **65.82** |

## 09. 2024 ஆம் ஆண்டில் அடையப்பட்ட இலக்குகள் மற்றும் சாதனைகள்

**விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்துதல்.**




**தடைசெய்யப்பட்ட பொருட்கள் நாட்டில் பரவாமல் தடுப்பதற்காக கால்துறை அதிரிகளின் செயற்பாடுகள் மற்றும் சட்டங்கள் செயற்படுத்தப்படும் முறை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்.**



**அகில இலங்கை பாடசாலை விளையாட்டு நிகழ்வுகளில் மற்றும் பிற விளையாட்டு நிகழ்வுகளில் விளையாட்டு வீரர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு கண்காட்சி சாவடிகள் மூலம் விழிப்புணர்வு வழங்குதல்**




**ஆராய்ச்சி பிரிவு மூலம் பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டு பரிசோதனைகளை நடாத்துதல்.**




## 10. எதிர்கால இலக்குகள் 2025-2028

- 2028 ஆம் ஆண்டளவில் ஆசிய பிராந்தியத்தில் ஊக்குமருந்து எதிர்ப்புத்துறையில் மிகவும் தொழில்முறை மற்றும் நிலையான அமைப்பாக மாற்றமடைவதற்கான ஒத்துழைப்புத் திட்டம் , சட்ட கட்டமைப்பை வலுப்படுத்துதல் , நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு மற்றும் தன்னம்பிக்கையை மேம்படுத்தல்.
- 2028 ஆம் ஆண்டளவில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டெதிர்ப்பு செயற்பாடுகள் தொடர்பாக அனைத்து இலங்கை விளையாட்டு வீர வீராங்கணைகள் மற்றும் விளையாட்டு வீர வீராங்கணைகளுக்கு விழிப்புணர்வை வழங்குவதற்கான புதிய கருவிகளுடன் வடிவமைக்கப்பட்ட கல்வியை மேம்படுத்தல் , கண்காணித்தல் , அமல்படுத்தல் , மற்றும் ஊக்குப்பதார்த்தப் பாவனையை அறிக்கைப்படுத்தல் மற்றும் உறுதிபடுத்தல்.
- 2028 ஆம் ஆண்டளவில் ஊக்குப்பதார்த்த துறையில் ஆராய்ச்சி நடத்துவதற்கான மையமாக மாற்றமடைவதற்கு ஊக்குப் பதார்த்த பாவனை தொடர்பான சமூக மற்றும் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல், வசதிகளை அமைத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் விநியோகத்தை நெறிப்படுத்தல்.
- நவீன ICT கருவியைப் பயன்படுத்தி 2026 க்குள் தகவல் அமைப்பை நிறுவுதல்.
- ஊக்குமருந்து சோதனைகளை நடாத்துதல் மற்றும் உள்ளக பெறுபேறு மேலாண்மையை வலுப்படுத்துவதன் மூலம் 2028 ஆம் ஆண்டில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிடதிர்ப்பு விதிமீறுகைகளை( ADRVs) குறைவடையச்செய்தல்.
- 2028 ஆம் ஆண்டளவில் சட்ட விரோதமான பதார்த்தங்களை கட்டுப்படுத்துவதற்கான சட்டப்பூர்வ மையமாக மாற்றமடைவதற்காக ஊக்குப்பதார்த்தப் பாவனையின்போதான சட்ட அமலாக்க அமைப்பை வலுப்படுத்தல்.

# சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபை

# 2024
# முன்னேற்ற அறிக்கை

# சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி

## 1. அறிமுகம்

சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி நம்பிக்கை நிதியமொன்றாக 1995.02.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் விளையாட்டுத்துறை அமைச்சுக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டதுடன், 1999 ஏப்ரல் 20 ஆம் திகதி சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபையாக மாற்றியமைப்பதற்கான 1999 இன் 17 ஆம் இலக்க சட்டம் மற்றும் 2017 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2017 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டங்களினால்னால் நிர்வகிக்கப்படுகின்றது.

தற்போது இலங்கையில் அமைந்துள்ள விசாலமான விளையாட்டுத் தொகுதியான சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதியில் விளையாட்டு வீர வீராங்கனைகளுக்குத் தேவையான சர்வதேச தரங்களுக்கமைய விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் 5000 ஆசனங்களைக் கொண்ட குளிரூட்டப்பட்ட, நாட்டில் அமைந்துள்ள விசாலமான உள்ளக விளையாட்டரங்கு இந்த தொகுதியில் அமைந்துள்ளது. இந்த நிறுவனத்தினால் தேசிய விளையாட்டு நிறுவனங்கள், தேசிய விளையாட்டுக் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டிகளுக்கு மாத்திரமன்றி முப்படைகள், வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரச மற்றும் பகுதியளவு அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களினால் நடாத்தப்படும் விளையாட்டு மற்றும் விளையாட்டு சாராத பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்காக பயன்படுத்திக்கொள்ளப்படுகின்றது.

## 2. <u>தூர நோக்கு</u>

தெற்காசியாவின் முதல் தர சர்வதேச மட்டத்திலான விளையாட்டு வசதிகளுடனான விளையாட்டுத் தொகுதியாக சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபையை பரிணமிக்கச் செய்தல் மற்றும் அதன் ஏனைய விளையாட்டுத் தொகுதிகளை முன்னேற்றுவதன் ஊடாக இலங்கையின் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கான வசதிகளை சலுகை அடிப்படையில் வழங்குதல்

## 3. செயற்பணி

சர்வதேச மட்டத்திலான வசதிகளை வழங்குதல் ஊடாக இலங்கையின் விளையாட்டுத்துறையின் முன்னேற்றத்திற்கு பங்களிப்புச் செலுத்தல் மற்றும் இலங்கை விளையாட்டு வீர வீராங்கனைகளின் திறமைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான வசதிகளைக்கொண்ட ஆசிய கண்டத்தின் சர்வதேச மட்டத்திலான வசதிகளுடனான முன்னணி சர்வதேச விளையாட்டுத்தொகுதியாக மாற்றியமைத்தல்.

## 4. நோக்கங்கள்

- சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதியின் முகாமை, பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதியின் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குச் செயற்பாடுகள் மற்றும் வசதிகளை மேம்படுத்தல், விளையாட்டுத்துறை பொருளாதாரம் மற்றும் சுற்றுலாத்துறை வர்த்தகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
- இந்த நாட்டின் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்காக சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதிக்கு வசதிகளை வழங்குதல்.

- சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை பலப்படுத்துவதற்கான பொறிமுறையொன்றாக விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு செயற்பாடுகளுக்குப் பயன்படுத்திக்கொள்வதனை உறுதிப்படுத்தல்.

5. **பிரதான அலுவல்கள்**

- சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதியின் முகாமை, பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி செய்வதனை விளையாட்டுத்துறை நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படல், விளையாட்டுத்துறைக்காக சலுகை விலையில் வசதிகளை வழங்குதல் போன்ற பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக அதிகார சபையினால் கீழ் குறிப்பிடப்படும் செயல்முறைகள் பின்பற்றப்பட்டதுடன் விளையாட்டுக் கழகங்கள், பாடசாலை விளையாட்டுக் கழகங்கள் மற்றும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சலுகை விலையின் கீழ் சேவைகள் மற்றும் வசதிகள் வழங்கப்படுகின்றன.
- தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை பிரதிநிதித்துவப்படுத்துவதற்குத் தேவையான தட கள விளையாட்டு வீர வீராங்கனைகளைப் பயிற்றுவிப்பதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.
- பகல் மற்றும் இரவு காலங்களில் சர்வதேச மட்டத்திலான போட்டிகளை நடாத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.
- குறைந்த வசதிகளைக் கொண்ட பாடசாலைகள் மற்றும் கிராமிய மட்டத்தில் திறமை காட்டும் வீர வீராங்கனைகளின் திறமைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கி அவர்களது முன்னேறுவதற்கு தேவையான வசதிகளை வழங்குதல்.
- தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான நீச்சல் போட்டிகளை நடாத்துவதற்குத் தேவையான நீச்சல் மற்றும் சுழியோடுதல் தடாகங்கள் வசதிகளை வழங்குதல்.
- விளையாட்டுக்கள் அல்லாத போட்டிகளான பரீட்சைகள், கருத்தரங்குகள், மாநாடுகள், வைபவங்கள் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நடாத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.
- பயிற்சிப் பட்டறைகளை ஏற்பாடு செய்தல்.

6. **மனித வளங்கள் பற்றிய விவரக் குறிப்பு**

| | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை | பணியாற்றும் ஆளணி | வெற்றிடம் | மேலதிகம் |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட | 11 | 4 | 7 | 0 |
| மூன்றாம் நிலை | 11 | 9 | 2 | 0 |
| இரண்டாம் நிலை | 74 | 49 | 25 | 0 |
| ஆரம்ப நிலை | 281 | 186 | 95 | 0 |
| **மொத்தம்** | **377** | **248** | **129** | **0** |

7. **அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம்**

| இல. | திட்டத்தின் பெயர் | நிதி ஒதுக்கீடு (மி.ரூ.) | 2024.12.31 ஆம் திகதியன்று நிதிசார் முன்னேற்றம் (மி.ரூ.) | நிதிசார் முன்னேற்றம் மூ | பௌதிக முன்னேற்றம்மூ |
|---|---|---|---|---|---|
| 1 | வெளியக விளையாட்டரங்கின் ஊடகக் கட்டிடம் மற்றும் பார்வையாளர் அரங்கின் கூரையை புதுப்பித்தல் | 54 | 20.24 | 37 | 45 |
| 2 | உள்ளக விளையாட்டரங்கை புதுப்பித்தல் | 37 | 9.37 | 6.2 | 35 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | நீச்சல் தடாகத்தின் பார்வையாளர் அரங்கிற்கு புதிதாக கதிரைகளை கொள்வனவு செய்து பொருத்துதல் (கட்டம் 1) | 13.7 | 12.74 | 93 | 100 |
| 4 | நீச்சல் தடாகத்தின் பார்வையாளர் அரங்கிற்கு புதிதாக கதிரைகளை கொள்வனவு செய்து பொருத்துதல் (கட்டம் 2) | 18 | - | - | 12 |
| 5 | வெளியக விளையாட்டரங்கிற்கு பொது அழைப்பு கட்டமைப்பொன்றைக் கொள்வனவு செய்தல் | 9.3 | - | - | 7 |
| 6 | போகம்பரை விளையாட்டரங்கின் வாகனத் தரிப்பிடத்தை புதுப்பித்தல் | 18 | 16.24 | 90.22 | 100 |
| 7 | போகம்பரை விளையாட்டரங்கை புதுப்பித்தல் | 28 | - | - | 12 |
| 8 | வெளியக விளையாட்டரங்கைச் சுற்றியுள்ள வேலியை பழுதுபார்த்தல் | 18 | - | - | 20 |
| 9 | உள்ளக விளையாட்டரங்கின் தீயணைப்பு கட்டமைப்பை புதுப்பித்தல் | 14.5 | 12.64 | 87.17 | 95 |
| 10 | ஊஊஊவுஏ கெமரா அமைப்பை புதுப்பித்தல் | 2.0 | 0.29 | 14.5 | 2 |
| 11 | விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு | 9.5 | - | - | 12 |
| 12 | ஈட்டியெறிதல் வீச்சை நிர்மாணித்தல் | 2.0 | - | - | 0 மூ |
| 13 | ஷவிளையாட்டுத்துறை ஹோட்டலின் சமயலறைக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் | 9.5 | - | - | 3மூ |
| 14 | உள்ளக விளையாட்டரங்கின் உட்கூரையைப் பழுதுபார்த்தல் (ளூரடி யுசநயெ) | 9.5 | - | - | 1மூ |
| 15 | நிறைவு செய்யப்படாத திட்டங்கள் | 84 | 77.61 | 93 | 90 |

**8. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்திக்கொள்ளல் தொடர்பான செயலாற்றுகை - 2024.09.30 ஆம் திகதி**

| விபரம் | நிதி ஒதுக்கீடு (மி.ரூ.) | 2024.09.30 ஆம் திகதியன்று நிதிசார் முன்னேற்றம் | |
|---|---|---|---|
| | | (மி.ரூ.) | % |
| மீண்டெடும் செலவினம் | 487.3 | 174.66 | 37.56 |
| மூலதனச் செலவினம் | 320.00 | 149.13 | 46.6 |
| **மொத்தம்** | **807.73** | **323.79** | **40.09** |

## 9. 2024 ஆம் ஆண்டில் பெற்றக்கொண்ட முக்கிய வெற்றிகள்

1. 2024.12.31 ஆம் திகதியன்று அதிகார சபையின் விளையாட்டு மற்றும் விளையாட்டுக்கள் அல்லாத நிகழ்ச்சிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக்கொடுத்தமை மூலம் 244.86 மில். ரூபா வருமானம் உழைக்கப்பட்டுள்ளது.

2. சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபையின் விளையாட்டுப் பிரிவினூடாக கொழும்பு வடக்கு பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் நீச்சல் திறமைகளை இனங்கண்டுகொள்ளும் நிகழ்ச்சித் திட்டமொன்று 2024.05.28 ஆம் திகதி நடாத்தப்பட்டதுடன், அதில் 300 பாடசாலை மாணவர்கள் பங்கேற்றனர். மெய்வல்லுனர், வொலிபோல், கால்பந்து, வலை பந்து மற்றும் நீச்சல் ஆகிய விளையாட்டுக்களுக்காக தேர்ச்சி பெற்ற பயிற்றுவிப்பாளர்களின் பங்கேற்புடன் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது.







3. நீச்சல் தடாகத்தின் நீரை சுத்திகரிக்கின்ற கட்டமைப்பு மற்றும் உந்தி நிலையத்தை புதுப்பிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அதனூடாக நீச்சல் தடாகத்திற்காக தற்போது மாதத்திற்கு 500 அலகுகள் நீருக்காக செலவாகின்ற தொகையை மீதப்படுத்திக்கொள்ள முடியுமென்பதோடு, நீச்சல் தடாகத்தின் நீர் கொள்ளளவான 34 இலட்சம் லீட்டர் நீரை தினமும் சுத்திகரித்து மீண்டும் பயன்படுத்துவதற்கு முடியும். இதனால் திட்டம் நிறைவடைந்தவுடன் நீர் தடாகங்களுக்காக நீரை வழங்குவதற்காக அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற செலவை மீதப்படுத்திக்கொள்வதற்கு முடியுமாக இருக்கும். (கருத்திட்டத்திற்கான செலவு 49.19 மில்.ரூபா)







## 10. எதிர்கால இலக்குகள் ( 2025 - 2028)

சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான விளையாட்டு வசதிகளை வழங்குதல் தொடர்பாக இலங்கையின் முன்னணி விளையாட்டுத் தொகுதியொன்றாக இருப்பதனால் விளையாட்டுத்துறையின் முன்னேற்றம் மற்றும் அதன் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பை வழங்குதற்கான நிருவாகம் சார்ந்த அலுவல்களை நிறைவேற்றல் சம்பந்தமாக எதிர்வரும் சில வருடங்களில் கீழ் குறிப்பிடப்படும் இலக்குகளை அடைந்துகொள்ளல் மீது அதிக கவனத்தைச் செலுத்துகின்றது.

1. நவீன விளையாட்டு வசதிகளை வழங்குவதற்கு தேவையான பௌதிக மற்றும் மனித வளங்களை அபிவிருத்தி செய்தல்.
2. பயிற்சி பெறல் மற்றும் விளையாட்டுப் போட்டிகளுக்காக விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்/ பராமரித்தல்.
3. வளவினுள் காணப்படுகின்ற விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தல் / பயன்படுத்துவோரின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் சிறந்த விளையாட்டுக் கலாசாரமொன்றை ஏற்படுத்துவதற்கு ஊக்குவித்தல்.
4. வீர வீராங்கனைகளுக்கு தரமான சேவையொன்றை வழங்குதல் மற்றும் பயிற்சி பெறுபவர்களுக்கு தகைமை பெற்ற ஆலோசகர்கள் / பயிற்றுவிப்பாளர்களை தொடர்புபடுத்தல்.
5. அதிகார சபையின் விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்துவதனூடாக் வருமானத்தை அதிகரித்து அதன் மூலம் அரசாங்கத்தினால் நிறுவனத்திற்காக மேற்கொள்ளப்படுகின்ற செலவைக் குறைத்தல்.

6. விளையாட்டுப் போட்டிகளுக்காக விளையாட்டு மைதானத்தை முகாமைப்படுத்தல்/ நீச்சல் தடாகங்களை முகாமைப்படுத்தல் / விளையாட்டு வசதிகளை வழங்குவதற்காக வெளி நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப பயிற்சியை வழங்குதல்.
7. நாட்டில் பாடசாலைகள், கிளப்கள் மற்றும் விளையாட்டுத் தொகுதிகளின் விளையாட்டு வசதிகள் முகாமைத்துவத்திற்கான ஆலோசனைகள் மற்றும் தொழில்நுட்ப உதவியை வழங்குதல்.
8. விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நிறுவன வளவினுள் காணப்படுகின்ற விற்பனைக்கூடத்தின் விற்பனை வருமானத்தை அதிகரிப்பதனூடாக 2026 ஆம் ஆண்டிறுதியாகும்போது செலவுகளை சமப்படுத்தல் மட்டத்திற்கு கொண்டுவரல்.
9. வருமானத்தை அதிகரித்துக்கொள்வதனூடாக அரசாங்கத்திற்கு சுமையின்றி ஆளுக்கான வேதனாதிகள் அதிகார சபையின் வருமானத்தினூடாக செலுத்துவதற்கான ஆற்றலை விருத்தி செய்துகொள்ளல்.
10. விளையாட்டு வசதிகளை வழங்குவதில் முன்னோடியாக சர்வதேச தரங்களுக்கமைய அதிகார சபையின் கட்டமைப்பை மேம்படுத்தல்
11. விளையாட்டு வசதிகளை வழங்குதலுடன் தொடர்பான விளையாட்டு தரச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல்.
12. சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபைக்கு சூரிய சக்தி தகடு (ஞழடயச ீயநெட) அமைப்பொன்றை பொருத்துவதனூடாக அதிகார சபையின் மின்சார செலவைக் குறைத்துக்கொள்ளல்.

# விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகம்

# 2024

# முன்னேற்ற அறிக்கை

# விளையாட்டு வைத்திய நிறுவகம்

## 1. அறிமுகம்

இலங்கை விளையாட்டு வீரர்கள் வீராங்கணைகளின் உடல் உள ஆரோக்கியத்தினை பேனுவததற்காக, அவர்களின் நோயினை குணப்படுத்துவதற்காக, உபாதை முகாமைத்துவம், விளையாட்டு போசாக்கு மற்றும் விளையாட்டு உட்பட உற்பயிற்சி வைத்திய விஞ்ஞானம் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கெண்டு நாட்டின் விளையாட்டுத்துறையினை விருத்தி செய்தல் போன்ற விடயங்களை நோக்காக் கொண்டு விளையாட்டு வைத்திய நிறுவகம் தாபிக்கப்பட்டுள்ளது. பாடசாலை மட்டம் தொடக்கம் தேசிய மற்றும் சர்வதேச மட்டம் வரை நடாத்தப்படும் அனைத்து விளையாட்டுப் போட்டித் தொடர்களுக்காக வைத்திய தழுவல்களை வழங்குவதும் விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளுக்கு விளையாட்டிற்குரிய அனைத்து வைத்திய வசதிகளை வழங்குவதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

ஆவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் வெளிநோயாளர் பிரிவு, புணரமைப்புப் பிரிவு, உடற் தகமைப் பிரிவு, உயிரியல் பல்வகை பொறிமுறை மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு ஆகியவற்றுடன் இணைந்து சேவை முன்னெடுக்கப்படுவதுடன் விளையாட்டுத்துறையில் விளையாட்டு வைத்திய விஞ்ஞான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் உலகின் முன்னேற்றமடைந்த நாடுகளில் பயன்படுத்தப்படும் நவீன விளையாட்டு தொழில்நுட்பத்தினை நாட்டில் பயன்படுத்துவதன் மூலம் விளையாட்த்துறையில் சர்வதேச வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதற்கு உயாந்தபட்ச பங்களிப்புக்களை வழங்குதற்கு விளையாட்டு வைத்திய நிறுவகத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மேலும் மானிட செயற்சாதனை விஞ்ஞான ஆய்வுகூடம் தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதன் உயிரியல் பொறிமுறைப் பிரிவு பூர்த்தியடைந்ததைத் தொடர்ந்து நாட்டின் விளையாட்டுத்துறையின் மேம்பாட்டிற்காக அனைத்து வசதிகளும் கொண்ட மானிட செயற்சாதனை விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளையும் விளையாட்டு வீரர்களுக்கு வழங்குதவதற்கு விளையாட்டு வைத்திய நிறுவகத்திற்கு வாய்ப்பு கிடைக்கின்றது.

## 2. நோக்கு

விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி வைத்திய விஞ்ஞானத்தின் முழுமையான சுகாதார சேவைகளை வழங்குதல் மற்றும் ஊக்குவிப்புக்களை மேற்கொள்ளும் முன்னோடியாக செயற்படல்.

## 3. பணிக்கூற்று,

விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி விஞ்ஞானம், சிகிச்சை, ஆராய்ச்சி, கல்வி ஆகிய பிரிவுகள் ஊடாக முழுமையான பிரவேசத்தின் மூலம் வழங்குவது சுகாதார மற்றும் நன்னடத்தையினை ஊக்குவிக்கும் இலங்கையின் அதிசிறந்த கேந்திர நிலையமாக அபிவிருத்தி செய்தல்.

## 4. நோக்கம்

1. அனைத்து விளையாட்டு வீரர்கள் வீராங்கணைகளின் சுகாதார மற்றும் உடற் தகமையை மேம்படுத்துவதன் மூலம் அவர்களின் சர்வதேச மட்டத்தில் விளையாட்டு வீரர்களின் உயரிய மட்டத்திற்கு கொண்டு செல்லுதல்.
2. விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி விளையாட்டு வீரர்கள் வீராங்கணைகளின் இயலுமையினை அடையாளம் கானுதல் மற்றும் அவர்களினால் உரியமையாக்கப்பட்ட இயலுமையினை விருத்தி செய்வதற்காக மானிட செயற்சாதனையினை ஆய்வுகூடத்தினை தாபித்து அதன் மூலம் உயர்ந்தபட்ச பயனை நாட்டின் விளையாட்டு வீரர்களுக்கு வழங்குதல்.
3. விளையாட்டு வீரர்கள் வீராங்கணைகளின் முழுமையான பங்கேற்புடன் வைத்தி பரிசோதனை நடாத்துவதன் மூலம் அவர்களின் பிரச்சினைகளை அடையாளம் கானுதல் மற்றும் அதற்காக தேவையான தீர்வினை வழங்குதல்.

4. விளையாட்டு வீரர்கள் வீராங்கணைகளின் உடற் தகமை மற்றும் போசாக்கு மட்டத்தினை இடைக்கிடையே அளவீடு செய்தல், உடற் தகமை பரிசோதனையினை நடாத்துதல் மற்றும் போசாக்கு குறிப்பினை வழங்குதன் மூலம் உடற் தகமை மற்றும் போசாக்கினை மேம்படுத்தல்.
5. விளையாட்டு வீரர்கள் வீராங்கணைகளின் மனோவியல் சுகாதாரத்தினை விருத்தி செய்து விளையாட்டிற்கு பொருத்தமான வெற்றிகராமான மனோ நிலமையினை எட்டுவதற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்.
6. விளையாட்டு வீரர்கள் வீராங்கணைகளின் போசாக்கு மட்டத்தினை விளையாட்டிற்கு பொருத்தமானவாறு சிறந்த மட்டத்தில் பேனுதல்.
7. விளையாட்டின் போது முதலுதவியினைப் பயன்படுத்துவது தொடர்பாக பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் வைத்திய உதவியாளர்களை அறிவுறுத்துவதற்காக கல்வி வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்.
8. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் நடாத்தப்படும் போட்டித் தொடர்களுக்காக சர்வதேச மட்டத்தில் முதலுதவி மற்றும் வைத்திய தழுவல்களை வழங்குதல்.
9. விளையாட்டு விஞ்ஞான துறையுடன் தொடர்புபடட் உள்நாட்டு வெளிநாட்டு புத்திஜீவிளுடன் ஆராய்ச்சியினை நடாத்துதல் மற்றும் அதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட அறிவின் ஊடாக நாட்டின் விளையாட்டுத்துறையினை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்லுதல்.
10. விளையாட்டு மற்றும் உடற்பயிற்சித்துறைக்கு விளையாட்டு வைத்திய வஞ்ஞானத்தின் அறிவு மற்றும் வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் ஆரோக்கியமிக்க சமூகத்தினை உருவாக்குவதற்காக பங்களிப்புக்களை செய்தல்.

## 5. பிரதான பணிகள்

- விளையாட்டில் உபாதைகளை தடுத்தல் மற்றும் முகாமைத்துவப் படுத்துவதற்காக செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- நிபுணத்துவ வைத்திய சிகிச்சியினை நடாத்துதல்.
- உடற் தகமை பரிசோதனையினை மேற்கொள்ளல்.
- மானிட செயற்சாதனை விஞ்ஞான ஆய்வுகூடம் மூலம் விளையாட்டு வீரர்களின் உயிரியல் தொழில்நுட்பம் தொடர்பாக மற்றம் இறுதயம் மற்றும் நுறையீரலில் தாக்குப் பிடிக்கும் இயலுமை தொடர்பில் மற்றும் பரிசோதனைகள் உட்பட ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.
- விளையாட்டு போசாக்கு மற்றும் விளையாட்டு மனோநிலை ஆலோசனை.
- தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டித் தொடருக்காக வைத்திய மற்றும் முதலுதவி தழுவலை மேற்கொள்ளல்.
- விளையாட்டுக் கல்வி மற்றும் ஆராய்ச்சியினை மேற்கொள்ளல்.
- களியாட்ட விளையாட்டிற்காக ஈடுபடும் நபர்களுக்காக விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி தொடர்பில் ஆலோசனை மற்றும் வைததிய வசதிகளை வழங்குதல்.
- உள்நாட்டு வெளிநாட்டு புத்திஜீவிகள் மற்றும் நிறுவனங்களுடன் விளையாட்டு மற்றும் போசாக்கு தொடர்பில் ஆராய்சிகளுக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையினை செய்கொள்ளல்.

## 6. மானிட வள பக்கத்தோற்றம்

| | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | காணப்படும் ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்கள் (மிகை) |
|---|---|---|---|
| **சிரேஷ்ட** | 10 | 06 | 04 |
| **மூன்றாம் நிலை** | 05 | 03 | 02 |
| **இடைநிலை** | 20 | 17 | 03 |
| **ஆரம்பம்** | 41 | 37 | 04 |
| **மொத்தம்** | **76** | **63** | **13** |

## 7. அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றம்

| தொட. இலக்கம் | வேலைத்திட்டத்தின் பெயர் | ஒதுக்கப் பட்ட நிதி (ரூபா.மி.) | 2024.12.31 ஆம் திகதியன்று முன்னேற்றம் (ரூபா.மி.) | நிதி முன்னேற்றம் % | பௌதீக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| 1 | கட்டடம் மற்றும் நிர்மாணிப்பு | 2.00 | 1.90 | 95 | 100 |
| 2 | இயந்திரம் மற்றும் இயந்திரோபகரண அபிவிருத்தி | 1.00 | 1.00 | 100 | 100 |
| 3 | வாகன – பழுதுபார்ப்பு - | 1.00 | 0.74 | 74 | 80 |
| 4 | இயந்திர மற்றும் இயந்திரோபகரண பொறுப்பேற்பு | 1.00 | 0.42 | 42 | 90 |
| 5 | முானிட வள அபிவிருத்தி - புணியாளர் சபை பயிற்சி | 1.00 | 0.43 | 43 | 70 |
| 6 | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 10.00 | 0.47 | 5 | 40 |
| 7 | ஏனையவை - உயரிய திறமை கொண்ட விளையாட்டு வீரர்கள் வீராங்கணைகளின் போசாக்கு தரத்தினை மேம்படுத்தும் செயற்திட்டம் | 4.00 | 1.33 | 33 | 100 |
| | ஏனையவை - விளையாட்டுப் பாடசாலை மற்றும் விளையாட்டுத் திறமை கொண்ட ஏனைய பாடசாலைகளுக்காக விளையாட்டுப் போசாக்கு மற்றும் விளையாட்டு வைத்திய விஞ்ஞானம் தொடர்பாக அறிவுறுத்தும் செயற்திட்டம். | 3.00 | 0.60 | 20 | 60 |
| | ஏனையவை - பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சியளிக்கும் செயற்திட்டம். | 5.00 | 0.31 | 6 | 60 |
| | ஏனையவை - நிறுவனத்தின் இணையத்தள பக்கத்தினை தயாரித்தல் மற்றும் ஐந்தாண்டு மூலோபாய திட்டத்தினை வகுத்தல். (2023- கட்டணத்தினை தீர்த்தல் ) | 1.00 | 0.85 | 85 | 80 |
| 8 | கட்டடம் மற்றும் நிர்மாணிப்பு - நிறுவனத்திற்காக CCTV, உட்பட ஏனைய முறைமைகளைத் தாபித்தல். | 2.00 | 1.79 | 90 | 100 |
| | | **31.00** | **9.85** | **32** | **60** |

## 8. ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்தும் செயற்சாதனை 2024.09.30 ஆம் திகதியன்று

| விபரங்கள் | ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் (ரூபா.மி.) | 2024.12.31 ஆம் திகதியன்று நிதி முன்னேற்றம் | |
|---|---|---|---|
| | | (ரூபா.மி.) | % |
| மீண்டெழும் செலவினம் | 133.12 | 112.14 | 84 |
| மூலதன செலவினம் | 31.00 | 9.85 | 32 |
| **மொத்தம்** | **164.12** | **121.99** | **74** |

## 9. 2024 ஆண்டுக்குள் பெற்றுக் கொள்ளப்பட்ட இலக்கு மற்றும் விஷேட வெற்றிகள்

- உயரிய திறமை கொண்ட விளையாட்டு வீரர்களின் போசாக்கு மட்டத்தினை மேம்படுத்தும் செய்திட்டம்.

நாட்டில் அடையாளம் காணப்பட்ட உயரிய செயற்சாதனை கொண்ட விளையாட்டு வீரர்கள் வீராங்கணைகளின் உடல் உள சுகாதாரம் மற்றும் போசாக்கு தொடர்பிலான பிரச்சினைகளை உரியவாறு அடையாளம் கண்டு அதற்கு தீர்வுகளை வழங்குவதன் மூலம் அவர்களின் திறமைகளை மேம்படுத்தி சர்வதேச மட்டத்திலான வெற்றிகளுக்காக உட்படுத்தும் நோக்குடன் இச் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

விளையாட்டு வீரர்கள் வீராங்கணைகளின் செயற்சாதனைக்காக தேவையான போசாக்கு தரத்தினை பேனுவதற்கு செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக அது தொடர்பிலான போதியளவு அறிவு கொண்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பேராசிரியர்களைக் கொண்ட குழுவின் உதவியுடன் விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளின் போசாக்கு மட்டத்தினை மதிப்பீடு செய்தல், உயரிய செயற்சாதனை மட்டங்களில் காணப்படும் விளையாட்டு வீரர்கள் வீராங்கணைகளுக்காக போசாக்கு ஆலோசானைகள், மற்றும் போசாக்கு பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதற்கான தீர்வுகளை அமுல்படுத்தும் பணிகள் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.









- **விளையாட்டுப் பாடசாலைகள் மற்றும் விளையாட்டு திறமைகள் கொண்ட ஏனைய பாடசாலைகளுக்காக விளையாட்டுப் போசாக்கு மற்றும் விளையாட்டு வைத்திய விஞ்ஞானம் தொடர்பாக அறிவுறுத்தும் செயற்திட்டம்.**

பாடசாலை விளையாட்டு வீரர்களின் போசாக்கு மட்டம் மற்றும் போசாக்கு தொடர்பிலான அறிவினை பரிசோதனை செய்தல் மற்றும் அவர்களுக்கு போசாக்கு உணவினை வழங்குதல் மற்றும் அது தொடர்பிலான அறவினை விருத்தி செய்யும் நோக்குடன் வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் விளையாட்டு வைத்திய நிறுவகம் மற்றும் இலங்கை போசாக்கு வைத்திய சங்கத்துடன் இணைந்து ஒன்பது மாகாணங்களில் இச் செய்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பாடசாலைகளுக்கு சென்று விளையாட்டு வீரர்கள் வீராங்கணைகளின் அடிப்படை போசாக்கு பகுப்பாய்வினை மேற்கொண்டு உணவு தொடர்பிலான பிரச்சினைகளைத் தீர்த்தல், விளையாட்டு வீரர்களிற்கு உணவு வழங்கும் பாடசாலைகளில் பொருத்தமானவாறு உணவுப் பட்டியல்களை மறுசீரமைத்தல், அடிப்படை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தி அவர்களின் விளையாட்டு உபாதைகளை அடயாளம் காணுதல், அச் சந்தர்பத்தில் வழங்க முடியுமான வைத்திய ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் விஷேட வைத்திய பரிசோதனைகள் அல்லது சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு அவசியமாயின் அதற்காக பிரதேச வைத்தியசாலைக்கு அனுப்பும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு அமைய ஏற்கனவே வட மத்திய மாகாணத்தில் மற்றும் மேல் மாகாணத்தில் பல வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் எஞ்சிய மாகாணங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எணடக்கப்படுகின்றன.

ஹேனேகம மத்திய மஹா வித்தியாலயம்



ஹெரணை தக்சிலா மஹாவித்தியாளலம்



போலன்னறுவை ரோயல் கல்லூரி



ரபாவ மஹாவித்தியாலயம்



1. **பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சியளிக்கும் வேலைத்திட்டம்**

மாகாண மட்டத்தில் பயிற்றுவிப்பாளர்களின் அறிவினை சமகாலப்படுத்தல், நவீன தொழில்நுட்ப அறிவினை அவர்களுக்கு பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பினை வழங்குதல், சரியான தொழில்நுட்ப அறிவினை வழங்குதல், குறைந்த செலவின தொழில்நுட்ப உகரணங்கள் மற்றும் உடல் நிறையினை பயன்படுத்தி சக்தி விருத்தி மற்றும் உடற்தகமைகள் தொடர்பிலான அறிவினை விருத்தி செய்வதற்காக நவீன தொழில்நுட்ப அறிவினைப் பயன்படுத்துவது தொடர்பாக அறிவுறுத்துவது இச் செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

இதன் போது விளையாட்டில் உபாதைகளை குறைத்தல், உபாதை முகாமைத்துவத்தினை மேற்கொள்ளல் மற்றும் திறமையினை விருத்தி செய்வதற்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் ஒன்பது மாகாணங்களுக்காக பிரயோக கோட்பாட்டு வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்.

**வட மத்திய மாகாணம்**






2. **மானிட செயறசாதனை விஞ்ஞான ஆய்வுகூடத்தினை தாபித்தல்.**

நாட்டின் விளையாட்டு வீரர்களிற்கு சர்வதேசத்தினை வெற்றிகொள்ளும் போது விளையாட்டு விஞ்ஞானம், விளையாட்டு வைத்திய விஞ்ஞானம், நவீன தொழில்நுட்பம் மற்றும் இயந்திரோபகரண விஞ்ஞான பயன்பாட்டுடன் நாடுகளில் விளையாட்டு வீரர்கள் வீராங்கணைகளுடன் போட்டியிட வேண்டி ஏற்படும். இதன் போது விளையாட்டுத்துறையின் குறைப் பயன்பாடாக நாட்டின் விளையாட்டு வீரர்கள் வீராங்கணைகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இக் திறனைப் பயன்படுத்தப்படாமையினைப் போன்று பயிறசியிற்காக நவீன தொழில்நுட்ப முறை, நவீன தொழில்நுட்ப பொறிமுறையினைப் பயன்படுத்தப்படாமை, விளையாட்டுத்துறையின் விபத்தினை தடுப்பதற்கு வாய்ப்புக்கள் இன்மை மற்றும் புணர்வாழ்விற்குப் பின்னர் துரித கதியிர் விளையாட்டிற்காக ஈடுபடுத்தப்படவுள்ள இயலுமைகள் இழப்பது நாட்டின் விளையாட்டுத்துறைக்கு பாதப்புமிக்க தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான நிலமையில் அனைத்து வசதிகளும் கொண்ட மானிட செயற்சாதனை விஞ்ஞான அய்வுகூடத்தினை நாட்டில் தாபித்து மேற்கூறப்பட்ட பாதிப்பு மிக்க நிலமையினை நீக்குவதற்கு விளையாட்டு வைத்திய நிறுவகத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.







3. **தேசிய மற்றும் சர்வதேச போட்டித் தொடர்களுக்காக வைத்திய தழுவலை வழங்குதல்**

தேசிய விளையாட்டு விழா உட்பட பிரதான விளையாட்டுப் போட்டித் தொடர்களுக்காக (தேசிய அல்லது சர்வதேச) வைத்திய தழுவலை வழங்குதல் விளையாட்டு வைத்திய நிறுவகத்தின் பிரதான சேவையாகும். இவ் ஆண்டில் ஏற்கனவே தேசிய மட்டத்தில் 166 போட்டித் தொடர்கள் மற்றும் 28 சர்வதேச போட்டித் தொடர்கள் தழுவப்பட்டுள்ளன.

வைத்திய, தாதி, இயன்மருத்துவர் மற்றும் மசாஜ் உட்பட முழுமையான முதலுதவி குழுக்கள் மூலம் இவ் அனைத்து வைத்திய தழுவல்களும் மேற்கொள்ளப்படுகின்றன.








- நிறுவனத்திற்கு வருகைதரும் விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளுக்காக அவசர சிகிச்சை மற்றும் வெளிநோயாளர் சிகிச்தை, இராசாயணகூட சிகிச்சை, இயன்மருத்துவ சிகிச்சை மற்றும் மசாஜ் சிகிச்சை, விளையாட்டு போசாக்கு மற்றும் விளையாட்டு மனோவியல் ஆலோசனைகள் உட்பட பல சேவைகள் வழங்கப்படுகின்றன.

இதற்கு அமைய இவ் ஆண்டில் கீழ் குறிப்பிடப்பட்டவாறு சேவைகள் வழங்கப்பட்டன.

| அவசர சிகிச்சை மற்றும் வெளிநோயாளர் பிரிவு | இரசாயணகூடப் பிரிவு | புணருத்தாபன பிரிவு | | விளையாட்டு போசாக்கு | உடல் தகமை பரிசோதனை | வைத்திய தழுவல் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | இயன் மருத்துவம் | மசாஜ் | | | உள்நாடு | வெளிநாடு |
| 8626 | 629 | 4552 | 3946 | 1917 | 1048 | 166 | 28 |

## 10. எதிர்கால இலக்குகள் 2025-2028

- மானிட செயற்சாதனை விஞ்ஞான ஆய்வுகூடத்தினை தாபிப்பதன் மூலம் அதன் அனைத்து வசதிகளும் நாட்டின் விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளுக்கு வழங்குதல் மற்றும் இயன் முருத்துவப் பிரிவிற்காக பெற்றுக் கொள்ளப்படும் புணர்வாழ்வு மற்றும் உயிரியல் பெறிமுறை மற்றும் இயந்திரோபகரணங்களைப் பயன்படுத்தி விளையாட்டுத் துறையின் நவீன தொழில்நுட்பத்தினை நாட்டின் விளையாட்டுத்துறையினை கட்டியெழுப்புவதற்காகப் பயன்படுத்தல்.

- விளையாட்டு கடினமான உடற்பயிற்சிக்குப் பின்னர் துரிதகதியல் வழமை நிலமைக்கு மாற்றியமைப்பதற்காக விளையாட்டு வைத்திய நிறுவனத்தில் வழமைக் நிலைக்கு மாற்றும் அலகு மற்றும் ஹைடுரோதெரபி அலகினை தாபித்தல்.

- வடமேல் பல்கலைக்கழகம், இலங்கை போசகர்கு வியலாளர்களின் சங்கம், கெதலாவல பாதுகாப்பு பல்கலைக்கழத்துடன் புரிந்துணர்வினை செய்து கொண்டு ஏற்கனவே உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுள்ளதுடன் போதனை, மொரடுவ மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை உட்பட விளையாட்டுத்துறைக்கு உரிய புத்திஜீவிகளைக் கொண்ட தாபனத்துடன் இணைந்து புரிந்துணர்வு உடன்படிக்கையினை செய்து கொள்வதன் மூலம் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி தொடர்பான ஆராய்ச்சினை மேற்கொள்ளல், அறிவு பறிமாற்றல்களை மேற்கொள்ளல் மற்றும் எதிர்காலத்தில் நாட்டின் விளையாட்டுத்துறையினை முன்னேற்றுதல்.

- விளையாட்டு மசாஸ் பாடநெறி NVQ 4 மட்டம் தொடக்கம் NVQ 5 வரை சமகாலப்படுத் துதல் மற்றும் விளையாட்டு மசாஜ் பயற்றுவிப்புக்களை மேற்கொள்ளல்.

- விளையாட்டு வைத்திய நிறுவகனத்தினை வருமானம் ஈட்டும் நிறுவனமாக மாற்றியமைத்தல்.

- 

## சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு

# 2024
# முன்னேற்ற அறிக்கை

## சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு

### 01.அறிமுகம்

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு உயிரோட்டமான பங்களிப்பை வழங்கக்கூடிய பெருமைமிக்க இளைஞர்களை உருவாக்கும் இலக்குடன் சிறிய தொழில் முயற்சிகள் மேம்பாட்டுப் பிரிவு செயற்படுவதுடன், இளைஞர் சமூகத்தில் தொழில் முயற்சித் திறன்களை விருத்திசெய்து இலங்கையில் தொழில் முயற்சிக் கலாசாரமொன்றை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள முன்னணி அரச நிறுவனமாக நடவடிக்கை மேற்கொள்கின்றது.

1982 ஆம் ஆண்டில் இளைஞர் விவகாரங்கள் மற்றும் தொழில் வாய்ப்புக்கள் அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பிரிவு தற்போது சிறிய தொழில் முயற்சிகள் மற்றும் தொழில் முயற்சிகள் மேம்பாட்டுத் துறையில் சுமார் நான்கு தசாப்த கால அனுபவத்துடன் செயற்பட்டு வருகின்றது. மேலும், இந்த நிறுவனத்தின் சேவைகள் நாட்டின் அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கியவாறு விரிவுபடுத்தப்பட்டுள்ளதுடன், இப்பிரிவில் 1,049 நிறுவனம்சார் மற்றும் வெளிக் களப் பணியாளர்கள் உள்ளனர்.

சிறிய தொழில் முயற்சிகள் மேம்பாட்டுப் பிரிவின் மாவட்ட அலுவலகங்கள் மாவட்டச் செயலக வளவில் அமைக்கப்பட்டுள்ளதுடன், அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைப்புச்செய்யப்பட்டு, கீழ் மட்டம் வரை தொழில் முயற்சிகள் அபிவிருத்திச் சேவைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. மேலும், தொழில் முயற்சிகள் மேம்பாட்டுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களுடனும் இணைந்து ஒருங்கிணைந்த அணுகுமுறையின் மூலம் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மாவட்ட அலுவலகங்களின் செயற்பாடுகள் இல. 420, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு 07 இல் அமைந்துள்ள சிறிய தொழில் முயற்சிகள் மேம்பாட்டுப் பிரிவின் தலைமை அலுவலகத்தினால் கண்காணிக்கப்படுவதுடன், அனைத்து மாவட்டங்களின் கண்காணிப்பு அலுவலர்கள் தமது பிரதேச செயலகங்களால் மேற்கொள்ளப்படும் தொழில் முயற்சிகள் அபிவிருத்திச் சேவைகள் கண்காணிக்கப்படுகின்றன.

### 02.தூர நோக்கு

நிலையான அபிவிருத்திக்கான தொழில் முயற்சிகள் மற்றும் சிறிய வர்த்தக மேம்பாடு

### 03.செயற்பணி

இலங்கையின் தேசிய அபிவிருத்திக்கு உச்சளவிலான பங்களிப்பை வழங்குவதற்காக,

- வேலையற்ற இளைஞர்களிடம் தொழில் முயற்சித் திறன்களை வளர்த்தல்
- இளைஞர் யுவதிகளை வணிகத் துறையில் ஈடுபடுத்தல்
- வணிகங்களின் திறன் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல்
- வணிக அபிவிருத்தியுடன் தொடர்புடைய உதவி சேவைகளை வழங்குதல்

### 04.நோக்கங்கள்

- இளைஞர் யுவதிகளிடையே தொழில் முயற்சித் திறன்களை வளர்ப்பதன் மூலம் உள்ளூர் தொழில் முயற்சிக் கலாசாரத்தை உருவாக்குதல்.
- புதிய வேலை வாய்ப்புகளை கண்டறிந்து வர்த்தகங்களை ஆரம்பிப்பதற்கு வழிகாட்டுவதன் மூலம் இளைஞர் யுவதிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.
- இளைஞர்களின் தொழில் முயற்சிகளின் வினைத்திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதன் மூலம் இளைஞர் யுவதிகளுக்கு

அதிகளவிலான வேலை வாய்ப்புகளை வழங்குதல் மற்றும் வருமானத்தை அதிகரித்தல்.
- ○ நுண் மற்றும் சிறிய வணிகங்களின் உற்பத்தித்திறன் மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்கு முனைப்பான பங்களிப்பை வழங்குதல்.

**05.பிரதான பணிகள்**

சிறிய தொழில் முயற்சிகள் மேம்பாட்டுப் பிரிவின் பணிகளாவன,

- ○ வணிகங்களை ஆரம்பிப்பதற்கு நபர்களை ஊக்குவித்தல் மற்றும் வணிகங்களை ஆரம்பிப்பதற்கு உதவுதல்.
- ○ தொழில் முயற்சியாளர்கள் தங்கள் தொழில்களை நடாத்தும்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தலையீட்டை மேற்கொள்வதன் மூலம் நிலவுகின்ற வணிகங்களை மேம்படுத்துதல்.

இந்தப் பணிகளை மேலும் முறையாக மேற்கொள்வதற்காக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களுக்கான பரிந்துரைக்கப்பட்ட தேசியக் கொள்கை கட்டமைப்பிற்கு இணங்க கீழ் குறிப்பிடப்படும் துறைகள் ஊடாக நிறுவனத்தின் பணிகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

- ○ தொழில் முற்சிகள் மற்றும் திறன் மேம்பாடு
- ○ சந்தைப்படுத்தல் வசதிகளை ஊக்குவித்தல்

| சேவை மட்டம் | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ள ஆளணி | வெற்றிடம் ∴.மேலதிகம் |
|---|---|---|---|
| சிரேட்ட | 37 | 34 | 3 |
| மூன்றாம் நிலை | 151 | 106 | 45 |
| இரண்டாம் நிலை | 920 | 860 | 60 |
| ஆரம்ப நிலை | 70 | 49 | 21 |
| **மொத்தம்** | 1,178 | 1,049 | 129 |

**06.அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்**

| இல. | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி (மி.ரூ.) | 2024.12.31 ஆம் திகதியன்று நிதிசார் முன்னேற்றம் (மி.ரூ.) | நிதிசார் முன்னேற்றம் % | பௌதிக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| 01 | இளைஞர் வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டம் | 190.00 | 140.666 | 74 | |

*இளைஞர் வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளுடன் தொடர்புடைய வகையில் ஒவ்வொரு பிரிவுகளின் முன்னேற்றம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| பிரிவு | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி (மி.ரூ.) | 2024.12.31 ஆம் திகதியன்று நிதிசார் முன்னேற்றம் (மி.ரூ.) | நிதிசார் முன்னேற்றம் % | பௌதிக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| தொழில் முற்சிகள் மேம்பாட்டுப் பிரிவு | 39.74 | 42.71 | 107 | 66 |
| தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கப் பிரிவு | 34.69 | 30.91 | 89 | 111 |
| சந்தைப்படுத்தல் மேம்பாட்டுப் பிரிவு | 77.50 | 44.82 | 58 | 160 |
| நிதி மற்றும் உதவி சேவைகள் பிரிவு | 17.76 | 14.14 | 80 | 36 |
| வர்த்தக ஆலோசனை பிரிவு | 7.39 | 1.79 | 24 | 23 |
| ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவு | 12.91 | 6.28 | 49 | 19 |
| **மொத்தம்** | **190.00** | **140.66** | **74** | **79** |

***** இளைஞர் வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 350 மில்லியன் ரூபாவில் வருடாந்த தொழில் முயற்சிகள் மேம்பாட்டுச் செயற்பாடுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட 190 மில்லியன் ரூபாவுடன் தொடர்புடைய முன்னேற்றம் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஹுநளநடழிஅநவெ யுளளளைவயஉெந திட்டத்திற்காக முன்மொழியப்பட்டுள்ள 160 மில்லியன் ரூபாவுக்காக இதுவரை ஹேு அங்கீகாரம் கிடைக்காமையின் காரணமாக)

## 08.ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்திக்கொள்ளல் தொடர்பான செயலாற்றுகை (2024.12.31 திகதியன்று)

| விபரம் | நிதி ஒதுக்கீடு (ரூ.) | 2024.12.31 திகதியன்று நிதிசார் முன்னேற்றம் | |
|---|---|---|---|
| | | (மி.ரூ.) | % |
| மீண்டெழும் செலவினம் | 856.825 | 768.67 | 89.71 |
| மூலதனச் செலவினம் | 480.000 | 230.4 | 48 |
| **மொத்தம்** | 1336.825 | 966.361 | 72 |

## 09. 2024 ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட விசேட வெற்றிகள் (புகைப்படங்களுடன்)

- ❖ இளைஞர் வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டம் ஊடாக அடைந்துகொள்வதற்கு முடியுமாகிய பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகளின் செயலாற்றுகையை கீழுள்ளவாறு குறிப்பிட முடியும்.

| இல. | பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டி | இலக்கு | இலக்கின் செயலாற்றுகை | % |
|---|---|---|---|---|
| 01 | புதிய வணிகங்களை ஆரம்பித்தல் | 14,000 | 12,272 | 87 |
| 02 | நிலவுகின்ற வணிகங்களை மேம்படுத்தல் | 14,000 | 10,095 | 72 |

❖ இந்த இலக்குகள் செயலாற்றுகையின்போது நாடு பூராவும் பல தொழில் முயற்சிகள் மேம்பாட்டுச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அவற்றில் தெரிவு செய்யப்பட்ட சில செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சில புதிய வணிகங்கள்














**<u>விழிப்புணர்வூட்டல் மற்றும் தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள்</u>**

2024 ஆம் ஆண்டில் அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளும் உள்ளடக்கப்படும் வகையில் 14,000 புதிய வணிகங்கள் மற்றும் நிலவுகின்ற வணிகங்களை அபிவிருத்தி செய்வதற்கான இலக்குகள் நிர்ணயித்துக்கொள்ளப்பட்டன. அதற்கமைய, அந்த புதிய தொழில் முயற்சியாளர்களை இனங்கண்டுகொள்வதற்காக பல்வேறு முறைகள் ஊடாக தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள், சமூக ஊடகங்கள் ஊடாக அறிவுறுத்தல்கள் மற்றும் களப் பணிகளில் ஈடுபடுகின்ற அலுவலர்கள் ஊடாக விழிப்புணர்வூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த 3 முறைகள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட வழிப்புணர்வூட்டல்கள் ஊடாக 2024.12.31 ஆம் திகதியன்று விழிப்புணர்வூட்டப்பட்டவர்களின் எண்ணிக்கை 141,650 ஆகும்.

இந்த வழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகளில் பங்குபற்றியவர்களுக்காக வணிக முயற்சிகளுக்கு ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டதுடன் அவை இணையவழி ஊடாகவும் நேரடியாகவும் நடாத்தப்பட்டன.

| நிகழ்ச்சித் திட்டம் | பங்கேற்பு | செலவு (ரூபா) |
|---|---|---|
| வணிக முயற்சிகளுக்கு ஊக்குவித்தல் (இணையவழி) | 1,670 | 20,519.00 |
| வணிக முயற்சிகளுக்கு ஊக்குவித்தல் (நேரடி) | 22,879 | 2,566,739.10 |
| விசேட கருத்திட்டங்களை இலக்காகக்கொண்டு நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் (நேரடி) | 2,360 | 260,187.00 |
| **மொத்தம்** | **26,909** | **2,847,445.10** |

தற்போதைய பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, உற்பத்திப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு வணிக முயற்சிகளை ஆரம்பித்தல் மிகவும் முக்கியமான விடயமென்பதனால் இந்தத் திட்டங்களில் பங்கேற்றவர்களுக்கு வணிகத்தை ஆரம்பிப்பதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. மேலும், சிறிய வணிக தொழில் முயற்சிகள் மேம்பாட்டுப் பிரிவின் பங்களிப்பு மற்றும் தற்போது ஆரம்பிப்பதற்கு ஏற்ற தொழில் முயற்சிகள் குறித்தும் பங்கேற்பாளர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.










**ஞு வகுப்பு - தொழில் முயற்சிகளுடன் தொடர்புடைய விசேட துறைகள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற இணையவழி விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டம்**

நாட்டில் நிலவுகின்ற பிரச்சினை நிலைமைகளின் முன்னே சவால்களை வெற்றிகொள்வதற்காக தொழில் முயற்சியாளர்களுக்கு தேவையான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை பெற்றுக்கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டமொன்றாக ஞு வகுப்பை அறிமுகப்படுத்துவதற்கு முடியும். அதனூடாக தொழில் முயற்சியாளர்களுக்கு தேவையான அறிவை இணையவழி ஊடாகப் பெற்றுக்கொடுப்பதற்கு 2024 ஆம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது வாரத்தில் 5 நாட்களில் மு.ப. 10.00 - நண்பகல் 12.00 வரை நடாத்தப்படும் செயலமர்வொன்றாக நடாத்தப்பட்டது.

| 2024.01.01 முதல் 2024.12.31 வரை முன்னேற்றம் | |
|---|---|
| நடாத்தப்பட்ட இணையவழி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | 219 |
| **மொத்தப் பங்கேற்பு** | **8,400** |

இணையவழி நிகழ்ச்சித் திட்டத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட அறிவித்தல்கள்


















- **தொழில் முயற்சிகள் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் - நுவெசநிசநநெரசளாநி னுநளநடழிஅநவெ வுசயமைநைபெ ீசழபசயஅ (நுனுீ)**

தொழில் முயற்சிகள் மேம்பாடு தொடர்பாக எமது நிறுவனத்தினால் நடாத்தப்படும் முன்னணி திட்டங்களில் ஒன்றாக இதை அறிமுகப்படுத்துவதற்கு முடியும். 1989 ஆம் ஆண்டு முதல் எமது பிரிவு இந்த திட்டத்தை நடாத்தி வருவதுடன், ஆரம்பத்தில் இது 21 நாள் வதிவிட நிகழ்ச்சித் திட்டமாக நடாத்தப்பட்டது. ஆனாலும் தற்போது தொழில் வர்த்தகர்களின் வேலைப்பளு மற்றும் தொடர்ந்து 21 நாட்கள் பங்கேற்பதில் சிரமம் காரணமாக இரண்டு கட்டமாக நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டது. அதற்கிணங்க, முதல் 12 நாட்களை தனிநபர் மேம்பாடு, தொழில்முயற்சிகள் மேம்பாடு மற்றும் வணிக முகாமைத்துவம் தொடர்பாகவும், வணிகத் திட்டங்களை தயாரிப்பதற்கான 04 நாட்களையும் உள்ளடக்கியதாக நிகழ்ச்சித் திட்டம் திருத்தப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| நேரடியாக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 19 |
| மொத்தப் பங்கேற்பு | 564 |
| **செலவு (ரூபா)** | **23,647,682.00** |















**பிராந்திய மற்றும் மாவட்ட மட்டத்திலான விற்பனைக் கண்காட்சிகள்**

சிறிய அளவிலான உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்குத் தேவையான உதவி மாவட்ட மட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள குடீ ீயபநள ஊடாக மேற்கொள்ளப்பட்டதுடன் அவர்களுடைய உற்பத்திக்கான இலச்சினை (டுழபழ), லேபிள்கள், ஏளைவைவைபெ ஊயசன நிர்மாணித்துக்கொள்வதற்குத் தேவையான உதவியும் சந்தைப்படுத்தல் பிரிவினூடாக மேற்கொள்ளப்படும். இது தவிர வாடிக்கையாளர் உதவி போன்ற நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக வெற்றிகரமான சந்தைப்படுத்துனராக நடவடிக்கை மேற்கொள்வதற்குத் தேவையான அறிவையும் தொழில் முயற்சியாளர்களிடத்தில் ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 2024.12.31 ஆம் திகதியன்று விற்பனைக் கண்காட்சியில் பங்குபறறிய தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை | 36,714 |
| **செலவு (ரூபா)** | 34,052,888.15 |












## 10. எதிர்கால இலக்குகள் 2025 - 2028

- புதிய போக்குகள் மற்றும் புதிய வணிக யோசனைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் இளைஞர் சமூகத்தை தொழில் முயற்சிகளுக்காக ஊக்கப்படுத்துதல்.
- தொழில் முயற்சியாளர்களிடத்தில் தலைமைத்துவம், மென் திறன்கள் மேம்பாடு ஆகியவற்றின் மூலம் வணிக உலகின் தலைவர்களை உருவாக்குதல்.
- சிறிய தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகள் பற்றிய தகவல்களைக் கொண்ட இலத்திரனியல் பெரயப் பட்டியல்களைத் தயாரித்தல்.
- இணையவழி சந்தைப்படுத்தலை (ஆன்லைன் மார்க்கெட்டிங்) ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் உறவுகளை மேம்படுத்துதல்.
- பிராந்திய, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலான சந்தைகள் மற்றும் கண்காட்சிகள் மூலம் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்தல்.
- தயாரிப்புகளின் தரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான சேவைகளை வழங்குதல் (சான்றிதழ், புதிய தொழில்நுட்பம், பொதியிடல்....)
- நிதி வசதிகளை வழங்குதல், நிதிசார் கல்வியறிவு மற்றும் ஒழுக்கத்தை ஏற்படுத்தல்.
- ணு வகுப்பு மூலம் இணையவழி நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்ச்சியாக நடாத்துதல்
- உள்ளூர் மூலப்பொருட்கள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆரம்பிக்க முடியுமான சிறப்புத் திட்டங்களுக்கு இளைஞர்களை வழிநடாத்துதல்.
- வணிகம் சார்ந்த சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
- வணிகங்களுடன் தொடர்புடைய துறைகளில் கணக்கெடுப்புக்களை மேற்கொள்ளல்.
- அபிவிருத்தி உதவி கருத்திட்டங்களின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்முயற்சியாளர்கள் மற்றும் கருத்திட்டங்களுக்கு மூலதனச் சொத்துகளைப் பெற்றுக்கொள்ளவதற்கு உதவுதல்.
- அலுவலர்களின் திறன் மேம்பாடு.
- நிறுவனத்தால் வழங்கப்படும் சேவைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.